# திலக மகரிஷி




வ.உ. சிதம்பரம்பிள்ளை

பதிப்பாசிரியர்

மா.ரா.அரசு

# திலக மகரிஷி

(பாரத ஜோதி ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு)

வ. உ. சிதம்பரம்பிள்ளை

*பதிப்பாசிரியர்*

மா. ரா. அரசு

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்

*G-4*, போகன்வில்லா குடியிருப்பு,

*K*-பிளாக், ஆறாம் நிழற்சாலை,

அண்ணாநகர் கிழக்கு, சென்னை - *600 102*

# நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திலக மகரிஷி |
| பொருள் | | வாழ்க்கை வரலாறு |
| ஆசிரியர் | | வ.உ. சிதம்பரம்பிள்ளை |
| பதிப்பாசிரியர் | | மா.ரா. அரசு<br>G-4, போகன்வில்லா குடியிருப்பு,<br>K-பிளாக், ஆறாம் நிழற்சாலை,<br>அண்ணாநகர் கிழக்கு,<br>சென்னை - 600 102<br>தொலைபேசி : 044-26269962 |
| முதற் பதிப்பு | | டிசம்பர் 2009 |
| உரிமை | : | பதிப்பாசிரியருக்கு |
| மொழி | | தமிழ் |
| நூலின் அளவு | | டெம்மி 1 x 8 |
| தாள் | | 18.6 கி.கி. மேப்லித்தோ |
| அச்செழுத்து | | 12 புள்ளிகள் |
| பக்கங்கள் | | 132 |
| விலை | | ரூ. 100 |
| அச்சிட்டோர் | : | ஆர்.ஜி. பிரிண்டர்ஸ்,<br>சின்னக்கடைத்தெரு,<br>திருச்சிராப்பள்ளி – 620 002<br>தொலைபேசி : 0431-2700417 |

வ. உ. சிதம்பரனாரின் 'திலக மகரிஷி'

ஒளிப்படச் சிற்பி

இனியவர் - இளகிய நெஞ்சர்

திரு.தேவமணி ரஃபேலின்

ஈடற்ற தொண்டிற்கும்

இணையற்ற அன்பிற்கும்

– **மா.ரா. அரசு**

# ‘கண்டறியாதன கண்டேன்’

வ.உ. சிதம்பரனார் ஆய்வுச் சிந்தனை என்னுள் முகிழ்த்த நாள் முதல் மனம் திட்டமிடுதலில் ஆழ்ந்தது. அவருடைய தமிழ்ப்பணிகள்பற்றிய ஆய்வினை விரிவாக நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் நிலைத்தது. வ.உ.சி.யின் படைப்புகள் அனைத்தையும் தேடித் தொகுத்தல் முதல் பணியாகக் கொள்ளப்பெற்றது.

வ.உ.சி.யின் படைப்புகளுள் பெயரளவில் மட்டுமே அறியப் பெற்றவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, அவர் எழுதிய திலகரைப்பற்றிய கட்டுரைத் தொடர். இலங்கை இதழான வீரகேசரியில், ‘பாரதஜோதி ஸ்ரீதிலக மகரிஷியின் வரலாறு’ என்ற தலைப்பில் வெளியானது அந்தத் தொடர்.

திலகர் வரலாற்றை வ.உ.சி. தொடராக எழுதியுள்ளார் என்பதும், அத்தொடர் ‘வீரகேசரி’யில் தொடர்ந்து வெளி வந்துள்ளது என்பதும் ஒரு செவிவழிச் செய்தியாக வ. உ. சி. ஆய்வு வட்டத்தில் உலவி வந்தது. அதுவரையில் அதைப் பார்த்ததாகவோ, அதுபற்றிய பிற விவரங்களை அறிந்த தாகவோ ஆய்வாளர் எவரும் எதையும் பதிவு செய்யவில்லை.

வ. உ. சி. யின் படைப்புகளை ஆய்வு செய்யும் விருப்பத் தோடு இருந்த எனக்கு அதைக் கண்டறியும் ஆர்வம் எழுந்தது. அதுவரையில் எவருடைய பார்வைக்கும் கிடைக்காத வ. உ. சி. எழுதிய திலகர் வரலாற்றை முயன்று கண்டறிந்து பதிவு செய்யவேண்டும் என்ற வேட்கை நிறைந்தது.

தேடல் முயற்சி தொடங்கியது. என் பணிகள் அனைத் திலும் உடன் இருந்து உதவும் இனிய நண்பர் திருமிகு செ.கி. கோவிந்தராசுவிடம் செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். அவர் அப்போது இலங்கைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

இலங்கையில் அவருக்கு நண்பர்கள் இருந்தனர். அவர்களிடம் நேரிலேயே விவரம் கூறி, வ.உ.சி.யின் வீரகேசரி கட்டுரைகளைப் பெற முயன்றார். பழைய வீரகேசரி இதழ்களைப் பெறுவது அவர்கள் நினைத்தது போன்று எளிதாக இல்லை. என் - எங்கள் முதல் முயற்சி பயனளிக்க வில்லை.

காரைக்குடி அருகில் உள்ள கோட்டையூரில் மிகப் பெரியதும் அரியதுமான நூலகம் ஒன்றை உருவாக்கி, ஆய்வாளர் பலருக்கும் பயன்படுமாறு நடத்தி வந்தவர் திருமிகு ரோஜா முத்தையா. என்னுடைய வ.உ.சி. ஆய்விற்கும் இதழியல் தேடல்களுக்கும் பெருமளவில் துணைநின்ற பெருந்தகை அவர். திலக மகரிஷியின் வரலாற்றைத் தேடும் முயற்சியிலும் எனக்கு உதவ முன் வந்தார். வீரகேசரி இதழ் தொடங்கப்பெற்ற காலத்தில் அவ்விதழோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தார் அப்போது காரைக்குடியில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மூலம் வீரகேசரியின் தொடக்க ஆண்டுகளுக்கு உரிய இதழ்களைப் பெற்றுத் தருவதற்குப் பெரிதும் முயன்றார். ஆனால், அந்த முயற்சியும் ஈடேறவில்லை. எண்பதுகளின் முற்பகுதியில் இந்த முயற்சிகள் நடந்தன.

எண்ணியதை அடைய இயலவில்லையே என்ற கவலையும் வருத்தமும் நெஞ்சில் நிலைத்தன என்றாலும், முயற்சி தொடர்ந்தது. என்னுடைய இயலாமையைக் கண் மருத்துவரும் தொல்லியல் அறிஞருமான என் அண்ணன் இரா. கலைக் கோவனிடம் பகிர்ந்து கொண்டேன். 'கவலைப்பட வேண்டிய தில்லை; தொடர்ந்து தேடினால் எப்படியும் கிடைக்கும். இலங்கையில் பலரை அறிந்த என் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் மூலம் முயன்றால் பெற இயலும் என்று நம்புகிறேன்' என்று கூறி, அவருடைய நண்பரிடம் என்னை ஆற்றுப் படுத்தினார். நான் சென்று அவரைக் காணும் முன்பாகவே தொலைபேசியில் அவரிடம் அனைத்து விவரங்களையும் கூறி, எப்படியும் பெற்றுத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நான், வ. உ. சி. யின் கட்டுரைத் தொடர்பற்றி அவரிடம் பேசினேன்; என்னிடமிருந்த அது தொடர்பான- தேடுவதற்கு

உதவும் குறிப்புகளை அவரிடம் கொடுத்தேன். பெரும்பாலும் கிடைக்கும் என்று அந்நண்பர் நம்பிக்கை ஊட்டினார்.

காலம் நெகிழ்ந்தது; ஆண்டுகள் சில கரைந்தன. 1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு நாள் அந்த நண்பர் என் இல்லம் வந்தார். தன்னிடம் இருந்த காகிதக் கட்டை என்னிடம் தந்து பிரித்துப் பார்க்கச் சொன்னார். அவர் சொன்னதைச் செய்தேன். அதனுள் வ. உ. சி. இருந்தார் - வ. உ. சி. யின் திலக மகரிஷி தொடரின் சில பகுதிகள் இருந்தன. வியப்பும் மலைப்பும் என்னை ஆட்கொண்டன. செய்வதறியாத நிலை. என்னை மறந்தேன். நெடிய கனவின் ஒரு துளி நனவாகக் கண்முன்னே..... பேச்சு வரவில்லை; அவர்தான் பேசினார். ' எஞ்சியவற்றையும் தேடி எடுத்துவிடலாம்; உங்கள் ஆய்வில் பதிவு செய்து விடுவோம்' என்றார்.

வீரகேசரி இதழில் பத்து வாரங்கள் வெளிவந்த திலக மகரிஷி தொடரின் பக்கங்கள் என் கரங்களில் படபடத்தன. என் மனமும் கூட அப்படித்தான் இருந்தது. அரிய வரலாற்று ஆவணம்; கிடைத்தற்கரிய தொடரின் ஒரு பகுதி. எஞ்சியதையும் பெற்று ஆய்வில் வெளிப்படுத்த வேண்டும் என்ற பேரவா என்னுள் முழுமையாக நிறைந்தது.

2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒருநாள், கையில் காகிதக்கற்றையோடு மீண்டும் அந்த நண்பர் என் முன்னே தோன்றினார். இம்முறை ஏழு வாரங்களுக்கு உரிய இதழ்ப் பக்கங்கள் கிடைத்தன.

"பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே இவற்றை நண்பர்கள் தேடியும் இவ்வளவுதான் பெறமுடிந்தது. காலம் கனிந்தால் விடுபட்ட பகுதிகளையும் பெறமுயலலாம், அது வரையில் பொறுத்திருப்பது தவிர, வேறு வழியில்லை" என்றார் நண்பர். தலைப்பை மட்டுமே அறிந்திருந்த எனக்கு, வஉசியின் திலகமகரிஷி தொடரின் பதினேழு வாரங்களுக்கான நகலைப் பெற்றுத்தந்த அந்த நண்பரை எப்படிப் பாராட்டுவது? எப்படி அவருக்கு நன்றி சொல்லுவது? தெரியவில்லை. எந்தவிதமான விளம்பரத்தையும் விரும்பாத அந்த மதிப்பிற்குரிய நண்பரின் பெயர் திருமிகு தேவமணி ரஃபேல். மிகச் சிறந்த

ஒளிப்படக் கலைஞரும் கலை ஆர்வலருமான அவர் தமிழ கத்துக் கோவில்களின் கலை உன்னதங்களைத் துல்லிய மான கோணங்களில் ஒளிப்படங்களாகத் தொகுத்து உயரிய - மேன்மையான தொகுப்பாக வெளியிட்டுள்ளார். மிகப் பெரிய வரவேற்பைப் பெற்ற அத்தொகுப்பு அவருடைய உழைப்பை வரலாற்றில் பதிவு செய்ய வல்லது.

எனக்கு கிடைத்த இதழ்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 28.5.1933 | 8.10.1933 | 1.7.1934 |
| 11.6.1933 | 12.11.1933 | 15.7.1934 |
| 2.7.1933 | 11.3.1934 | 22.7.1934 |
| 16.7.1933 | 6.5.1934 | 5.8.1934 |
| 30.7.1933 | 3.6.1934 | 14.10.1934 |
| 24.9.1933 | 24.6.1934 | |

1933 இல் எட்டு வாரங்களுக்கு உரிய பகுதிகளும் 1934 இல் ஒன்பது வாரங்களுக்கு உரிய பகுதிகளும் கிடைத்துள்ளன.

திலகரின் பிறப்பு முதல் 1919 இல் இலண்டன் சென்று அங்குப் பல்வேறு பணிகளில் தம்மை அவர் ஈடுபடுத்திக் கொண்டது வரையிலான செய்திகள் அடங்கிய பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன.

ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு உரிய கட்டுரைப் பகுதிகளே கிடைக்காமல் போயிருக்கக்கூடும். 1 . 8 . 1920 இல் திலகர் காலமாகிறார். ஏறக்குறைய ஓராண்டுக்குரிய திலகர் வாழ்க்கைச் செய்திகளே விடுபட்டிருக்கலாம்.

'வ. உ. சிதம்பரனாரின் தமிழ்ப்பணிகள்' என்ற தலைப்பில் சூன் 2002 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற என்னுடைய ஆய்வேட்டில் வ. உ. சி. எழுதிய - அதுவரையில் பெயரளவில் மட்டுமே அறியப் பெற்றிருந்த திலகர் வரலாற்றுக் கட்டுரைத் தொடர்பற்றிய

விரிவான செய்திகள் முதன்முறையாக உரிய சான்றுகளுடன் என்னால் பதிவு செய்யப்பட்டன.'வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் ஏறக்குறைய இருபது பக்கங்களில் (ப. 75 - ப. 95) அந்த ஆய்வு அமைந்தது. ஆய்வேட்டின் இறுதியில், திலக மகரிஷியின்- வீரகேசரி இதழின் இருபக்கங்களின் நகல்கள் ( 28 . 5 . 1933, 11 . 3 . 1934) பின்னிணைப்பாகத் தரப்பெற்றுள்ளன.

சாகித்திய அக்காதெமிக்காக - இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வ.உ.சிதம்பரனார் பற்றி எழுத நேர்ந்தபோது, 'வ. உ. சிதம்பரனார்'என்ற தலைப்பில் அமைந்த அந்த நூலில் ப.39 முதல் 47 வரையில் திலக மகரிஷி பற்றிய செய்திகள் இடம் பெற்றன. அந்நூல் 2005 இல் வெளிவந்தது.

தற்போது, வ. உ. சி. எழுதிய திலகர் வரலாறு(எனக்குக் கிடைத்த வரையில் - பதினேழு வாரங்களுக்கு உரிய பகுதிகள் மட்டும்) நூலாக வெளிவருகின்றது.

ஓட்டத்துக்கு இடையே தடைகளா அன்றி தடைகளுக்கு இடையே ஓட்டமா என்று அறிய இயலாத வாழ்க்கைச் சூழலில் காலம் அனுமதிக்கும்போது மட்டுமே மனதுக்கு உகந்த இதுபோன்ற பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. 2002 லும் 2005 லும் ஆய்வு அடிப்படையில் ஓரளவு அறிமுகம் செய்யப்பெற்ற வ. உ. சி.யின் திலகமகரிஷி கிடைத்த வரையில் முழுமையான நூலாக இன்று வெளிவருகிறது.

இந்த நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதியில் வ. உ.சி.யின் திலக மகரிஷி (பதினேழு வாரங்கள் வெளிவந்தவை) இடம் பெற்றுள்ளது. பகுதி இரண்டில் 2002இல் என்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டில் இடம் பெற்றிருந்த திலகமகரிஷி நூல் பற்றிய ஆய்வின் ஒரு பகுதி அமைந்துள்ளது. இறுதியாக வீரகேசரியில் வெளிவந்த திலக மகரிஷியின் நகல்படிகள் முழுமையாகத் தரப்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில் அமைந்துள்ள திலகமகரிஷி பற்றிய ஆய்வு, வாழ்க்கை வரலாறு எழுதுவதில் வ. உ. சி. க்கு இருந்த ஆற்றல், வரலாற்று உண்மைகளைத் துல்லியமாகத் தரும் நேர்த்தி, தம்முடைய சமகால வரலாற்றைப் பதிவு செய்வதில்

இருந்த ஈடுபாடு, தாம் குருவாகப் போற்றிய திலகரின் வாழ்க்கை வரலாற்றை முறையாக வரலாற்றுக் குறிப்புகளோடு பிழையில்லாமல் தரவேண்டும் என்ற வரலாற்றுணர்வு ஆகியவற்றைப் புலப்படுத்துகிறது. அத்துடன், வ.. உ. சி.யின் தமிழ் நடையையும், தமிழ் ஆளுமையையும் வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

திருமிகு தேவமணி ரஃபேல் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததோடு, தொடர்ந்து அவரைத் தொடர்பு கொண்டு, தூண்டி, வீரகேசரி இதழின் நகல் படிகளை எனக்குப் பெற்றுத்தந்தவர் என் அண்ணன் மருத்துவர் இரா. கலைக் கோவன். அவருடைய முழு ஒத்துழைப்பில்தான் திலக மகரிஷி நூல் வடிவம் பெற்றுள்ளது. கட்டுரைத் தொடரின் படிகளைப் பெற்றுத் தந்ததோடு நூலாக்கத்திலும் துணை நின்ற அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

யாரைப் பார்த்தார்? எப்படி முயன்றார்? எத்தனை நாள்கள் திட்டமிட்டார்? என்ன செலவு செய்தார்? எது பற்றியும் தெரியாது! இலங்கைக்குத் தம் சொந்தப் பணிக்காகச் சென்ற போதெல்லாம் மறவாது இதற்காகவும் முயன்றவர். இயன்ற வரையில் பெற்றுத் தந்த பிறகும்கூட, கைம்மாறு எதையும் எதிர்பாராதவர்; கொடுத்துப் பழகிய நெஞ்சம்; தமிழ் ஆய்வுக்குத் தம்முடைய அன்பான பங்களிப்பாக இதைக் கருதிய பேருள்ளம் கொண்டவர்.

செய்யும் தொழில் வணிகம் என்றாலும், கலையே - கலைத் தேடலே வாழ்வாகக் கொண்டவர் - திருமிகு தேவமணி ரஃபேல். அவருக்கு என்ன சொல்லி என் நன்றியைப் புலப்படுத்துவது? தெரியவில்லை. என்றென்றும் அவர் என் நினைவில் இருப்பார்.

இந்நூலை விரைவில் வெளியிட வேண்டும் என்று தொடர்ந்து பல ஆண்டுகளாக என்னை வற்புறுத்தித் தூண்டியவர் திருமிகு. பெ.சு.மணி. அவர் நன்றிக்குரியவர்; என்றும் மறக்க இயலாதவர். இந்நூலைக் கொண்டுவரும் முயற்சியில் பள்ளிப்பணி, இல்லப்பணி இவற்றுக்கிடையே இயன்றது அனைத்தும் செய்து உதவிய என் இல்லத்தரசி திருமதி திரிபுரசுந்தரிக்கு என்றென்றும் கடப்பாடுடையேன்.

*நூலாக்கத்திற்குப் பெரிதும் உதவிய சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர், முனைவர் மு.நளினி சிறந்த ஆற்றலாளர். அவருடைய மெய்ப்புத் திருத்தம் இந்நூலைப் பிழையின்றிக் கொணரத் துணைநின்றது. அவருக்கும், கணினி அச்சுச் செய்தளித்த முத்துக் கணினியக உரிமையாளர் முனைவர் கி. ஜெயகுமாருக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளிக்கொணர்ந்திருக்கும் 'ஆர்.ஜி.அச்சகம்' உரிமையாளர் திரு. ஞானசேகரனுக்கும் என் உழுவல் நன்றி உரியது.*

*'பாரத ஜோதி ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு' என்பது வ. உ. சி. தந்த தலைப்பு. நீளம் கருதி அது இந்நூலில் 'திலக மகரிஷி' என்று சுருக்கப் பெற்றுள்ளது. வ. உ. சி. தந்த தலைப்பு நூலின் முகப்புப் பக்கத்தில் மட்டும் அடைப்புக் குறிக்குள் தரப்பெற்றுள்ளது.*

*வ.உ.சி.யின் கட்டுரைகள் நீண்ட பத்திகளாக அமைந் துள்ளன. எளிமை கருதி அவை சிறுசிறு பத்திகளாகத் தரப் பெற்றுள்ளன.*

*கால இடைவெளிகளில் பல்வேறு இதழ்களில் வெளி வந்திருந்த வ. உ. சி. யின் கட்டுரைகளைத் தொகுத்து, 1989இல் வெளியிடும் வாய்ப்பைக் காலம் அளித்தது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது (2009) வ. உ. சி.யின் 'திலக மகரிஷி' யின் வரலாற்றை நூல் வடிவில் கொண்டுவரும் அரிய வாய்ப்பைக் காலம் எனக்கு வழங்கியுள்ளது. மனம் நிறைந் துள்ளது.*

*தன்னை மறந்து, தன் நாமம் கெட்டு, நாட்டுக்குழைத்தலே முதன்மைப் பணியென எண்ணி வாழ்ந்தவரான வ. உ. சிதம்பரனாரின் அரிதாய படைப்பு ஒன்றை முதன்முறையாக அச்சில் பதிவு செய்வதை அணிலின் முயற்சியாகக் கருதுகிறேன்.*

5.12.2009 **மா.ரா. அரசு**
சென்னை

## உள்ளுறை


1. இளமைப் பருவமும் சுதந்தர எழுச்சியும் 13

2. பொதுஜனத் தொண்டிற் புகுதல் 18

3. தேசீய உணர்ச்சியை வேரறுத்த விதேசிக் கல்வி முறையை மாற்றியமைக்கத் தீவிர முயற்சி 23

4. அந்நிய நாகரீகத்திற்கு அடுத்த ஆசாரச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு 27

5. இந்தியத் தேசீய மகாசபையின் ஆரம்ப ஊழல்களைத் திருத்த தீவிர முயற்சி 32

6. அதைரியமடைந்த மக்களின் உள்ளத்தில் ஆண்மையைப் புகுத்தின அருங்கிளர்ச்சி 37

7. மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள் 43

8. விரோதிகளின் ஏவுதலால் விதவைராணி தொடர்ந்த மரண சாஸன வழக்கு 47

9. காங்கிரஸின் துயிலைக் கலைத்த கர்ஸன் ஆட்சி 52

10. சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடு 62

11. சூரத் காங்கிரஸ் மகாநாட்டில் நிகழ்ந்த சூறாவளி 66

12. பிரிட்டனின் ஆபத்திற்கு உதவிய பிரிய நண்பர் 71

13. சுயாட்சிக் கிளர்ச்சியின் தாதையர்க்கு எதிரான சூழ்ச்சி 76

14. ஸ்ரீ திலகரை வசப்படுத்த முயற்சித்த சீமை மந்திரி 82

15. ஸ்ரீ திலகருக்கு பம்பாய் சர்க்காரின் வாய்ப்பூட்டு 86

16. பாரத மக்களைப் பழித்து நூலெழுதின பண்டிதமணி 90

17. பிரிட்டனில் இந்தியாவின் சுயாட்சிப் பிரசாரம் 95

18. வ.உ. சிதம்பரனாரின் திலக மகரிஷி ஒரு பார்வை 101

# 1. இளமைப் பருவமும் சுதந்தர எழுச்சியும்

## தாய் தந்தையரின் பிரிவும் மணவாழ்க்கையும்

“உலகத்தில் புண்ணியம் தாழ்ந்தும் பாவம் உயர்ந்தும் நிற்கும் பொழுதெல்லாம் யான் மனித சமூகத்திற்கு உதவி செய்வதற்காக அவதரிக்கிறேன்” என்று கூறினார் ஸ்ரீ கிருஷ்ண பகவான். அவ்வாறே இராஜீய விடுதலைக்காக நாம் செய்யும் போராட்டத்தில் நமக்கு உதவி செய்வதற்காகக் காலஞ்சென்ற லோகமான்ய திலகர் அவதரித்தார். இந்தியாவின் விடுதலைக் காகப் போராடி வேலை செய்து பிரசித்தியடைந்த இந்தியத் தலைவர்களுள் அவர் மிகமிகக் கண்ணியமும் பிரதானமும் வாய்ந்தவர். உண்மையில், அவர் இந்திய தேசீயத்திற்குத் தந்தையாவர். அவரது அநித்தியமான உடம்பு சென்று விட்டாலும் அவரது ஆத்மாவும், அவர் கொண்டிருந்த இலக்ஷியங்களும் அவர் உண்டு பண்ணிய இந்திய இராஜீயக் கொள்கைகளையுடைய மாணாக்கர் குழுவும் நமது ஜனசமூக வாழ்க்கையில் அவர் காலத்தில் இருந்த மாதிரியாகவே ஆண்மையும் மேம்பாடும் உடையனவாய் விளங்குகின்றன.

அவரது தன்மை இருவகைக் கலப்பாயிருந்தது; அவற்றில் ஒன்று அநேகரை அவர்பால் இழுத்துக் கொண்டது; மற்றொன்று சிலரை அவரிடமிருந்து பிரித்து நீங்காத பிடிவாதமுள்ள பகைவராக்கிற்று. அவருடைய ஒப்புயர்வற்ற வாழ்க்கையில் நிகழ்ந்த நடுக்கத்தை யுண்டுபண்ணத்தக்க பல சம்பவங்களும் அவை சம்பந்தமாக அப்போதைக்கப்போது எழுந்த பல வாதங்களும் சிலருக்கே இப்போது ஞாபகமிருக்கக் கூடும்; அவர் காலத்தவரின் மனத்தை மிகக் கலக்கிய அந்த சம்பவங்களைப் பற்றி மாறுபடுத்தியும் மிகைப்படுத்தியும் எழுதப்பட்ட விருத்தாந்தங்களைப் பரீக்ஷித்துப் பார்க்க ஒரு சிலருக்கே நேரமிருக்கக்கூடும். ஆனாலும், அத்தேசாபி

மானியின் துன்பகரமான வாழ்க்கையைப் பற்றி எழுதப் பட்டுள்ள விஷயங்களை ஜாக்கிரதையோடு படித்த ஒருவரால் எழுதப்பெற்ற அவரது சுருக்கமான ஜீவிய சரித்திரத்தை அவர் பெயரைப் போற்றும் கோடிக்கணக்கான மனிதர்கள் விரும்பு கின்றார்கள். அத்தகைய சரித்திரத்தையே யான் எழுத எத்தனிக் கின்றேன்.

**பிறப்பும் பெற்றோரும்**

பாலகங்காதர திலகர் 1856-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ந் தேதி இரத்தினகிரியில் பிறந்தார். அவருடைய தகப்ப னாரான கங்காதர இராமச்சந்திர திலகர், சமஸ்கிருத பாஷை யிலும் மகாராஷ்டிர பாஷையிலும் ஒரு பெரிய பண்டிதர். தரித்திர நிலைமைகளால், இராமச்சந்திரர் உயர்தரக் கல்வி கற்பதில் அவருக்கிருந்த நம்பிக்கைகளையெல்லாம் விடுத்துக் குறைந்த சம்பளத்தில் ஓர் உபாத்தியாயர் உத்தியோகத்தில் அமர்ந்தார். அவருடைய கலப்பற்ற யோக்கியதையும் அசையாத மனச்சான்றும் அவருடைய ஜனங்களிடத்து அவரது மதிப்பை உயர்த்தின; ஆனால், அவருக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்கள் வெகுகாலம் வரையில் அவருடைய உரிமைகளைக் கவனிக்க வில்லை. பதினேழு வருஷம் உத்தியோகம் புரிந்த பின்னர் அவர் உதவி டிப்டிக் கல்வி கமிஷனராக்கப்பட்டார். மிகுந்த உறுதி யான சுதந்தர உணர்ச்சி அவருடைய முக்கிய குணமாயிருந்தது. அவரது மனைவி மிகுந்த தெய்வபக்தியுள்ளவர். திலகர் தமது தகப்பனாரிடமிருந்து அவருடைய உறுதியான யோக்கிய உணர்ச்சியையும் சுதந்தர உணர்ச்சியையும் தமது தாயாரிட மிருந்து அவருடைய தெய்வபக்தியையும் ஜீவகாருண்ணியத் தையும் இயற்கையாக அடைந்தனர்.

**கல்வி கற்றல்**

பதினொரு வயது அடையும் வரையில், திலகர் பாட சாலைக்கு அனுப்பப்படவில்லை. ஏனென்றால், அவருடைய தகப்பனார் சுதந்தரமான வீட்டு வாழ்க்கையில் தமது குமாரருக்குத் தமது தாய்ப்பாஷையாகிய மகாராஷ்டிரத்தையும் சமஸ்கிருதத்தையும் கற்பிக்க விரும்பினார். அவருடைய தகப்பனாரது புத்தகசாலையிலிருந்த எண்ணிறந்த புத்தகங்கள் நமது கதாநாயகருக்கு அச்சிறு வயதில்கூட தடுக்கமுடியாத

பிரியத்தை உண்டுபண்ணின. அவர் அவற்றை மிக ஆவலுடன் எடுத்து வாசித்தார். அவருடைய தாயார் 1866-ம் வருஷத்தில் இறந்தார். சிறிது காலங்கழித்து அவர் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அவர் பாலர் வகுப்புக்களைக் கடந்த பின்னர், பூனா கலாசாலைக்கு அனுப்பப் பட்டார். அங்கு அவர் 1872-ம் வருஷத்தில் மெற்றிக்குலேஷன் பரீக்ஷையில் தேறினார். அவர் கலாசாலையில் கற்றபோது வகுப்புவேலைகளில் கடுமையான முறைகளைக் கையாண்டதில்லை. அவர் குறிப்புகள் குறிப்பதில்லை; உபாத்தியாயர் சொன்னவற்றை யெல்லாம் தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதுவதில்லை; ஆனால், சொற்களின் பொருள்களைக் கிரகித்துத் தமது ஞாபகத்தில் வைத்துக் கொள்வார். கணக்குகளை அவர் காகிதத்தில் செய்வதில்லை. மனத்தில் தீர்ந்து விடையை மாத்திரம் காகிதத்தில் எழுதுவார். "கணக்கைச் செய்த வழி எங்கே" என்று வைதிக உபாத்தியாயர் கேட்டால், அவ்வருமை மாணவர் தமது தலையைத் தொட்டுக் காட்டுவார். இவ்வாறாக கலாசாலையில் வாசித்தபோதே, நமது சிறிய திலகர் தமது சுதந்தரத்தை வற்புறுத்தினார். உபாத்தியாயருடைய அர்த்தமற்ற, ஒரே மாதிரியான, கடுமையுள்ள வழிகளுக்கு விரோதமான ஒருவகைக் 'கலகக்கார'ராயிருந்தார்.

1871-ம் வருஷத்தில் இரத்தினகிரி ஜில்லா லாட்கர் நகரவாசியாகிய பாலால் பால் என்பவருடைய புத்திரியாகிய தாபிபாயை விவாகம் செய்துகொண்டார். அதற்குப் பின் சில மாதம் கழித்து, அவருடைய தகப்பனார் இறந்துபோனார். 1873-ம் வருஷத்தில் அவர் டெக்கான் கல்லூரியில் சேர்ந்தார். அக்காலத்தில் கீழ இந்தியாக் கம்பெனியின் சேனாதிபதி உபாத்தியாயர்களும் இராணுவ நிர்வாகஸ்தர்களும் கல்லூரி களை விட்டு மெதுவாக நீங்கிக்கொண்டும் ஆக்ஸ்போர்டு, காம்பிரிட்ஜ் கல்லூரிகளில் இங்கிலிஷ் பாண்டித்ய உணர்ச்சி களைக் கொண்ட பி. ஏ. பட்டதாரிகள் கல்லூரியில் நுழைந்து கொண்டும் இருந்தார்கள். கல்லூரியில் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட்ட கல்வி பக்ஷபாதமுடையதாயும் குறைவுடை யதாயும் இருந்தது. மாணாக்கர்களுடைய மனத்தில் ஷெல்லி, பயிரன், பர்க்கு, கிபன் முதலியவர்களுடைய நூல்கள் நிறைக்கப் பட்டன. மாணாக்கர்களுடைய சரீர பலம் கவனிக்கப்

படவேயில்லை. இதன் முடிவு உண்மையில் மிகமிக விசனப் படத்தக்கதாயிருந்தது; சரீர பலமும் விவேக பலமுமுள்ள இளைஞர்களை வெளியில் அனுப்புவதற்குப் பதிலாகக் கல்லூரியானது சரீர பலமிழந்தவர்களையும் விவேக பல மற்றவர்களையும் மாத்திரம் வெளியே அனுப்பிக் கொண் டிருந்தது. இக்கல்வியின் குறைவுத்தன்மையை அறிந்து திலகர் தமது நேரத்திலும் கவனத்திலும் பெரும்பாகத்தைத் தமது சரீர வளர்ப்பிலும் சரீர அப்பியாசத்திலும் செலவிட்டு வந்தார். நீந்துதலிலும் படகோட்டுதலிலும் குஸ்தி செய்ததிலும் அவர் தமது காலத்தைக் கழித்து வந்தார். அவர் தமது கல்லூரிக் கல்வியின் முதல் வருஷ முடிவில் மிக சரீரக்கட்டும் சரீர பலமும் சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் உடையவராயிருந்தார்; ஆனால், அவர் தமது யப். ஏ. பரீக்ஷையில் தவறிப்போயினர்.

அவர் தமது கல்லூரி வாழ்க்கையின் குற்றமற்ற விளை யாடல்களிலெல்லாம் முதன்மையாயிருந்தார்; ஆனால், அவர் உண்மையில் ஒருபோதும் குறும்புத்தனமுள்ளவராயி ருக்கவில்லை. அவர் தம்முடன் கல்வி கற்ற மாணாக்கர்களோடு தாராளமாகப் பழகிவந்தார். அவருடைய பேச்சிலும் செயலிலும் எப்பொழுதும் உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடிய முரட்டுத் தனமும் யாரும் காணத்தக்க நேர்மையும் இருந்தன. அவர் அடிக்கடி தமது சகாக்களுடன் கடுமையான தர்க்கம் புரிந்து ஓர் ஆச்சரியகரமான குணதோஷ ஆராய்ச்சியாளராய் விளங் கினார். வெறுங் குதர்க்கங்கள் அவரைப் பின்னிடச் செய்ய முடியாது. வெறும் பேச்சுகள் அவருடைய அறிவைக் கெடுக்க முடியா. அவர் ஒரு விஷயத்தின் மூலத்தைக் கண்டு அதன் சாராம்ஸங்களை யெல்லாம் மதிக்கக்கூடிய திறமையுடையவர். குதர்க்கமற்ற அவருடைய வீட்டு வாசனையிலும் எதுவும் மனத்தில் பதியத்தக்க அவருடைய இளம்பருவத்திலும் அவர் சமஸ்கிருதத்திலும் மகாராஷ்டிரத்திலும் அடைந்திருந்த கல்வியானது மேல்நாட்டுக் கொள்கைகளையும் நாகரீகத் தையும் ஆராயாது கைக்கொள்ளுதலிலிருந்தும் அடிமைத் தனமாகப் பின்பற்றுதலிலிருந்தும் அவரைக் காப்பாற்றிற்று. அதனால்தான், அவர் தம்முடன் கல்வி கற்ற மாணாக்கர் களிலிருந்து கிளம்பிய "ஆசார சீர்திருத்தக்காரர்"களோடு சேரவில்லை.

ஆயினும் அவருடைய இயற்கைக் குணத்தாலும் இளமைப் பயிற்சியாலும் கீழ்நாட்டுக் காரியங்களில் அவருக்கு ஓர் அபிமானம் இருந்த போதிலும் அவர் மேல்நாட்டுக் காரியங்களிலுள்ள நன்மைகளைத் தெரிந்துகொள்ளத் தவற வில்லை. அவர் தமது கல்லூரித் தலைவர் வெர்ட்ஸ்வொர்த் என்பவரையும் உபாத்தியாயர் சாட்டிரீ என்பவரையும் சகல வகைகளிலும் தமது குருக்களாகவே மதித்துவந்தார். ஸ்ரீமான்கள் மியூல், சாரங்கபாணி, கதாவடி, எஸ் . பி. உபாஸானி, ஜி. எஸ் . அகர்கார், வாமன்ராவ் அபதே, டி. எ. காரி, ஜி. எஸ் . கப்பர்தே, ஆர். யந். முதால்கர், ஓ. கிடுமால், யந். ஜி. சந்திரவர்க்கர் அவருடன் கல்வி கற்றவர்களிலும் அவரது காலத்தவர்களிலும் பிரபலமான சிலர். திலகர் பி. ஏ. பரீக்ஷையில் 1வது வகுப்பில் 1876-ம் வருஷம் தேறினார். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் கற்று 1879-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் எல். எல். பி. பரிக்ஷையில் தேறினார். அவர் சட்டங்களைக் கற்ற மூன்று வருஷங்களில் ஹிந்து லாவிலும் இந்திய கவர்ன்மெண்டார் 1827-ம் வருஷம் முதல் செய்த சகல சட்டங்களிலும் பூரண பாண்டித்வம் அடைந்தார்.

28.5.1933

✤ ✤ ✤

# 2. பொதுஜனத் தொண்டிற் புகுதல்

## கோலாப்பூர் கேஸும் 4 மாத சிறைத்தண்டனையும்

### பொதுஜன வாழ்க்கையில் பிரவேசித்தல்

அறிவுமிக்க மேதாவியாயும் வளையாத தர்க்கவாதியாயும் சட்ட ஞானம் நிரம்பிய மாண்ாக்கராயும் இருந்தபடியால், திலகர் சட்டத் தொழிலைக் கைக்கொண்டிருப்பாரானால் உயர்ந்த புகழும் மிகுந்த செல்வமும் அடைந்திருப்பார். ஆனால், தேசத்திற்கு ஊழியம் செய்யும் அவாவே அவருடைய குணங்களில் மிகமிக மேம்பட்டதாயிருந்தது. அன்றியும் அந்நிய தேசத்தாரின் ஆள்கைக்குட்பட்ட, அவர் காலத்தில் நடந்த சில சம்பவங்கள், அவருடைய தேசத்தின் ஆதரவற்ற தன்மையைப் பற்றி அவருடைய மனத்தில் மங்காத ஓர் எண்ணத்தை உண்டு பண்ணின.

1875-ம் வருஷத்தில் பரோடா தேசத்து அரசரான மல்ஹார்ராவ் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டார். ரெஸிடண்டு கர்னல் பாயருக்கு அவர் பாஷானம் ஊட்ட எத்தனித்ததாகக் கூறப்பட்டது. அந்த விஷயத்தைப் பற்றி விசாரணை செய்வதற்காகச் சிலர் ஒரு கமிஷனாக நியமிக்கப்பட்டனர். அக்கமிஷன் அரசருக்கு விரோதமாகத் தீர்ப்புச் சொல்லிற்று. ஆனால், பரோடா தேசத்திலும் அதற்கு வெளியிலுமுள்ள ஜனங்கள் அரசர் நிரபராதியென்று நம்பினார்கள். அக்கமிஷன் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தையும் உணர்ச்சியையும் பொருட்படுத்தவில்லை; சந்தேகத்தின் அநுகூலத்தைக்கூட அரசருக்குக் கொடுக்கவில்லை. அரசருடைய கதியைத் தீர்மானித்த அக்கிரமமும் அவருடைய நிர்க்கதியான தன்மையும் திலகர் உள்ளத்தில் ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணின. அந்நியர் ஆள்கையால்

ஏற்பட்ட தமது தேசத்தவரின் நபுஞ்சகத் தன்மையைத் திலகர் வருத்தத்தோடும் வெறுப்போடும் உணர்ந்தார். பிற்பாடு, 1877-78ம் வருஷத்துப் பஞ்சம் வந்தது; அதில் ஐம்பது லக்ஷம் ஜனங்கள் மாண்டனர். அதே வருஷத்தில் விக்டோரியா மகாராணியார் "கெய்ஸரி ஹந்து" என்னும் பட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படியாகத் தூண்டப்பட்டனர்.

இந்தியாவை அரசாண்டவர்களுக்கு அதன் ஜனங் களிடத்திலும் அந்த வருஷத்துக் கோரமான பஞ்சத்தில் ஜனங்கள் பட்ட பாடுகளிலும் கஷ்டங்களிலும் எள்ளளவு அநுதாபம் இருந்திருக்குமானால், அந்தச் சமயத்தில் அந்தப் பட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக மகாராணியாரை அவர்கள் தூண்டியிருக்கமாட்டார்கள்.

1876-ம்வருடத்தில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தனா யிருந்த வாசுதேவ பால்வந்த் பதகே என்பவனின் தலைமையின் கீழ் மகாராஷ்டிர தேசத்தின் பல பாக்ங்களில் பிரிட்டிஷ் அரசாட்சியை ஒழித்துவிடுவதற்கு எத்தனம் செய்யப்பட்டது. ஆனால், அவ்வெத்தனம் ஒரு கேலிக் கூத்தாய் முடிந்தது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாட்சியைப் பலாத்காரத்தால் ஒழிப்பதற்கு முயல்வதன் பயனற்ற தன்மையை விளக்கிக் காட்டிற்று. பிரிட்டிஷ் அரசாட்சியானது தேசபக்தியை ஒழிக்கும் கல்வியையும் உத்தியோக அமைப்பையும் அடிப்படை களாக்கி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் அதனைப் பலாத்காரத்தால் மாற்ற முடியாதென்பதையும், பிரிட்டிஷார் உபயோகித்து வருகிற தந்திரங்களாலும் ஆயுதங்களாலுமே அதனை மாற்ற முடியுமென்பதையும் அவ்வெத்தனம் தெளிவாகத் திலகருக்குக் காட்டிற்று. இவையும் இவை போன்ற பிறசம்பவங்களும் தமது தேசத்தின் புனருத்தாரணத்திற்காக வேலைசெய்யும்படி திலகரைத் தூண்டின.

கிருஷ்ணசாஸ்திரியார் குமாரர் விஷ்ணுசாஸ்திரி சிப்லூன்கார் தேசத்திற்கு ஊழியஞ் செய்து வந்தது திலகருக்கும் அவருடைய நண்பர் ஜி. ஜி அகர்காருக்கும் உற்சாகத்தை உண்டுபண்ணிற்று. ஸ்ரீ சிப்லூன்கார் ஒரு புதிய கொள்கையைக் கண்டுபிடித்தவர். அவர் 1874-ம் வருஷத்தில் தொடங்கிய "நிபந்தமாலை" என்னும் பத்திரிகை வாயிலாக அக்காலத்து

ஜனாசாரக் கிளர்ச்சிகளையும், மதக் கிளர்ச்சிகளையும் கவர்ன்மெண்டின் தன்மையையும் கடுமையான கண்டனங் களால் தாக்கிவந்தார். அவர் எழுத்துநடையின் கௌரவமும் அணியலங்காரமும் அவருடைய அஞ்சாமையும் சுவாதீனமும் அவருக்குப் பெரிய மதிப்பையுண்டு பண்ணின. ஸ்ரீ சிப்லூன் காரின் செயல்களைப் பார்த்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டவராய்த் திலகரும், அகர்காரும் பொதுஜன சேவையில் பிரவேசித்தனர். மாகாணம் முழுவதும் கலா சாலைகளை ஏற்படுத்தி பொதுஜனங்களுக்கு அவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் கற்பிப்பதே அவர்களுடைய அவாவாயிருந்தது. அவர்கள் பூனா நகரில் புதிய இங்கிலீஷ் கலாசாலையையும் 'மகாராட்டா,' 'கேசரி' என்னும் இரண்டு பத்திரிகைகளையும் தொடங்கினார்கள்.

சில நாள் கழித்து ஸ்ரீ எம். பி. நாம் ஜோஷி என்பவர் அவர்களோடு சேர்ந்தார். அவர் விரிந்த கல்வியும் அநு போகமும் சாமர்த்தியமும் உடையவர். அவர் உண்மையில் கலாசாலைக்கு ஓர் ஆஸ்தியாயிருந்தார்; அதற்கு ஊழியஞ் செய்வதற்காகத் தமது வாழ்நாளைச் சமர்ப்பணம் செய்தார். ஓர் உபாத்தியாயராய் மிக்க அநுபவம் பெற்றிருந்த ஸ்ரீ வி. எஸ். ஆப்டேயின் ஊழியத்தை அடையும்படியான நல்ல அதிர்ஷ் டத்தை அக்கலாசாலை பெற்றது. கலாசாலையின் மேற்பார்வை யாளராயிருந்து ஆப்டே கலாசாலையைப் பல வழிகளில் அபிவிர்த்தி செய்து அதனுடைய மதிப்பை உயர்த்தினார். டம்பமும் சுயநலமும் அற்ற இந்த ஊழியர்களுடைய நடாத்துகையால் அக்கலாசாலை அம்மாகாணத்தில் மிகமிகப் பெரிய ஒரு ஸ்தாபனமாயிற்று. திலகராலும் அகர்காராலும் நடத்தப்பெற்ற மகாராட்டா, கேசரி என்னும் இரண்டு பத்திரிகைகளும் மிக வெற்றிகரமாய்த் திகழ்ந்தன. அவர் களுடைய குணதோஷ ஆராய்ச்சி வாசிப்போர்களுடைய தேசாபிமானத்தையும், ஊக்கத்தையும் எழுப்பிற்று. அவற்றை வாங்கி வாசிப்போர் நாள்தோறும் அளவுகடந்து பெருகிக் கொண்டிருந்தனர்.

**கோலாப்பூர் கேஸ்**

திலகர் எப்பொழுதும் இந்திய சமஸ்தானங்களின் க்ஷேமத்திலும் அபிவிர்த்தியிலும் பெரிய அக்கறை கொண்டிருந்தார். கோலாப்பூர் சமஸ்தான காரியங்கள் 1870-ம் வருஷம் முதற்கொண்டு மிக அதிருப்திகரமாயிருந்தன; அவை திலகரின் கவனத்தைக் கவர்ந்தன. இராஜா அந்த வருஷத்தில் இறந்தார். அவரது விதவைகள் சிவாஜிராவை சுவிகாரம் செய்தார்கள். 1877-ம் வருஷம் முதல் இந்த இளவரசர், சந்தேகிக்கக்கூடிய புத்தி சுவாதீனத்தைக் காட்டத் தொடங்கினர். பாஷாணம் ஊட்டிக் கொன்றாவது, புத்தி சுவாதீனமில்லையென்ற காரணத்தாலாவது இவ்விளவரசரைச் சிம்மாசனத்திலிருந்து ஒழித்து வேறு ஒருவருக்குப் பட்டம் கட்டுவதற்காக அந்த சமஸ்தானத்தின் காரியஸ்தராயிருந்த இராவ்பகதூர் பார்வ் என்பவர் வேலை செய்து கொண்டிருக்கிறதாகப் பெரும் பிரஸ்தாபம் உண்டாயிற்று. பூனா நகரத்தில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது. அதில் இளவரசராகிய சிவாஜிராவுக்கு ஒரு புதிய கியார்டியனை நியமிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. இந்த மகாநாட்டிற்குப் பின்னர் இவ்விளவரசரைக் கொலை செய்வதற்கு எத்தனம் செய்யப் பட்டதாகவும் அது தவறி விட்டதாகவும் ஒரு பிரஸ்தாபம் எழுந்தது. சில காலம் கழித்து திலகருக்கும் அகர்காருக்கும் மூன்று கடிதங்கள் வந்தன.

அவை சமஸ்தானக் காரியஸ்தரால் ஒருவனுக்கு எழுதப் பட்டவை போலத் தோன்றின. இக்கடிதங்களில் இளவரசருக்குப் பாஷாணம் ஊட்டுவதற்குரிய உபாயம் குறிக்கப் பட்டிருந்தது. அக்கடிதங்கள் உண்மையானவை என்று கருதி, அவர்கள் மகாராட்டாவிலும் கேசரியிலும் அவற்றைப் பிரசுரித்துச் சமஸ்தானக் காரியஸ்தர் தமது குற்றமற்ற தன்மையைச் சட்டக் கோர்ட்டு மூலமாக ரூபிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. அக்கூற்றை ஏற்றுக்கொண்டு இராவ் பகதூர் பார்வ் கோலாப்பூர் கோர்ட்டில் திலகரையும், அகர்காரையும் வேறு சிலரையும் சேர்த்து ஒரு கேஸ் நடத்தினார். அவர் நானாபைட் என்பவரைத் தலைமையாகக் கொண்ட தமது விரோதிகளுள் தமக்குக் கெட்ட பெயரை

உண்டுபண்ண வேண்டுமென்ற ஒரு சதி நடந்ததாயும் அப்பெயரை உண்டு பண்ணுவதற்காகத் தமது விரோதிகள் மனப்பூர்வமாகப் பல சூழ்ச்சிகள் செய்திருக்கிறார்களென்றும் மகராட்டாவிலும் கேசரியிலும் பிரசுரிக்கப்பட்ட கடிதங்கள் பொய்யாகச் சிருஷ்டிக்கப்பட்டவையென்றும் தமது பிராதில் சொல்லியிருந்தார்.

திலகருக்கும் அகர்காருக்கும் ஸ்ரீ பி. எம் மேத்தாவும் கே. டி. திலாங்கும் வக்கீல்களாக ஆஜரானார்கள். அக்கடிதங்கள் உண்மையானவையென்று ரூபிப்பதற்காக நானாபைட் மிகமிகப் பிரயாசைப்பட்டார்; ஆனால், கோர்ட்டுத் தீர்ப்பு அதற்கு மாறாயிற்று. திலகரும் அகர்காரும் தாம் அக்கடிதங்கள் உண்மையானவையென்று நம்பி தம் பத்திரிகைகளில் பிரசுரித்ததாகவும் அத்தவறுக்காகத் தம்மை மன்னிக்கவேண்டு மென்றும் கேட்டனர். இதில் திருப்தியடையாமல், சமஸ்தானக் காரியஸ்தர் அவர்களுக்குத் தண்டனை விதிக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். திலகரும் அகர்காரும் ஆளுக்கு நான்கு மாதம் வெறுங்காவல் விதிக்கப்பெற்றனர். அவ்விருவரும் அநியாய மாகத் தண்டிக்கப்பட்டனரென்று பொதுஜனங்கள் கருதி னார்கள். கல்லூரித் தலைவர் வெர்ட்ஸ்வொர்த் ஓர் இயக்கத்தை நடாத்தி, புகழ் வாய்ந்த இவ்விருவரையும் விடுதலை செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு மனுச் செய்தார். ஆனால், அம்மனு அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் விடுதலை அடைந்த தினத்தில் சிறைவாசல் பக்கம் கூடியிருந்த பெருங்கூட்டத்தார்கள் மிகுந்த சந்தோஷத்துடன் அவ்விரு ஜெயசீலரையும் வரவேற்றார்கள். அவ்விருவரும் சிறையுள் ளிருந்தபோதே அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு நிதி சேர்க்கப்பட்டது. அந்நிதிக்குப் பணம் அளிப்பதற்காக நடத்தப்பட்ட ஒரு நாடகத்தில் அப்போது ஒரு மாணாக்க ராயிருந்த கோபால கிருஷ்ணகோகலே ஒரு பெண்வேடம் பூண்டு நடித்ததாகச் சொல்லப்படுகிறது.

11.6.1933

✣ ✣ ✣

# 3. தேசீய உணர்ச்சியை வேரறுத்த விதேசிக் கல்வி முறையை மாற்றியமைக்கத் தீவிர முயற்சி

## தக்ஷிணக் கல்விச்சங்க ஸ்தாபகமும் தன்னலத் தியாகமும்

### கல்வி சம்பந்தமான வேலை

தேச ஊழியம் செய்தற்குத் திலகரையும், அவர் கூட்டாளியாகிய அகர்காரரையும் தூண்டிய எண்ணங்கள் முன்னரே குறிக்கப்பட்டுள்ளன. தேசீயத் தத்துவத்தையும் குடியாட்சித் தத்துவத்தையும் தமது தேசத்தார்களின் உள்ளத்துள் புகுத்துவதற்கு ஓர் கருவியாகக் கல்வி வேலையிலும், பத்திரிகை வேலையிலும் அவ்விருவரும் தமது கவனத்தைச் செலுத்தினர். இந்தியாவை இங்கிலாந்து ஆள்வதற்குக் காரணம் இங்கிலீஷ் கல்வியானது இந்திய இளைஞரிடத்தில் உண்டு பண்ணிய புத்திப் பிரேமைதானென்றும், அந்தப் புத்திப்பிரேமையை ஒழிப்பதினாலேயே அதாவது தேசீய வழிகளில் ஜனங்களுக்குக் கல்வியைக் கொடுப்பதனாலேயே, அந்த ஆள்கையைப் பலஹீனப்படுத்தக் கூடுமென்றும் அவர்கள் தெளிவாகக் கண்டார்கள். அவர்கள் ஏற்படுத்தி நடாத்திய புதிய இங்கிலீஷ் கலாசாலை, பலவழிகளில், உண்மைத் தேசீயத்தைக் கற்பித்தது. இங்கிலீஷ் மூலமாகக் கற்பித்தல் கூடியவரையில் குறைக்கப்பட்டது. தற்காலத்துக் கல்வி முறையில் எந்தக் குறைகளைக் களைவதற்காக நாம் இப்பொழுது போராடிக் கொண்டிருக்கிறோமோ, அந்தக் குறைகளிற் பல களையப்பட்டன. இவ்வாறு புதிய இங்கிலீஷ் கலாசாலையானது ஜனங்களால் மிக நேசிக்கப்பட்டு ஆதரிக்கப்பெற்றதும், கவர்ன்மெண்டு கல்வியிலாகா அதிகாரிகளால் இகழப்பட்டுக் கண்டிக்கப்பட்டதுமான மதிப்பு மிக்க ஒரு ஸ்தாபனமாக விளங்கிற்று.

அக்கலாசாலையின் வெற்றியானது திலகருக்குத் தைரியத்தைக் கொடுத்தது. அதனை அவர் ஒரு கல்லூரியாக்குவதற்கு விரும்பினார். இந்த நோக்கத்தோடு அந்த விஷயத்தில் அக்கறையுடைய எல்லோரையும் சேர்த்து ஒரு மகாநாடு கூட்டினார்.

கீர்த்திவாய்ந்த, தக்ஷணக் கல்விச் சங்கம் 1884-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது. சர்வகலாசாலைச் சங்கத்தின் அநுமதியின் பேரில், 1895-ம் வருஷத்தில் ஓர் உயர்தரக் கல்லூரி ஸ்தாபிக்கப் பெற்றது. கணித சாஸ்திரத்திலும், சமஸ்கிருத பாஷையிலும் விசேஷத் திறமை வாய்ந்திருந்த திலகர் அவ்விரண்டையும் கற்பிக்கும் உபாத்தியாயராயிருந்தார். அவர் உபாத்தியாயராயிருந்த காலத்தில் தாம் கையில் எடுத்துக்கொண்ட பாடங்களைவிட்டுப் பிற விஷயங்களிலாவது, வேடிக்கை விளையாட்டுகளிலாவது அவர் ஒருபோதும் காலங்கழித்ததில்லை. மிகமிகக் கண்டிப்புடையவராயிருந்தபடியால், அவர் எல்லாரும் விரும்பத்தக்க ஓர் உபாத்தியாயராயிருக்கவில்லை; ஆனால் அவருடைய மாணாக்கராயிருந்து அவரிடம் கற்கும் விசேஷ நற்பாக்கியம் பெற்றவர்களுக்கெல்லாம் அவருடைய மேதாவித்தன்மையில் பயபக்தியை உண்டுபண்ணத்தக்க கம்பீரமும் கௌரவமும் அவரிடம் இருந்தன. துரதிஷ்டவசமாக, தக்ஷணக் கல்விச் சங்கம், ஸ்தாபிக்கப்பட்ட சிறிது காலத்துள் திலகருக்கும் அவருடன் சேர்ந்து வேலை செய்தவர்களுக்கும் வேற்றுமை ஏற்பட்டு அவர் அச்சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளும்படியாயிற்று.

திலகருடைய நோக்கம், முன் சொல்லியபடி மகாராஷ்டிர தேச முழுவதிலும் நன்றாக நடத்தப்பட்ட கலாசாலைகளை நிரப்பவேண்டுமென்பதே. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள் தன்னல மறுப்பு, தன்னலத் தியாகம் இவற்றைக் கைக்கொண்டிருக்க வேண்டுமென்றும் தம்முடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத ஊதியம் மாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார். இதற்குச் சங்கத்தின் அங்கத்தினர்களெல்லாம் முதலில் ஒப்புக்கொண்டார்கள்; ஆனால் பெரிய கல்வி முறையை ஏற்படுத்துவதில் உண்டாகக்கூடிய பிரதமக் கஷ்டங்

களையும் தொந்தரவுகளையும் கடந்த பின்னர், சங்கத்தின் ஆயுள் அங்கத்தினர்களிற் சிலர் அதிகச் சம்பளம் வேண்டுமென்று கூக்குரலிடத் தொடங்கினர். சங்கத்தின் விதிப்படி சகல அங்கத்தினர்களின் சம்பளங்களும் சமமாயிருந்தன; குறித்த சிலருக்கு மட்டும் நன்கொடைகள் கொடுக்கப்பட்டன. சங்கம் சம்பந்தமான வேலை தவிர வேறு வேலைகளில் சங்கத்தின் அங்கத்தினர்கள் பிரவேசிக்கக் கூடாதென்ற ஒரு விதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. சிறிது காலம் சென்ற பின்னர், அங்கத்தினர்களிற் சிலர் இந்த விதியை மீறிப் பணம் வரக்கூடிய வேறு வேலைகளிலும் பிரவேசிக்கத் தொடங்கினர்.

1885-ம் வருஷத்தில் இந்தக் கடுமையான விதிகள் தளர்த்தப் பட்டன. ஒவ்வோர் அங்கத்தினரும் பகற்காலத்தில் நான்கு மணிநேரம் கல்வி கற்பித்தலிற் செலவிடவேண்டுமென்றும், மற்றைய நேரங்களில் வேறு சொந்த வேலைகளைச் செய்து கொள்ளலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் விதிகளிற் செய்யப்பட்ட இந்த மாற்றமானது சங்கம் சம்பந்தமான வேலை தவிர வேறு வேலையொன்றும் சங்கத்தின் அங்கத்தினர் செய்யக்கூடாதென்ற சங்கத்தின் முக்கிய விதியைச் சங்கத்தின் அங்கத்தினர்கள் மீறி நடக்கும்படி செய்துவிட்டது. திலகர் இக்கெட்ட பழக்கத்தைப் பார்த்துப் பொறுமையை இழந்து, சொந்த வேலைகளை அடியோடு விட்டுவிட வேண்டும், அல்லது அங்கத்தினர்களின் சொந்த வேலைகளால் கிடைக்கும் ஊதியங்கள், அந்நிய நாட்டுப் பாதிரிமார் சங்கங்களில் நடப்பது போலச் சங்கத்தின் சகல அங்கத்தினர் களுடைய பொதுநன்மைக்கு உபயோகப்படும்படியாகச் சங்கத்தின் பொது நிதிக்குச் சேர்க்கப்பட வேண்டும் என்னும் ஒரு விதியை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார். இவ்வாறாக சங்கத்தின் ஆதிநோக்கங்களையும் கொள்கை களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு அவர் அந்த நோக்கங்களையும் விதிகளையும் மீறினவர்களெல்லோரோடும் சண்டையிட்டார். சர்வஜன சபைக்கு ஸ்ரீ கோக்கலே ஒவ்வொரு நாளும் மூன்றுமணிநேரம் வேலைசெய்து வந்ததை அவர் பலமாக ஆக்ஷேபித்தார்.

சங்கத்தின் அங்கத்தினர்களுடைய கூட்டமொன்றில் அங்கத்தினர்களுடைய சம்பள விகிதங்களை உயர்த்த வேண்டுமென்று ஸ்ரீ அகர்கார் கொண்டு வந்த பிரேரேபணையைத் திலகர் ஆக்ஷேபித்தார்; ஆனால், அகர்கார் காரியத்தை மாத்திரம் ஒரு விசேஷ காரியமாக எடுத்துக் கொண்டு அவருக்கு ஒரு நன்கொடை அளிக்கலாமென்று சொன்னார். வரவர இந்த விவாதங்கள் வளர்ந்து மனவருத்தத்தை உண்டு பண்ணுவனவாய்விட்டன. சங்கம் முறிந்து போகும்படியான நிலைமை ஏற்பட்டபோது, அதனைத் தடுப்பதற்காகத் திலகர் சிறிது காலத்திற்குத் தாம் சங்கத்தை விட்டு விலகி நிற்பதாகச் சொன்னார். ஓர் இராஜி செய்யப்பட்டுத் திலகர் மறுபடியும் சங்கத்தில் சேர்ந்தார். ஆனால், இந்த விவாதங்கள் அங்கத்தினர்களுள் கடுமையான விரோதத்தை உண்டு பண்ணி விட்டன; இராஜிப்படியும் அங்கத்தினர்கள் நடக்கவில்லை. ஆதலால், திலகர் 1890-ம் வருஷம் டிசம்பர்-மாதத்தில் சங்கத்தினின்று விலகிக் கொண்டார். ஆனாலும், அவர் சங்கத்தை ஸ்தாபித்து, அதனுடைய உண்மையான நண்பராக அவர் செய்த ஊழியங்கள் எல்லோருடைய ஞாபகத்திலும் இருந்துவந்தன.

2.7.1933

✤ ✤ ✤

## 4. அந்நிய நாகரீகத்திற்கு அடுத்த ஆசாரச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு

### சமூக, சமய பழக்கவழக்கங்களில் சர்க்கார் தலையிடுவதை முற்றாக ஆக்ஷேபித்தல்

**ஆசாரச் சீர்திருத்த விரோதி**

இங்கிலீஷ் கல்வியானது, கால அளவில், இங்கிலீஷ்காரரின் நடை உடை பாவனைகளைக்கொண்ட, இந்தியர்களாகிய ஒரு பெரிய வகுப்பினரை உண்டுபண்ணி விட்டது. மேல்நாட்டுக் கல்வியை உட்கொண்டும், மேல்நாட்டு சமுதாய இராஜீய ஞானிகளுடைய பிதற்றல்களெல்லாம் உலகம் முழுவதற்கும் பொருந்தத் தக்க உண்மைகளென்று நம்பியும், அவர்கள் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளவும் மேல் நாட்டார் கொள்கைகளை இந்தியர் வாழ்க்கையில் புகுத்தவும் தொடங்கினர். இந்தியர் சமூகம் தீமைகளடங்கிய ஒரு நரகத்தில் அமிழ்ந்திருக்கிறதென்றும், அடியோடு கெட்டு அழுகிப் போயிருக்கிறதென்றும், நாகரீகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அச்சமூகக்கட்டை அழித்து மாற்றிக் கட்டவேண்டுமென்றும் அவர்கள் கூச்சலிட்டார்கள். ஜாதியென்னும் பெரும் பலதலைப் பாம்பைக் கொன்றுவிட வேண்டுமென்றும், பாலிய விவாகங்களை ஒழித்துச் சிக்ஷைக்குட்படுத்த வேண்டுமென்றும், ருதுபின் - விவாகங்களையும், விதவா - விவாகங் களையும், கலப்பு - விவாகங்களையும் அனுமதிப்பதுடன் நடத்திக்காட்ட வேண்டுமென்றும், பெண்களை எல்லா விஷயங்களிலும் - முக்கியமாகக் கல்வி விஷயத்தில் - ஆண்களோடு சமமாக வைத்து நடத்தவேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள்.

இந்தச் சுயமயக்கப் பித்தலாட்டக்காரர்களின் இரவற் சுவிசேஷங்கள் திலகருக்குப் பிடிக்கவில்லை. பிறவித் தேசீய வாதியானபடியால் அவர் இந்தியர் சமூகத்தின் சிக்கலான வாழ்க்கையில் மேல்நாட்டின் பக்ஷபாதமான பயிற்சியையும். பரீக்ஷிக்கப்படாத கொள்கைகளையும் நன்மை தீமைகளைக் கவனியாது புகுத்துவதற்கு விரும்பவில்லை. ஆதலால், அவர் ரானடே போன்ற விவேக மேதாவிகளால் நடத்தப்பட்ட ஆசார சீர்திருத்தக்காரர்களாகிய வலிமை மிக்க வீரர்களை எதிர்த்துத் தமது கூரிய பேனாவாலும் சாதுரிய நாவாலும் இரக்கமற்ற தொரு போர் நடத்த வேண்டியதாயிற்று.

இவர்கள் பயங்கரமானவர்களாயிருந்த போதிலும், திலகர் இவர்களுக்குப் பயப்பட்டவரல்லர். மேல்நாட்டு இலக்கியத்தில் அடிக்கடி காணப்படும் சமூக ஆட்சி முதலிய உரத்த சொற்களின் பெயரால் ஜனங்களுடைய வாழ்க்கையில் ஒரு கலப்புத் தேசீயத்தைப் புகுத்துவதை அவர் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறவரல்லர். அவ்வாறிருந்தாலும், திலகர் ஹிந்து சமூகத்தினிடையே அநேக தீயவழக்கங்கள் இருக்கின்றன வென்பதை ஒத்துக் கொள்ளத் தயாராயிருந்தார்; ஆனால், சீர்திருத்தம் ஜனங்களிடையே நின்றுதான் வெளிப்பட வேண்டு மென்று அவர் சொன்னார்.

சீர்திருத்தத் தொடக்கம் சமூகத்தினிடையேயிருந்துதான் தோன்றவேண்டும். சீர்திருத்த நெறிகள் ஜனங்களுடைய பழங்கொள்கைகளுக்கும் கல்விக்கும் ஒத்தனவாயிருக்க வேண்டும். ஒரு தேசத்து ஜனங்களின் தேசீய உணர்ச்சியும், தேசீயத் தத்துவமுமே அவர்களுடைய சமூகத் திருத்தங்களின் தன்மையையும், கூர்மையையும், வேகத்தையும் குறிப்பிடல் வேண்டும். சமூகமானது ஒரு பெரிய ஜீவ சாஸ்திர அமைப்பு; அது தன்னுடைய உள்தன்மைக்கு அந்நியமானதும், தன்னுடைய வாழ்க்கை நெறிக்குப் பொருத்த மற்றதுமான எதனையும் வெளியிலிருந்து உட்கொள்ளாது. ஆதலால், இந்தியர் சமூகத்தை மேல்நாட்டு வழிகளில் சீர்திருத்தமுடியாது. மேலும், சீர்திருத்தமானது வளர்ச்சியின் பயனாக நாளடைவில் உண்டாகவேண்டுவதொன்று. இவ்வாறாக, சமூக ஆசார சீர்திருத்தத்திற்குத் திலகர் செய்து வந்த எதிர்ப்பு சாஸ்திர

சம்பந்தமான இரண்டு காரணங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தது. உண்மையில், அவர் மெய்யான சமூக சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் சமூக விகாரக்காரர்கள். உதாரணமாக, அவர் மலபாரியின் சம்மத வயதுச் சட்ட மசோதாவை எதிர்த்ததற்குரிய காரணங்களை எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். மதத்தோடு நெருங்கிய சம்பந்தமுடைய ஒரு சமூகத் தீமையை நீக்குவதற்கு ஓர் அந்நிய இராஜாங்கம் சட்டம் செய்ய வேண்டுவதில்லையென்பதும், சட்ட மசோதாவால் நீக்கக் கருதிய தீமையானது சட்டப் பிரவேசத்திற்கு அவசியமான அபாயகரமானதன் றென்பதும், அந்தத் தீமையானது ஜனங்களுக்குள் கல்வி பரவவே நாளடைவில் நீங்கிவிடுமென்பதும் அவருடைய தாவா.

அந்தச் சட்ட மசோதாவுக்கு விரோதமாக அவர் ஒரு பலமான சண்டை தொடுத்தார்; வைதீகக் கக்ஷியாருடைய உதவியைக் கொண்டு அவர் ஒரு பெருங்கிளர்ச்சி செய்தார்; அக்கிளர்ச்சியால் பொதுஜன அபிப்பிராயம் அந்த மசோதாவை உயிரற்றதாக்கி விட்டது. அந்த மசோதாவில் சில மாற்றங்களும், சில திருத்தங்களும் செய்யவேண்டுமென்று அவர் சொன்னார்; அவற்றை ஒப்புக்கொண்டு அந்த மசோதாவில் சேர்த்துவிட்டால் அதனை வைதீகக் கக்ஷியாரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாயிருந்திருக்கும்; ஆனால், இராஜாங்கத் தாரும், அவருக்கு உதவியாயிருந்தவர்களும் அளவுகடந்த கெர்வ வெறி கொண்டவர்களாய்த் திலகரது மேலான ஆலோ சனையை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். அந்த மசோதாவை எதிர்ப்பது சம்பந்தமாகத் திலகருக்கும் ரானடேக்கும் ஒருவகை மேலாந்தரமான உடன்படிக்கை ஏற்பட்டிருந்தபோதிலும், அவ்விருவருக்கும் உண்மையில், தென்துருவத்திற்கும் வட துருவத்திற்கும் உள்ள அளவு வித்தியாசம் இருந்தது. திலகர் அந்த மசோதாவுக்கு மதத்தின் அனுமதி கட்டாயம் வேண்டுமென்றார்; ரானடே அவ்வனுமதியைப் பொருட்படுத்தவில்லை. முந்தினவர் இந்தியருடைய ஐதிகங்களிலிருந்து தமது உணர்ச்சியைக் கொண்டிருந்தார்; பிந்தினவர் மேல் நாட்டுப் பிதற்றல் களிலிருந்து தமது உணர்ச்சியைக் கொண்டிருந்தார்.

இந்தக் கடுமையான விவாதங்கள் நடந்து கொண்டிருந்த காலத்தில், இங்கும் அங்கும், ஆபாசமான பலாத்காரச் செயல்களும், மதவெறிச் செயல்களும் நடந்தன. சீர்திருத்தக் காரர்களால் நடத்தப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் அவமரியாதையான காட்சிகளும் கலகங்களும் நிகழ்ந்தன; அவற்றிற்குக் காரணஸ்தர் திலகர் என்று ஆசார சீர்திருத்தக் காரர் சந்தேகித்தனர். நாளாக நாளாகத் திலகருக்கும் சீர்திருத்தக்காரருக்கும் வேற்றுமை வளர்ந்து கொண்டே வந்தது. சம்மத வயதுச் சட்ட மசோதா சம்பந்தமான விவாதங் களைத் தவிர, வேறு சம்பவங்களும் நடந்தன. அவை இரு திறத்தார்களுக்கும் ஏற்பட்டிருந்த வேற்றுமையை விசாலப் படுத்தி அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படாதவாறு செய்து விட்டது.

ஓர் இந்தியக் கிறிஸ்தவ மாதாகிய ஸ்ரீமதி இராமபாய் என்பவள் இந்தியச் சிறுமிகள் தங்கிக் கல்வி கற்பதற்காக வாசஸ்தலத்தோடு சேர்ந்த ஒரு கலாசாலையை ஏற்படுத்த விரும்பினாள். அந்தக் காரியத்திற்காக அவள் பணம் சேகரித்துக் கொண்டிருந்தாள்; அமெரிக்காவிலிருந்து அவளுக்கு அதிக உதவி கிடைத்தது. அவள் இந்தியத் தலைவர்களுடைய உதவியையும் நாடினள். கலாசாலையில் லௌகீகக் கல்வியை மாத்திரம் கற்பிப்பதாகவும், மதவிஷயங்களில் சிறிதும் தலையிடுவதில்லை யென்றும் அவள் வாக்குறுதி செய்ததின் பேரில், திலகர் அவ்வியக்கத்திற்கு உதவி செய்தார். சில சீர்திருத்தக்காரரும் அவ்வாறு உதவி செய்தனர். ஆனால் வெகுவிரைவில், அவள் அமெரிக்காவிலிருந்து போதிய உதவி பெறக் கூடுமென்று தெரிந்தவுடன், அவள் ஒப்பந்தத்தைக் கைவிட்டுக் கிறிஸ்து மதத்தைக் கற்பிக்கத் தொடங்கினாள்.

ஸ்ரீமதி இராமபாயை விட்டு விலகிக் கொள்வதற்குப் பதிலாகச் சீர்திருத்தக்காரர் அமெரிக்காவிலுள்ள தலைமை வேலை ஸ்தலத்திற்கு மனுச் செய்தனர்; ஆனால் அது யாதொரு பயனையும் தரவில்லை. திலகர் தன்னுடைய உதவியை நிறுத்திக் கொண்டார். இந்தச் சமயத்தில்தான் சீர்திருத்தக்காரர் நடத்திய பத்திரிகைகளில் திலகரை இகழ்ந்தும் நிந்தித்தும் வியாசங்கள் வெளியாயின. சிறிது காலத்திற்குப் பின்னர், வைதிகக் கக்ஷியார்

திலகர், ரானடே, கோக்கலே முதலிய நாற்பத்திரண்டு பேர்கள் ஜாதிக்கட்டை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கதுடன் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் வீட்டில் தேனீர் பானஞ் செய்தார் களென்று குற்றஞ் சாட்டினர். இந்த வழக்கு ஸ்ரீ சங்கராச் சாரியார் முன் விசாரணைக்கு வந்தது. பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்ப்புச் சொல்லப்பட்டது. திலகர் அத்தீர்ப்புக்குக் கட்டுப்பட்டார். அன்றியும், அவர் சமூக விஷயங்களில் சமாதானப்பான்மையைக் காட்டவேண்டு மென்று தமது "கேசரி"யில் ஒரு பலமான கட்டுரை எழுதி வெளிப்படுத்தினார்.

16.7.1933

✤ ✤ ✤

## 5. இந்தியத் தேசீய மகாசபையின் ஆரம்ப ஊழல்களைத் திருத்த தீவிர முயற்சி

### பம்பாய் சட்டசபைக்குள் பலத்த ராஜீயத் தர்க்கம்

### அரசாங்கத்தின் துன்புறுத்தலுக்கு இலக்கான காரணம்

**இராஜீய விஷயங்களில் பிரவேசித்தல்**

தக்ஷிணக் கல்விச் சங்கத்தில் தாம் அங்கத்தினராயிருந்தமையை இராஜிநாமாச் செய்தபின் திலகருக்கு வேறு துறைகளில் வேலை செய்வதற்கு ஏராளமான நேரம் இருந்தது. வேகமும் முழு வேறுபாடுமுள்ள சமூகத் திருத்தங்களில் இயற்கையிலேயே வெறுப்புள்ள அவர் சாதாரணமாகக் காணப்படும் திருத்தக்காரர் போன்ற ஓர் ஆசாரச் சீர்திருத்தக் காரராயிருக்க முடியவில்லை. இதற்கு மாறாக, இராஜீய விஷயங்கள் அவருடைய இயற்கைக்கு மிகமிகப் பொருத்தமாயிருந்தன. ஓர் இராஜீயவாதியாகவே திலகர் தமது புகழ்களையெல்லாம் பெற்றார். இந்திய தேசீய மகாசபையை (இந்திய நேஷனல் காங்கிரஸை) உண்டுபண்ணி நான்கு வருஷம் கழித்தபின்னர், 1889-ம் வருஷத்தில் திலகர் அச்சபையில் சேர்ந்தார். ஆசாரச் சீர்திருத்த இயக்கத்தைப் போலவே, இந்திய தேசீய மகாசபையும் நடை, உடை பாவனைகளிலும், மனப்பான்மையிலும் ஐரோப்பியரைப் பின்பற்றும் இந்தியர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டும் நடத்தப்பட்டும் வந்தது. இவர்கள் இங்கிலாந்து, பரோபகார நிமித்தமாகவே இந்தியாவுக்கு வந்திருக்கிறதாக நம்பினார்கள். அந்த மகாசபை உபந்நியாசங்கள் - உதாரணமாக ஸ்ரீ சுரேந்தரநாத பானர்ஜியின் உபந்நியாசங்கள் - சுதந்தரத்திலும் விடுதலையிலும் இங்கிலாந்துக்குள்ள விருப்பத்தைப்பற்றிய புகழ் மொழிகளாகவும்,

நினைப்பிலும், அபிப்பிராயத்திலும் சுயமதிப்புள்ள தேசீயமும் சுதந்தரமும் மற்றவை யாவும் கொண்டு இருந்தன.

திலகருடைய தன்மைகள் வேறுவிதமாயிருந்தன; அக்காலத்து இராஜீய விஷயங்களைப் பற்றி அம்மகாசபை தனக்குத் தோன்றியவாறு செய்த முடிவுகளும், அக்காலத்தில் அம்மகாசபை கொண்டிருந்த அடிமை மனப்பாங்கும் திலகருக்குப் பிடிக்கவில்லை. அன்றியும், அம் மகாசபையானது மகாஜனங்களை அணுகவில்லையென்றும், அவர்களுக்கு இராஜீயவிஷயங்களைக் கற்பித்து அவர்களை ஒழுங்கு படுத்தவில்லையென்றும் அவர் கண்டார். அவர் அம் மகாசபையைச் சேர்ந்தவுடனே, அதனுடைய வேலைகளில் புதிய சக்தியையும், புதிய ஊக்கத்தையும் ஊட்டி, மகா ஜனங்களுக்கு இராஜீய உரிமைகளையும், கடமைகளையும் கற்பித்து, அம் மகாசபையைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்று அவர்களுக்கு விண்ணப்பம் செய்தார்.

அவருக்கும் ஆசாரச் சீர்திருத்தக்காரருக்குமுள்ள வித்தியாசங்கள், அவர் இராஜீயவிஷயங்களில் அவர்களோடு சேர்ந்து வேலை செய்வதைத் தடுக்கவில்லை; ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக, அவரிடத்துப் பூர்ணநம்பிக்கை கொள்வ தில்லை. இவ்வாறாக அவர்கள் முக்கியமான தீர்மானங்களை அவர் பிரேரேபிக்க விடுவதில்லை.; உண்மையில் அவருடைய வழியில் சகலவகைத் தடைகளும் உண்டுபண்ணப்பட்டன. அவர் தம்மைப் பிரபலஸ்தராக்கிக் கொள்ள ஆசைப்பட வில்லை; அவர் கீர்த்தியையும் கோரவில்லை. அவர் உண்மையான வேலை செய்வதற்கு ஆசை கொண்டிருந்தார்; அவர் சுயநலமற்ற அசையாத உள்ளத்தோடு வேலை செய்து வந்தார்.

1895 -ம் வருஷத்தில் ஆசாரச் சீர்திருத்தக் கூட்டத்தை இந்திய தேசீய மகாசபைப் பந்தரில் நடத்தலாமா? நடத்தக் கூடாதா? என்ற ஒரு வாதம் எழுந்தது. சீர்திருத்தக்காரர்கள் அக்கூட்டத்தை அப்பந்தரிலே நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்; வைதீகக் கக்ஷியார் அதனை அப்பந்தரில் நடத்தக் கூடாதென்றார்கள். அக்கூட்டத்தை அப்பந்தரில் நடத்துவது அம் மகாசபைக்குப் பண உதவி செய்வதற்கு ஒரு

நிபந்தனை என்றுகூட சீர்திருத்தக்காரர்கள் சொல்லத் தலைப்பட்டார்கள்; வைதீகர்களும் அவ்வாறே அக்கூட்டத்தை அப்பந்தரில் நடத்தவே கூடாதென்று பிடிவாதஞ் செய்தார்கள். அதன் முடிவு மகாசபையினருள்ளேயே ஒரு பெரும் பிளவு ஏற்பட்டது.

திலகர் கக்ஷி மிகத் தெளிவானது. அந்தத் தாவா மகா சபையால் அல்லது அதன் வரவேற்புச் சபையால் தீர்க்கப் படவேண்டுமென்றார். பக்கப் பிரச்சனைகள் பல கிளப்பப் பட்டன. திலகர் உதாசீனமாயிருக்கிறதாகக் குற்றஞ்சாட்டப் பட்டார். அவர் பூனா நகரத்தில் இல்லாத சமயத்தில் மகாசபை வேலை ஸ்தலத்தை அவர் வாசஸ்தலத்திலிருந்து அப்புறப் படுத்துவதற்காக எத்தனங்கள் செய்யப்பட்டன. மகாசபையின் வேலைகளைச் செய்வதற்குச் சீர்திருத்தக் காரருள்ளே உப சபைகள் அமைக்கப்பட்டன. ரூபாய் 50 கொடுத்த ஒவ்வொரு கனவானும் மகாசபைத் தீர்மானங்களுக்கு வாக்குக் கொடுக்க உரிமையுடையவர் என்று முதலில் ஒரு விதி செய்யப் பட்டிருந்தது; ரூபாய் 50க்குமேல் கொடுத்தவர்கள் தங்களுக்காக வாக்குக் கொடுப்பது மாத்திரமல்லாமல், தங்கள் மனைவி மக்களுக்கு வேறாக வாக்குக் கொடுக்கவும் உரிமை யுடையவர் களென்று அவ்விதி மாற்றப்பட்டது. இத்தந்திரங்களினால் கோபமடைந்து, திலகர் முக்கியமான மகாசபையினருக் கெல்லாம் ஒரு சுற்றறிக்கை அனுப்பி ஒரு பொதுக் கூட்டம் கூட்டினார்.

வரவேற்புச் சபையில் சீர்திருத்தக்காரர்களே பெரும்பால ராயிருக்கிறதினால், ஒரு புதிய வரவேற்புச்சபை ஏற்படுத்த வேண்டுமென்று அப்பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிலையான சபையார் (ஸ்டாண்டிங் கமிட்டி) ஒவ்வொரு கக்ஷியிலும் இரண்டு காரியதரிசிகளைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், பம்பாய் நகரத்திற்கு மூன்று காரியதரிசிகளைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்தனர். மிகுந்த நேரம் மனமில்லாதவராயிருந்து, கடைசியாகத் திலகர் இத்தீர்மானத்தை ஒப்புக் கொண்டனர்; ஆனால், அவருடைய எதிரிகளின் நிலைமை அநேகமாக ஐயிக்கப்பட முடியாததாயிருந்தது. தமது எதிரிகளோடும்

அவர்களுடைய வழிகளோடும் அதிருப்தி யடைந்தவராய் அவர் மகாசபைக் காரியதரிசிப் பதவியை இராஜிநாமாச் செய்தார். இருந்தாலும், வித்தியாசங்கள் அதனோடு முடிவடையவில்லை.

சீர்திருத்தக்காரர்களும் திலகர் கக்ஷியார்களும் பத்திரிகைகள் வாயிலாகவும், உபந்நியாசங்கள் வாயிலாகவும் ஒருவரை ஒருவர் நிந்தித்துக் கொண்டு வந்தார்கள். மகாசபைத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்த ஸ்ரீ சுரேந்தரநாத பானர்ஜி அந்த விஷயத்தைச் சாமர்த்தியமாக முடிவு செய்துவிட்டார். ஆசாரச் சீர்திருத்தக் கூட்டத்தை மகாசபையின் பந்தரில் நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை மாற்றவில்லையானால், தாம் மகாசபைக்குத் தலைமை வகிக்கமுடியாதென்றுகூடக் குறிப்பாகச் சொன்னார். தலைவரின் இந்தத் துணிவான செய்கையானது விரும்பத்தகாத வாதங்களையெல்லலாம் முடிவு செய்து விட்டது. எல்லோரும் நினைத்ததற்கு மாறாக மகாசபையானது விசேஷ வெற்றிகரமாக நடந்தேறிமுடிந்தது. "இந்தியாவின் இவ்வெக்காள வொலி" எல்லாராலும் மிகக் கவனமாகக் கேட்கப்பட்டது; எல்லாக் கக்ஷியினர்களாலும் வரவேற்கப்பெற்றது.

**சட்டசபையில்**

அதே 1895-ம் வருஷத்தில் திலகர் பம்பாய் சட்டசபை அங்கத்தினராக ஸ்தல ஸ்தாபனங்களால் தெரிந்தெடுக்கப் பெற்றார். அக்காலத்துச் சட்டசபைகள் வெறும் வாதஞ் செய்யும் சங்கங்கள் போலவேயிருந்தன; ஜனப்பிரதிநிதிகளுக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. அவர்கள் அங்கு நல்ல உபந்நியாசங்கள் செய்து தங்களைத் திருப்திப்படுத்திக் கொள்ளலாம்; ஆனால், இராஜாங்க நிர்வாகத்தை எள்ளளவும் திருத்த முடியாது சட்டசபை அப்பொழுது அமைக்கப் பட்டிருந்த தன்மையில், திலகர் தேசத்திற்குப் பிரயோஜன மாயிருக்க முடியவில்லை. அவர் சட்டசபையில் இருந்த சிறிது காலத்தில் சட்டஞ் செய்பவருக்கு வேண்டிய திறமைகளை யெல்லலாம் வெளிப்படுத்தினார்; ஆனால், அந்நாட்களில் வேலை செய்வதற்கு அங்கு இடமில்லை. ஆதலால், திலகர் இராஜாங்க நிர்வாகத்தின் குற்றங் குறைகளை எடுத்துக் கூறிக்கொண்டு வெறும் பக்கப்பாட்டுப் பாடுப்வர் போலி

ருந்தார். அவர் இராஜாங்க இயந்திரத்தையும், அதன் நானாவித உறுப்புக்களையும் நன்றாகப் பரீக்ஷித்து அவற்றின் குணதோஷங்களை நிர்த்தாக்ஷண்யமாக எடுத்துச் சொல்லி வந்தார். இராஜாங்கத்தார் பிரியமாகப் போற்றிவந்த கோட்பாடுகளெல்லாம் அவருடைய இரக்கமற்ற தர்க்க வாதங்களால் நாசஞ் செய்யப்பட்டன. சட்டசபையின் ஆலோசனைக்கு வந்த பிரச்சனைகளுக்கு ஆதாரமான தத்துவங்களில் அவர் பிரவேசித்து, அவர் செய்த கடுமையான வாதங்களின் முன்னிலையில் இராஜாங்க அங்கத்தினர்கள் நடுநடுங்கும்படி செய்தார். இராஜாங்கத்தார் அவரைப் பிடித்தபிடி விடாத ஓர் எதிரியென்று கண்டு, அவரை இரக்கமற்ற விதத்தில் துன்பப்படுத்தினர். 1897-ம் வருஷத்தில் அவர் பேரில் இராஜாங்கத்தார் இராஜ நிந்தனை வழக்குக் கொண்டு வந்தபின் அவர் தமது சட்டசபை அங்கத்தினர் பதவியை இராஜிநாமாச் செய்தார்.

30.7.1933

✤ ✤ ✤

# 6. அதைரியமடைந்த மக்களின் உள்ளத்தில் ஆண்மையைப் புகுத்தின அருங்கிளர்ச்சி

## வெள்ளை விஷமிகள் சிருட்டித்து விட்ட இராஜ துரோக வழக்கில் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை

1896 - 97- ம் வருஷத்துப் பஞ்சமானது திலகருக்கு அமைதியின்மையை உண்டுபண்ணிற்று. கவர்ன்மெண்டாருடைய உதாசீனமும் தமது தேச மக்களுடைய உதவியற்ற தன்மையும் அவருக்கு நடுக்கத்தைக் கொடுத்தது. அவர் ஒரு பெரிய வேலைத் திட்டத்தைத் தயாரித்தார். பஞ்சநிவர்த்திச் சட்டத்தின் ஷரத்துக்களை ஜனங்களுக்குக் கற்பிப்பதற்காகவும், பஞ்ச நிவர்த்திக்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் ஜனங்களுடைய நிலைமையைப்பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காகத் தமது சகாக்களை மகாராஷ்டிரத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பினார். திலகர் ஓர் ஒழுங்கான வழியில் கிளர்ச்சியை நடத்தினார்; ஜனங்களுக்குள் ஆண்மையையும் தைரியத்தையும் புகுத்தினார். மகாராணியவர்களும், இந்திய மந்திரியும் அவசியமானால் கடன் வாங்கத் தயாராயிருக்குங் காலத்தில் ஜனங்கள் தங்கள் நிலங்களை விற்றுத் தீர்வை செலுத்த வேண்டுவது அவசியம் இல்லையென ஜனங்களுக்கு அவர் சொன்னார்.

கவர்ன்மெண்டார் திலகருடைய ஒழுங்கான கிளர்ச்சியைத் துவேஷத்தோடும் அச்சத்தோடும் பார்த்தனர். அதனால், அவருடைய ஒத்துழைப்பையும், நிருமாண ஆலோசனையையும் உபயோகப்படுத்திக்கொள்ளத் தவறி விட்டனர். பிரசாரகர்களிற் சிலர் தொந்தரவு செய்யப்பட்டனர். புரொபஸர் ஸாதர் காட்டிலாகாக் குற்றங்களுக்கு உடந்தையாயிருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டார். பஞ்ச நிவர்த்திச் சட்டத்தின் ஷரத்துக்களை

ஜனங்களுக்கு விளக்கிக்காட்டும் துண்டுப் பிரசுரங்களை வினியோகம் செய்ததற்காக தாநா நகரக் கனவான்கள் மூவர் குற்றஞ் சாட்டப் பெற்றனர். ஸ்ரீ ஆப்டே விசாரணை செய்யப்பட்டு ஒரு வருஷம் மெய்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். கவர்ன்மெண்டாருக்கு மனுச் செய்யும் உரிமை பூனாநகர சர்வஜன சபையிடமிருந்து பறிக்கப்பட்டது.

அறிவில்லாத உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்ட இப்புத்தியற்ற குற்றச்சாற்றுகள் திலகரை எள்ளளவும் அதைரியப்படுத்தவில்லை உத்தியோகத் தேவதைகளின் நியாயமற்ற வெடுவெடுத்த கோபத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், திலகர் அடக்குமுறைகளுக்கு மாறாகக் கிளர்ச்சி செய்தார். அவர் முயற்சிகள் விசேஷ வெற்றி தந்தன. ஜனங்கள் அவரால் நடத்தப்படுவதற்குச் சித்தமுடையவர் களாகி, அவர் சொல்லியபடி நடந்து வந்தார்கள். ஜனங்களுடைய இந்த விழிப்பிலிருந்து திலகர், இராஜீய சுதந்தரத்திற்கு அவசியமான இராஜீய நிருமாண வேலைக்கு உபயோகப்படத்தக்க ஏராளமான சக்திகள் தமது தேசத்து மக்களிடம் இருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டார். பின்னர் பஞ்சத்திலிருந்து 'பிளேக்' என்னும் தொத்துநோய் உண்டாயிற்று. திலகர் பந்தோபஸ்தான ஓர் இடத்திற்கு ஓடிப்போவதற்குப் பதிலாக கஷ்டப்படுகிற ஜனங்களுடன் அவர்களுடைய கஷ்டகாலம் முழுவதும் இருந்தார். அவர் ஊர் ஊராகச் சென்று ஜனங்களுடைய கஷ்டங்களைக் கவர்ன் மெண்டு அதிகாரிகளுக்கும், கவர்ன்மெண்டு அதிகாரிகளின் எண்ணங்களை ஜனங்களுக்கும் எடுத்துக் கூறிவந்தார். அவர் தாமே பிளேக் ஆஸ்பத்திரியொன்றை ஏற்படுத்தினார்.

**கோரமான கொலைகள்**

மிஸ்டர் ராண்ட் என்பவரைத் தலைமையாகக் கொண்ட பிளேக் கமிட்டியொன்றைக் கவர்ன்மெண்டார் நியமித்தனர். அந்தப் பிளேக் கமிட்டியார் உண்மையில் நல்ல எண்ணத்துடன் வேலை செய்தனர். ஆனால், அந்தத் தொத்துநோய் பரவாமல் தடுப்பதற்காக அவர்கள் கையாண்ட நடவடிக்கைகளில் வேண்டிய ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவில்லை. ஜனங்களுடைய ஜாதி, மத உணர்ச்சிகளைப் பொருட்

படுத்தவில்லை. வீடுகளைச் சோதனை செய்து நோயாளிகளை அப்புறப்படுத்தும் வேலை பட்டாளத்துச் சிப்பாய்களிடம் ஒப்பிக்கப்பட்டது. பிரிட்டிஷ் சிப்பாய்கள் சண்டை செய்வதற்குத் தகுதியுடையவர்களாயிருக்கலாம்; ஆனால், இந்தமாதிரி வேலையைச் செய்வதற்கு அவர்கள் அதிசயப்படத் தக்க விதத்தில் தகுதியற்றவர்களாயிருந்தார்கள். இந்தச் சிறு விஷயத்தைத் தெரிந்து கொள்ளக்கூடிய புத்தியில்லாதவர்களாயிருந்தார்கள் சர்க்கார் அதிகாரிகள். சிப்பாய்கள் ஜனங்களுக்குப் பெரிய கோபத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணி விட்டார்கள். திலகர் இதனை அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டினார்; ஆனால், அவருடைய புத்திமதி அவர்களுடைய செவிகளுக்குள் நுழையவில்லை.

பிளேக் நோய் சீக்கிரம் அடங்கிவிட்டது. ஆனால் பிளேக் கமிட்டியாரால் நடத்தப்பட்ட பகுத்தறிவற்ற நடவடிக்கைகளால் உண்டான புழுக்கமான அதிருப்தியும் மனக்கடுப்பும் அடங்கவில்லை. தாமோதர சாப்பிக்கார் என்னும் ஒரு மதோன்மத்தன் மிஸ்டர் ராண்டைக் கவர்னர் மாளிகையில் நடந்த ஒரு விருந்திலிருந்து திரும்பி வருகிற வழியில் 1897-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதி இரவு கொலை செய்து விட்டான். லெப்டனண்டு அய்ரஸ்டும் கொலை செய்யப்பட்டார். இந்தக் கோரமும் மிருகத்தனமுமான கொலைகள் ஒரு திகிலுணர்ச்சியைப் பரவச் செய்தன. திலகர் சந்தேகிக்கப்பட்டார். அவருடைய சுதருமத்திற்கு அஞ்சாத விரோதிகள் அவருடைய செல்வாக்கைக் கெடுப்பதற்காகவும் அவருடைய வேலைக்குக் கெட்ட பெயரை உண்டு பண்ணுவதற்காகவும் இந்தக் கொலைகளை மிகச் சாமர்த்தியத்தோடு பிரமாதப்படுத்தினார்கள். துரதிர்ஷ்டவசமாக இந்தக் கொலைகள் மஹாராணியார் அரசாட்சியின் ஐம்பதாவதாண்டு நிறைவு விழா(ஜூபிலி)த் தினத்தில் நடந்தன.

திலகர் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பற்றித் தருமாதருமத்திற்கு அஞ்சாமல் எப்பொழுதும் எழுதிக் கொண்டுவந்த இந்திய - இங்கிலீஷ்காரர் பத்திரிகைகள் ஜூபிலி தினத்தில் இந்தக் கொலைகள் நடந்ததைப்பற்றி மிகைப்படுத்தி எழுதின. இராஜத்துரோகத்தைப் பற்றிய இந்தியன் பெனல்

கோர்டின் பிரிவை உபயோகிக்க வேண்டுமென ஒரு கூச்சல் கிளம்பிற்று. பூனாப் பத்திரிகைகளிலிருந்து சில வாக்கியங்களை எடுத்தெழுதி, அவற்றிற்கும் இந்தக் கொலைகளுக்கும் ஒரு சம்பந்தம் கற்பிக்கப்பட்டது. திலகருடைய குற்றமற்ற குறிப்புரைகளை அவற்றின் முன், பின் வாக்கியங்களிலிருந்து பிரித்தெடுத்துப் பிரசுரித்ததானது இந்திய - இங்கிலீஷ்காரரர் களுடைய நெஞ்சத்தில் மிக மிகப் பெரிய சந்தேகத்தை உண்டுபண்ணிற்று. இந்திய - இங்கிலீஷ்காரர் பத்திரிகைகள் சாதுரியமாகப் பின்வருமாறு வாதித்தன:- "1897-ம் வருஷம் மே மாதம் 11-ந் தேதி திலகர் அதிகாரிகளுடைய அக்கிரமங் களைப்பற்றி "வெறுங் கூச்சலிடுதலால் பயனில்லை" என்ற தலைப்பெயருடன் ஒரு வியாசத்தைப் பிரசுரித்தார்.

ஜூன் மாதம் 12-ந் தேதி அப்சல்கானை சிவாஜி கொலை செய்தது நியாயந்தான் என்று ரூபித்து, இந்தியாவை ஆளுவதற்கு அந்நிய நாட்டினருக்குச் செப்புப் பட்டயம் கொடுக்கப் படவில்லையென்று ஒரு வியாசத்தைப் பிரசுரித்தார். இவ் வெழுத்துக்களால் திலகர் மிஸ்டர் ராண்ட், லெப்டனெண்டு அய்ரஸ்ட் கொலைகளுக்கு வழி தீட்டினார். இவ்வெழுத்துக் களின்பலனாகஇந்திய-இங்கிலீஷ்காரர்களுக்கும் இந்தியர் களுக்கும் பகைமையுணர்ச்சிகள் உண்டாயின.

ஆரம்பத்தில், கவர்னர் லார்டு சாண்ட் ஹர்ஸ்டும் அவருடைய கவர்மெண்டு உத்தியோகஸ்தரும் தங்கள் மூளைகளைக் குளிர்ச்சியாக வைத்துக் கொண்டிருந்தார்கள்; ஆனால், முடிவாக அவர்கள் இந்திய - இங்கிலீஷ்காரரர் களுடைய கூச்சலுக்குச் செவிசாய்த்து, அடக்குமுறைகளைக் கையாண்டு இந்திய - இங்கிலீஷ்காரர்களின் நோக்கம் போல நடக்கலாயினர். டைம்ஸ் ஆப் இந்தியாப் பத்திரிகை தம்மைப் பற்றி ஜாக்கிரதையில்லாமல் எழுதிய விஷயங்களுக்காக அதன் பேரில் சட்டப்படி நடவடிக்கைகள் நடத்துவதற்காகத் திலகர் பம்பாய்க்குச் சென்றார். அங்கே அவர் 1897-ம் வருஷம் ஜூலை மாதம் 27-ந் தேதி கைது செய்யப்பட்டார் கேசரி பத்திரிகையின் அச்சுக்காரரும் வேறு பல பத்திரிகாசிரியர்களும் கைது செய்யப்பட்டார்கள். அவர்களிற் சிலர் தாழ்வான மன்னிப்புப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துத் தம்மைக் காப்பாற்றிக்

கொண்டனர். ஆகஸ்டு மாதம் 4 -ந் தேதி திலகர் ஜாமின் பேரில் விடப்பட்டார்.

மகாராஷ்டிர பாஷையே தெரியாத ஆறு ஐரோப்பியர்களைக் கொண்ட ஒன்பது ஸ்பெஷல் ஜூரிகள் முன்னிலையில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்டிரேச்சி ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி கேஸை விசாரணை செய்யத் தொடங்கினார். திலகருக்கு விரோதமாகத் தீர்ப்புச் சொல்லப்பட்டது. அவர் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். பிரிவிக் கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது; ஆனால், அதனால் பயன் ஒன்றும் இல்லை. திலகரை இராஜத்துரோகத்திற்காகக் குற்றஞ்சாற்றப்பட்ட விஷயத்தைப்பற்றிப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் விவாதித்தெழுதின. "இராஜத்துரோகம்" என்பதற்குக் "கவர்ன்மெண்டாரிடம் அன்பில்லாதிருத்தல்" என்று மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்டிரேச்சி செய்த வியாக்கியானத்திற்கு விரோதமாக அப்பத்திரிகைகள் எழுதின.

அந்த வருஷம் நடந்த இந்தியன் நேஷனல் காங்கிரஸ் தனது பூரண அனுதாபத்தைத் திலகருக்குத் தெரிவித்தது. ஹானரபிள் மிஸ்டர் சுரேந்தரநாத பானர்ஜி செவிடுபடும்படியான சிரிப்புக்களுக்கு இடையில் "என் சார்பாகவும், இந்தியாவிலுள்ள சகல இந்தியப் பத்திரிகைகள் சார்பாகவும் நான் சொல்லுகிறேன். திலகர் பேரில் கொண்டு வந்த குற்றச்சாட்டில் அவர் நிரபராதியென்று எங்களுடைய உள்ளங்களில் உள்ளூர உணர்கிறோம். வேறுமாதிரியான நீதி வழங்கப்பட்டிருக்கலாம்; ஆனால், உண்மையான நீதி அடியோடு தவறிவிட்டது. சிறை வீட்டிலிருக்கிற திலகருக்கு என்னுடைய அனுதாபம் செல்கின்றது; அவருக்காக இந்திய ஜாதிசமூகம் கண்ணீர்விட்டு அழுகின்றது."

இங்கிலாந்தில் புரொபஸர் மாக்ஸ்முல்லர் திலகருடைய பாஷாஞான மேம்பாட்டிற்காகவாவது அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று மஹாராணியாருக்கு ஒரு மனுச் செய்தார். இதன் பயனாகத் திலகர் தீர்ப்புக்கால முடிவிற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப் பெற்றார். அவர் சிறையிலிருந்த காலத்தில் சுவர்களுக்கும் சாய்மான நாற்காலிகளுக்கும் வர்ணம் பூசும் வேலை கொடுக்கப்பட்டார்.

ஆனாலும், அவர் இராத்திரி காலங்களில் இரண்டு மணிநேரம் மெழுகுவர்த்தி உபயோகித்துக் கொள்ளும்படி அனுமதிக்கப் பெற்றார். இந்த நேரங்களைத் தமக்குப் பிரியமான வேலையாகிய வேதங்களின் பூர்வகால ஆராய்ச்சியில் அவர் செலவு செய்தார். சிறைவாழ்க்கைக் கஷ்டங்களும், சிறைவாழ்க்கையின் ஏக ரீதியான தன்மையும் அவருடைய வெல்லமுடியாத ஆத்மாவைப் பாதிக்கவில்லை; ஆனால், அவர் சிறையினின்று விடுதலை அடைந்தபோது அவர் ஓர் உடைந்த சரீரியாய் வெளிவந்தார். பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியாபேரிலும், குளோப் என்னும் ஓர் இங்கிலீஷ் பத்திரிகைபேரிலும் அவர் மான நஷ்டத்திற்காக வியாச்சியம் செய்தார்; இவ்விரண்டு பத்திரிகைகளும் தமது கெட்ட நடத்தைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டன; அதன்பின் திலகர் அவற்றின் பேரில் நடத்திய வியாச்சியங்களை நிறுத்திக் கொண்டார்.

24.9.1933

✤ ✤ ✤

# 7. மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள்

## மிதவாதிகள் தோற்றுவித்த பிளவு

## காங்கிரஸ்களில் திலகரின் கர்ஜனை

**சிவாஜி, கணபதி உற்சவங்கள்**

திலகர் முறையே 1893-ம் வருஷத்திலும் 1895-ம் வருஷத்திலும் ஏற்படுத்திய கணபதி உற்சவமும், சிவாஜி உற்சவமும் மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே தேசாபிமானத்தையும், தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கின. ஆசாரச் சீர்திருத்தக்காரர்களின் தீய செல்வாக்கைத் தொலைப்பதற்காகத் திலகர் இந்த உற்சவங்களை ஏற்படுத்தி யிருக்கக்கூடும். இது முன் கூறியபடியே திலகர் தமது உள்ளுணர்ச்சியை ஹிந்து மதத்திலிருந்தே கொண்டார்; அதனால் அவர் ஆசாரச் சீர்திருத்தம் அல்லது இராஜீய விஷயங்கள் சம்பந்தமான தேசீய இயக்கம் ஹிந்து மதக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பினார். இந்த நோக்கத்துடனேதான் அவர் கணபதி உற்சவத்தை ஆரம்பித்தார், இந்த உற்சவம் இன்று வரையில் மகாராஷ்டிர தேசம் முழுவதிலும் மிக ஆடம்பரத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. இந்த உற்சவம் பல வகுப்பினர்களையும் பொதுஜனங்களையும் ஒன்றுபடுத்துகின்றது; பல திறப்பட்ட ஜனங்களிடையே ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கின்றது. மிதவாதிகள் விலகி நின்றபோதிலும், சில வருஷங்களுக்குள் இந்த உற்சவம் ஒரு தேசீய ஸ்தாபனமாய்விட்டது. சிவாஜி உற்சவமும் அதே மாதிரியான நோக்கத்துடனே உண்டு பண்ணப்பட்டது; அதே மாதிரியாக ஜனங்களை ஒற்றுமைப் படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருந்தது. மகாராஷ்டிர தேசத்துப் பல வகுப்பினருள்ளும் பல மதத்தினருள்ளும்

சிவாஜியின் பெயர் மேலான தேசாபிமானத்தையும் தேசீய உணர்ச்சியையும் உண்டுபண்ணுகின்றது; இராஜீய விடுதலைக் கொள்கைக்குப் பிரதிநிதியாய் விளங்குகின்றது. ஆதலால் சிவாஜி உற்சவம் உயர்ந்தோரையும், தாழ்ந்தோரையும், வலியோரையும், எளியோரையும், எல்லா வகுப்பு ஜனங்களையும் ஒன்றுபடுத்துகின்றது.

இந்த உற்சவங்களின் பயனாக மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே வளருகின்ற ஒற்றுமையும் சகோதரத்துவமும் அதிகாரவர்க்கத்தினருக்கு ஒரு பெரிய மனக்கலக்கத்தை உண்டுபண்ணின; அதனால், அவர் இந்த இயக்கத்தை மிக ஜாக்கிரதையாகக் கண்காணிக்கத் தொடங்கினார். அதிகார வர்க்கத்தினருக்குப் பயந்தவர்கள் திலகருடனும் சேர்ந் துழைக்கப் பயமடைந்தார்கள்; அவர்கள் தங்களை மிதவாதி களென்றும், திலகர் கோஷ்டியினரை அமிதவாதிகளென்றும் சொல்லிவந்தார்கள். இந்தச் சமயத்தில் ஹிந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் பல இடங்களில் கலகங்கள் நடந்தன; இக்கலகங்களுக்குக் காரணம் திலகர் சம்பந்தமுடைய பசுப்பாதுகாப்புச் சங்கங்களின் உற்பத்தியேயென்று இந்திய - இங்கிலீஷ்காரர் சொல்லிவந்தனர்; ஆனால், திலகர் அவற் றிற்குக் காரணம் கவர்ன்மெண்டார் கைக்கொண்டுள்ள "பிரித்தாளும்" கொள்கையே என்றனர். ஸர். பி. யம். மேத்தா தவிர மற்றைய மிதவாதிகள் கூட இந்திய - இங்கிலீஷ்காரர் சொன்னதையே நம்பினார்கள். இதன் முடிவாகத் திலகருக்கும் மிதவாதிகளுக்கும் ஏற்பட்டிருந்த வேற்றுமையானது வளர்ச்சி யுற்றது. அதனால் காங்கிரஸ் பந்தரில் ஆசாரச் சீர்திருத்த மகாநாடு நடத்துவதைப்பற்றிய 1895-ம் வருஷத்தில் விவாதம் ஏற்பட்டது. மிதவாதக் கக்ஷியார் முழுத் தோல்வி யடையும்படியாகத் திலகருக்குச் சர்வஜன சபையில் பெரும்பாலாருடைய வோட்டுகள் கிடைத்தன.

சமாதானப் பேச்சு நடந்தது. சமாதானம் செய்வதற்காக ஸ்ரீ கோக்கலே மிகப் பிரயாசைப்பட்டார். ஆனால் சமாதானம் முடியவில்லை. திலகருடன் சேர்ந்துழைக்க முடியாதவர்களாய், அவருடைய எதிரிகள் தக்ஷண சபை என்ற ஒரு சங்கத்தைப் புதிதாக உண்டு பண்ணுவதாகத் தீர்மானித்தார்கள். அது

1895-ம் வருஷம் நவம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. மிதவாதக் கக்ஷியின் ஜனனம் என்று சொல்லும்படியான இந்தச் சங்கம் இந்திய இராஜீய வாதிகளுக்குள் ஒரு பிளவை உண்டு பண்ணிற்று. இப் பிளவானது ஒரு கக்ஷிக்காரரை மற்றொரு கக்ஷிக்காரருக்கு விரோதமாக உபயோகிக்கக் கவர்ன்மெண்டாருக்கு உதவியா யிருந்தது. இக்கக்ஷி வேற்றுமைகளை ஒழிப்பதற்காகத் திலகர் தம்மால் கூடியவரையில் பிரயாசைப் பட்டார். ஆனால் அவருடைய முயற்சிகள் யாதொரு பயனையும் தரவில்லை. இராஜீய வாழ்க்கை ஒழுங்கீனமாயது. ஒற்றுமையின்மையும், பிளவும் ஏற்பட்டன. சில தலைவர்களின் கோழைத் தனத்தையும் உறுதியின்மையையும் சுயநலத்தையும் கண்டு வெறுப்படைந்து திலகர் பயங்கரமான சண்டையைத் தொடங்கி ஒவ்வொரு வருஷத்துக் காங்கிரஸ் மகாநாட்டிலும் நடத்தி வந்தார். 1899-ம் வருஷம் லக்னௌ நகரில் நடந்த காங்கிரஸில் லார்டு சாண்ட் ஹாஸ்டின் ஆட்சியைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று திலகர் கூறினார். அவருடைய எதிரிகள் அந்தத் தீர்மானத்திற்கு விரோதமாகப் பெருங்குழப்பம் செய்தார்கள். திலகர் அவ்விஷயத்தில் பிடிவாதம் செய்தால், காங்கிரஸ் தலைவர் தமது பதவியை இராஜிநாமாச் செய்து விடுவதாகச் சொல்லிப் பயப்படுத்தினார். காங்கிரஸின் நன்மையை உத்தேசித்துத் திலகர் தமது தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

சத்தாரா நகரில் நடந்த மாகாண மகாநாட்டிலும் அதேமாதிரியான தீர்மானத்தைப் பிரேரேபிக்க வேண்டுமென்றார் திலகர். அதன் தலைவராகிய ஸ்ரீ ஜி. கே. பரேக் தமது பதவியை இராஜிநாமாச் செய்துவிடுவதாகச் சொல்லிப் பயப்படுத்தினார். மகாநாட்டின் நடவடிக்கை பற்றிய ரிப்போர்டில் அந்தத் தீர்மானத்தைப் பற்றிக் குறிக்கவேண்டுமென்று கடைசியாக முடிவு செய்யப்பட்டது. அக்காலத்துக் காங்கிரஸூம் காண்பிரன்ஸ்களும் மேம்போக்கானவையா யிருந்தன. காங்கிரஸ் தலைவர்களின் நோக்கம் கவர்ன்மெண்டின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்பதாயிருந்தது. அக்காலத்துத் தலைவர்களிடம் ஸ்திரமாவது ஊக்கமாவது இருக்கவில்லை. பம்பாயின் சிம்மமாகிய ஸர். பி. எம் மேத்தாவும்

கூட மிகச் சாதுவாகிவிட்டடார். இந்திய தேசீயத்தின் முதன்மையான சிற்பியாகிய லார்டு கர்ஸனுடைய கர்வமும் அகங்காரமும் நிறைந்த செயல்கள் எல்லாக் கக்ஷியார்களையும் ஒன்றுபடுத்தித் தேசம் முழுவதிலும் ஒரு பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணிய காலம் வரை மேற்கண்டபடியே காரியங்கள் நிகழ்ந்து வந்தன.

8.10.1933

✤ ✤ ✤

# 8. விரோதிகளின் ஏவுதலால் விதவைராணி தொடர்ந்த மரண சாஸன வழக்கு

## இந்திய நீதி ஸ்தலங்களில் ஏற்பட்ட பிரதிகாலங்களும் பிரிவிக் கவுன்சிலில் கிடைத்த இறுதி வெற்றியும்

*1900-ம் வருடம் முதல் 1905-ம் வருடம் வரையில் சுமார் 5 வருஷ காலம் திலகர் இராஜீய விஷயங்களில் சுறுசுறுப்பாகக் கலந்து கொள்வதற்கு அசக்தராயிருந்தார். அந்தக் காலத்தில் அவர் தாய்மகராஜ் கேஸ் சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டிருந்தார். திலகரது வாழ்க்கையில் அவர் மிகமிகக் கஷ்டங்களை அனுபவித்த காலம் அதுதான். அவருக்கு விரோதமான காரியங்கள் உக்கிரமாக நிகழ்ந்தன. சிருஷ்டிணை செய்தாரென்றும், பொய்ச்சாக்ஷியம் உண்டுபண்ணினாரென்றும் அவர் குற்றஞ் சாட்டப்பட்டார். ஜனங்களுடைய பார்வையில் அவரைக் கெட்டவராக்குவதற்காகச் செய்யக் கூடிய எத்தனம் ஒவ்வொன்றும் செய்யப்பட்டது. 1897-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி திலகர் தமது சிநேகிதரான. மரணத்தருவாயிலிருந்த பாவாமகாராஜாவைக் கண்டார். இறக்கும் நிலைமையில் இருந்த அம் மகாரர்ஜா ஒரு வில் (மரணசாஸனம்) எழுதினார். அவர் ராவ்சாகிபு கிருத்திகார், கனம் மிஸ்டர் ஜி எஸ். கப்பர்தே, திரு. கம்போஜ்கார், திரு, நாக்புர்கார் இந்நால்வருடன் திலகரும் அந்த வில் சாஸனத்தின் காரியங்களை நிர்வகிக்கும் தருமகர்த்தர்களாயிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். அந்த வில்லில் பின்வரும் முக்கிய வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன:-*

*“என்னுடைய மனைவி இப்போது கர்ப்பவதியாயிருக்கிறாள். அவள் புத்திரனைப் பெறவில்லையானால், அல்லது அவள் பெற்ற புத்திரன் சீக்கிரம் இறந்துபோனால்,*

என்குடும்பத்தின் பெயர் நிலைநிற்பதற்காகத் தருமகர்த்தர் களின் ஆலோசனையின்பேரில், அவசியமான போதெல்லாம், சாஸ்திரப்படி ஒரு பையனை என் மனைவி சுவீகாரஞ் செய்து கொள்ளவேண்டும். அந்தச் சுவீகாரப் புத்திரனுக்கான அவன் யுக்தவயது அடையும் வரையில் என்னுடைய ஸ்தாபா சங்கம சொத்துக்களை யெல்லாம் மேற்கண்ட ஐவரும் மானேஜ் மெண்டு செய்து வரவேண்டும்."

மகாராஜாவின் மனைவியார் ஒரு புத்திரனைப் பெற்றார். ஆனால் அவன் இரண்டு மாதம் கழித்து இறந்து போனான். திலகர் சிறைப்பட்டிருந்த காலத்தில் மிஸ்டர் கப்பர்தே அந்தச் சொத்துக்களைப் பரிபாலித்து வந்தார். திலகர் சிறையிலிருந்தே பரிபாலனம் செய்யத் தொடங்கினார். அந்தச் சொத்துக்கள் கடன்களில் மூழ்கியிருந்தன. செலவுகளைக் கண்டிப்பாகக் குறைப்பதாகிய ஒரு வழியால் மாத்திரம் அக்கடன்களை நிவர்த்தி பண்ணக்கூடியதாயிருந்தது. கெட்ட புத்தி சொல்பவர் களால் சூழப்பட்டிருந்த மகாராஜாவின் மனைவியாருக்கு இது மிகமிக அதிருப்தியை உண்டு பண்ணிற்று. திலகரும் மற்றைய தருமகர்த்தர்களும் மகாராஜாவின் மனைவியாருடைய சுவீகாரத்திற்கு ஒரு பையனைக் கண்டுபிடிப்பதற்காகத் தம்மால் கூடிய அளவு பிரயாசைப்பட்டார்கள். தகுதியான பையன் ஒருவனும் அகப்படவில்லை. கோலாப்பூர் பண்டிட் மகா ராஜாவின் தம்பியாகிய பாலமகாராஜாவைச் சுவீகாரம் செய்யும் படியாக மகாராஜாவின் மனைவியாரைத் தூண்டுவதற்கு அந்தரங்கமாக ஓர் எத்தனம் நடந்தது. அந்த விஷயத்தை முடிவு செய்வதற்காக 1901-ம் வருஷம் ஜூன்மாதம் 18-ம் தேதி தருமகர்த்தர்கள் ஒரு கூட்டம் கூடினார்கள். கோலாப்பூரையும், குடும்பத்தின் பூனாக் கிளைகளையும் சேர்ந்த எந்தப் பையனும் அங்கீகரிக்கப்படவில்லை.

அரங்கபாத்து ஜில்லாவின் ஒரு கிராமமாகிய பாபிரியில் ஒரு பையன் கிடைப்பானா என்று பார்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மகாராஜாவின் மனனவியாரும், திலகரும், கப்பர்தேயும் அந்த கிராமத்திற்குப் போய் ஜகநாத் என்னும் ஒரு பையனைச் சுவீகாரத்திற்குத் தெரிந்தெடுத்தார்கள். மகாராஜாவின் மனைவியாரும் அந்தப் பையனைச் சுவீகாரம்

செய்து கொள்ள விரும்பினார். அந்தப் பையனைச் சுவீகாரம் செய்து கொள்ளத் தாம் விரும்புவதாக அவனுடைய தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதினார். சாஸ்திரிகள் கூட்டத்தின் முன்னிலையில் மதச் சடங்குகள் செய்து அந்தப் பையன் சுவீகாரம் செய்து கொள்ளப்பட்டான். எல்லா காரியங்களும் சிறிது காலத்திற்கு நன்றாக நடந்தன. என்றாலும், திலகருடைய விரோதிகள் அவரைக் கெடுத்துவிட விரும்பி, தக்ஷண சர்தார்களின் ஏஜெண்டும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜுமான மிஸ்டர் ஆஸ்டனிடம் போய்த் திலகர் கொடுமை செய்வதாகப் பிராது செய்யும்படி மகாராஜாவின் மனைவியாரைத் தூண்டினார்கள். தம்முடைய துர்மந்திரிகளின் கைக்கருவியாகி, மகாராஜாவின் மனைவியார் 1901-ம் வருடம் ஜூலை மாதம் 29-ம் தேதி மிஸ்டர் ஆஸ்டனிடம் சென்று திலகருக்கும் மற்றைய தருமகர்த்தர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த மரணசாசன அங்கீகார உத்தரவை ரத்துச் செய்யவேண்டுமென்று ஒரு மனுச் செய்தனர். மிஸ்டர் ஆஸ்டன் கேஸை விசாரித்து, மரணசாசன அங்கீகார உத்தரவை ரத்துச் செய்து சுவீகாரத்தை அங்கீகாரம் செய்யாது திலகர் பேரில் ஏழு குற்றங்களை ஏற்படுத்தி அவரைக் கிரிமினல் புரோசீஜர் கோர்ட் 476-வது பிரிவுப்படி நகர மெஜிஸ்டிரேட்டின் விசாரணைக்கு அனுப்பினார்.

அந்தக் குற்றங்களில் தருமகர்த்தர்களில் ஒருவரான மிஸ்டர் நாக்புர்கார் நம்பிக்கை மோசம் செய்தாரென்ற பொய்ப் பிராதும் பொய்ச்சாக்ஷியம் உண்டு பண்ணியது, சிருஷ்டிணை செய்தது முதலியவையும் அடங்கியிருந்தன. தம்மீது மிஸ்டர் ஆஸ்டன் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறதாகவும் மிஸ்டர் ஆஸ்டனைத் தாய்மகாராஜ் பலமுறை கண்டு பேசியிருக்கிறதாகவும் அக்காரணங்களால் கேஸை ஹைக்கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்றும் திலகர் ஒரு மனுச் செய்தார். அந்த மனுத்தாரர் பேரில் செய்யப்பட்ட அப்பீலில் மரணசாசன அங்கீகாரத்தைப்பற்றிய தீர்ப்பு மாற்றப்பட்டது. பிற்பாடு திலகர் பேரில் ஏற்படுத்தப்பட்ட ஏழு குற்றங்களையும் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் மெஜிஸ்டிரேட் கேஸை விசாரணை செய்தார். எட்டு மாத காலம் நடந்த நீண்ட விசாரணையின் பின் முதலாவது குற்றம்

தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் பொய்ச்சாக்ஷியம் உண்டு பண்ணிய குற்றத்தைப் பற்றிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. 1903-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி திலகர் தண்டிக்கப் பட்டு 18 மாதக் கடுங்காவலும் 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டார். அப்பீல் செய்வதற்கு வேண்டிய தகவல்களைத் தமது வக்கீல்களுக்குச் சொல்வதற்குக்கூட போதிய நேரம் கொடாமல், அருவெறுக்கத்தக்க அவசரத்துடன் திலகர் ஜயிலுக்குக் கொண்டுபோகப்பட்டார். அப்பீலில் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் லூக்கஸ் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பைக் குறைத்தார்.

1904-ம் வருடம் ஜனவரி மாதம் 4-ம் தேதி திலகர் ஏர்வாடா ஜயிலுக்குக் கொண்டுபோகப்பட்டார். என்றாலும், 8-ந் தேதி ஹைக்கோர்ட்டார் உத்தரவின்பேரில் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவர் சிறைக்குக் கொண்டு போகப்பட்ட பொழுது, அவர் ஒரு சாதாரண குற்றவாளி போலவே கைவிலங்கு இடப்பட்டிருந்தார். இவ்வாறு செய்தது மிகமிக வெட்கப்படத்தக்க அவமரியாதையான செய்கை. ரிவிஷன் அப்பீல் ஹைக்கோர்ட்டார் முன் 1904-ம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ம் தேதி விசாரணைக்கு வந்தது. திலகரின் தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. அவருடைய அபராதத் தொகையை வாபஸ் செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டது. கிரிமினல் கேஸ் முடிந்துபோகவே சுவீகாரத்தைப்பற்றிய சிவில் கேஸ் முதலாவது வகுப்பு சபார்டினேட் ஜட்ஜ் முன் 1904-ம் வருடம் ஜூன் மாதத்தில் விசாரணைக்கு வந்தது. அது திலகருக்கு அனுகூலமாக முடிந்தது. அதன் பேரில் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. இரண்டு வருஷங்களுக்குப் பின் அது திலகருக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்யப்பட்டது. அதன்பேரில் திலகர் பிரிவிக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கேஸை ஜயித்தார். ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு கவர்ன்மெண்டார் அநாவசியமாகக் காலதாமதப்படுத்தினர்.

1917-ம் வருடம் பிப்ரவரி மாதம் வரையில் ஜகநாதுக்குச் சமஸ்தானம் ஒப்பிக்கப்படவில்லை. விரோதப்பான்மையைக் கொண்ட ஒரு கவர்ன்மெண்டோடும் தமக்கு விரோதமாகச் சூழ்ச்சிகளும் சதியாலோசனைகளும் செய்து கொண்டிருந்த

பல எதிரிகளோடும், துர்மந்திரிகளுடைய கைகளில் சிக்கி நடந்துகொண்டிருந்த ஒரு விதவையோடும் திலகர் தமது யோக்கியதையை நிலை நாட்டுவதற்காகப் பல வருஷங்கள் சண்டையிட வேண்டியதிருந்தது. அவருடைய ஐயிக்கப் படமுடியாத தைரியமும், மாசற்ற யோக்கியதையும் மாத்திரமே இந்த ஹிம்சைகளையெல்லாம் பொறுமையோடும் உறுதியோடும் நன்நம்பிக்கையோடும் பொறுக்க முடிந்தது. அடைவதற்குத் தகுதியான அவ்வெற்றியை அவர் அடைந்த பின்னர் ஜனங்களெல்லாம் அவர் ஓர் உண்மையான வீரனென்று நியாயமாக மதித்தார்கள்.

12.11.1933

✤ ✤ ✤

# 9. காங்கிரஸின் துயிலைக் கலைத்த கர்ஸன் ஆட்சி

### திலகமகரிஷி தோற்றுவித்த புதிய கிளர்ச்சி

### கல்கத்தா மகாநாட்டில் கர்ச்சனை

### வங்காளப் பிரிவினையால் உயிர்பெற்ற விதேசி பகிஷ்கார, சுதேசி இயக்கம்

**கர்சன் ஆட்சி**

லார்டு கர்சன் இந்திய இராஜப் பிரதிநிதிகளில் மிகமிகக் கீர்த்தி பெற்றவர். அவர் ஒரு பெரிய பிரசங்கி; ஒரு நல்ல தர்க்கவாதி; சுறுசுறுப்பும் உறுதியான விருப்பமும் பிடிவாதமும் உள்ளவர். அவர் இராஜாதிகாரிகளிலெல்லாம் சிறந்த இராஜாதிகாரி. மிகச் சிரேஷ்டமான நிலைமைகளில் அவர் தமது ஆட்சியைத் தொடங்கினார். இந்த ஜனங்களில் சில வகுப்பினரைத் திருப்தி செய்வதற்காக அவர் இங்கும் அங்கும் சில செயல்களைச் செய்தார். ஆனால், சிலகாலம் கழிந்த பின்னர் அவர் தமது மனப்போக்கை மாற்றி மிக அகம்பாவ முள்ள ஓர் எதேச்சதிகாரியாய்விட்டார். அவர் அவ்வாறானது அரசாங்க அரைத் தேவதைகளின் கட்டாயத்தினாலன்று; ஏனெனில், அவர் பிறமனிதர்களின் செல்வாக்குகளுக்கு உட்படாத சுயேச்சையோடு நடக்கின்றவர். அவர் பொதுஜன அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், கவர்ன்மெண்டின் ஒவ்வோர் அங்கத்தையும், முக்கியமாக மத்திய கவர்ன்மெண்டின் நிர்வாக அதிகாரிகளின் கைகளை வலுப்படுத்தி, அநேக திருத்தங்களைச் செய்தார். 1905-ம் வருஷம் நடந்த இந்தியன் நேஷனல் காங்கிரசின் வெளியீட்டில் அவருடைய நிர்வாகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதப் பட்டிருக்கிறது.

"லார்டு லிட்டன் ராஜப் பிரதிநிதியாயிருந்த இரண்டு நாள்களுக்குப் பின்னர் ஒருபோதும் இந்தியா இவ்வாறு பிளவுபட்டும், அதிருப்தி அடைந்தும் அதைரியப்பட்டும் இருந்ததில்லை; இராஜீய விஷயங்களிலும் மற்றைய விஷயங்களிலும் இத்தனை துரதிஷ்டங்களை அனுபவித்த தில்லை; மிகமிக மேலான இடங்களிலிருந்து இவ்வளவு இகழ்ச்சிக்கும் தூஷணைக்கும் இலக்கானதில்லை; இந்தியா வினுடைய மிகமிகக் குறைந்த வேண்டுகோள்கள் கூட மிகமிகக் கேலியும் ஏளனமும் செய்யப்பட்டன; அதனுடைய மிகமிக நியாயமான பிரார்த்தனைகள் கடுமையான சொற்களால் மறுக்கப்பட்டன. அதனுடைய மிகமிக உயர்ந்த கோரிக்கைகள் கேடு விளைவிப்பனவென்றும் மடத்தனமானவையென்றும் நிந்தித்துத் தள்ளப்பட்டன. அதனுடைய மிகமிக மேலான கோட்பாடுகள் கீழே எறியப்பட்டு மிதிக்கப்பட்டன.

இந்தியாவின் நிலைமை லார்டு கர்சனுடைய இரண்டாந் தடவை ஆட்சிக்காலத்திற் போல அபாயகரமானதாக ஒருபோதும் இருந்திருப்பதில்லை. இந்தியா முழுவதும் எதிர்த்தும் உத்தியோக அந்தரங்கச் சட்டம் செய்யப்பட்டது. அச்சட்டம் இந்தியர் பத்திரிகைகளாலும் இந்திய - இங்கிலீஷ் பத்திரிகைகாரர்களாலும் மிகமிகக் கண்டிக்கப்பட்டது. எல்லா இடங்களிலிருந்தும் கண்டனங்கள் வந்து குவிந்தன. ஆனால் லார்டு கர்சன் பிடிவாதமாயிருந்து, அவ்வாய்ப் பூட்டுச் சட்டத்தைச் செய்து விட்டார். கல்வி கெடுக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டது. அஃது அதிகச் செலவுடையதாகவும் உத்தியோகஸ்தர் ஆள்கைக்குட்பட்டதாகவும் செய்யப்பட்டது. நமது தேசத்தின் நன்மையை அடிமைப்படுத்துவதான இந்திய சர்வகலா சங்கச் சட்டம் செய்யப்பட்டது. தேசத்திற்கு 50 வருஷ காலமாக நன்மையை விளைவித்துவந்த பென்டிங், மெக்காலே, லார்டு ஹாலிவாக்ஸ் இவர்களுடைய உயர்ந்த வேலை களெல்லாம் தடைசெய்யப்பட்டன.

லார்டு கர்சனுடைய நிர்வாகம் லார்டு கர்சனுடைய ஆட்சி தீய உடையோடு வந்த நன்மையாயிற்று. இந்திய தேசீயக் கட்டிடத்தைக் கட்டியவர் அவரே; அவருக்குத் தெரிந்ததிலும் மிக நன்றாக அவர் கட்டிவிட்டார். அவருடைய அவிவேக

வங்காளப் பிரிவினையானது வங்காளம் முழுவதிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் புயல் போன்ற ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. அதனோடு சுதேசச் சரக்கை வாங்க வேண்டுமென்றும், அன்னிய தேசச் சரக்கை வாங்கக் கூடாதென்றும் பெரும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. அக்கிளர்ச்சிகளுக்குத் தேசத்தில் ஏராளமான ஆதரவும் உதவியும் அளிக்கப்பட்டன. இந்தியா முழுவதும், அதாவது கன்னியாகுமரியிலிருந்து கௌரி சங்கர் மலைவரையிலும் கவர்ன்மெண்டினிடத்தில் கோப உணர்ச்சியும், வங்காளத்தினிடத்தில் அநுதாப உணர்ச்சியும் பரவிவிட்டன. கர்சன் ஆட்சியின் பயன் தேசீய ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் துரிதப்படுத்துகிற முழு இந்தியக் கிளர்ச்சியொன்று உண்டானதேயாம்.

**கிளர்ச்சி முறைகளும் புதிய கட்சி உற்பத்தியும்**

தேசத்தில் புதிய உயிரும் புதிய ஊக்கமும் தோன்றியதோடு இந்திய இராஜீயவாதிகளுள் ஒரு பிளவு ஏற்பட்டது. இராஜீயக் கிளர்ச்சி முறைகளைப்பற்றி வெவ்வேறான எண்ணங்களைக் கொண்டிருந்ததால் அப்பிளவு ஏற்பட்டது. மிதவாதிகள் "கிரமமான வழிகளில் வளர்ச்சியை" நடத்த வேண்டும் என்றார்கள். அவர்கள் அவ்வாறு சொன்னதின் அர்த்தமாவது, பிரிட்டிஷ் இந்தியாவின் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதே. திலகர் இச்சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியைப் பின்வருங் காரணங்களால் நம்பவில்லை.

முதலாவதாக இந்தியாவுக்குச் சொந்தமான சட்டம் ஒன்றுமில்லை; இந்திய கவர்ன்மெண்டு, கிரேட் பிரிட்டன் தேசத்துப் பார்லிமெண்டால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை அனுசரித்துச் சிருஷ்டிக்கப்பட்டது. இரண்டாவதாக இந்தியாவுக்குச் சட்டம் செய்யும் அதிகாரம் இல்லை. சட்டங்களைச் செய்யவும் அழிக்கவும் முழு அதிகாரம் இராஜாங்க அதிகாரிகளுக்கே இருக்கிறது. இராஜாங்க அதிகாரிகள் விரும்பும் பக்ஷத்தில் சகலவகைக் கிளர்ச்சி களையும் நிறுத்தி ஜனங்கள் சுதந்தரமாகக் கூடுவதும் சுதந்தரமாகப் பேசுவது மாகிய மூலாதார உரிமைகளைப்

பறித்துக்கொள்ளக்கூடும். இராஜீயக் கிளர்ச்சிகள் எல்லாவற்றையும் குற்றங்களாக்கிச் சிக்ஷை விதிக்கக் கூடும். அத்தகைய எதேச்சாதிகார இராஜாங்கத்தோடு சண்டை செய்வதில் சட்ட வரம்புக்கு உட்பட்டவை என்று சொல்லப்படும் முறைகளை எப்பொழுதும் பின்பற்ற முடியாது; ஏனெனில் இராஜாங்க அதிகாரிகளின் விருப்பங்களுக்குத் தக்கபடி சட்ட வரம்பு என்பது மாற்றப்படத் தக்கதாக இருக்கிறது. ஆதலால் நீதியும் ஒழுக்கமும் சமதர்மமுமே கிளர்ச்சியை நடத்துவதற்கு முக்கிய ஆதாரங்களாக இருக்க வேண்டும். அதற்குச் சட்டம் ஆதாரமாயிருக்க வேண்டியதில்லை. சட்டங்களை ஆக்குவதற்கும் அழிப்பதற்கும் பூரண அதிகாரத்தைக் கொண்டுள்ள அந்நிய இராஜாங்கத்தினருக்கு விரோதமாகச் சட்ட ரீதியாகவும் சட்ட வரம்புக் குட்பட்டும் கிளர்ச்சிகளை நடத்துதல் இராஜீய தற்கொலையில் கொண்டுபோய்விடும். மிதவாதிகள் சட்ட ரீதியான கிளர்ச்சியோடு பிரிக்க முடியாத விதத்தில் சம்பந்தப்பட்டிருப்பதைக் கண்டு, திலகர் 'புதிய கட்சி' என்ற ஒன்றை ஏற்படுத்தினார். இந்திய - இங்கிலீஷ்காரர் பத்திரிகைகளும் மிதவாதிகளின் பத்திரிகைகளும் புதிய கட்சியாரை அமிதவாதிகள் என்று கூறின. மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் இருந்த வித்தியாசங்களெல்லாம் வழிகளைப் பற்றியனவேயன்றி, இலக்ஷியத்தைப் பற்றியன அல்ல. மிஸ்டர் எச்.டபிள்யூ.நெவின்சன் என்னும் பத்திரிகை நிருபரோடு பேசிக் கொண்டிருந்த சமயத்தில், திலகர் தமது இராஜீய கொள்கைகளையும் முறைகளையும்பற்றிப் பேசுமாறு கூறினார்.

"எங்கள் கொள்கையாலன்று, எங்கள் வழிகளால் மாத்திரம் எங்கள் கட்சியார் அமிதவாதிகள் என்னும் பெயரை ஈட்டியுள்ளனர். உண்மையில் பிரிட்டிஷ் அரசாட்சியை உடனே வேருடன் ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லுகிற ஒரு கட்சியார் எங்களில் இருக்கின்றனர். அவ்விஷயத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்த விஷயம் எதிர்காலத்தில் மிக தூரத்தில் நினைக்க வேண்டியதொன்று. ஐக்கியம் இல்லாமலும், ஆயுதம் இல்லாமலும், பிரிக்கப்பட்டும் நாம் இருக்கிற நிலைமையில் பிரிட்டிஷ் அரசாட்சியை அசைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாகாது. அந்த மாதிரி விஷயத்தையெல்லாம் நாம் தூரமான எதிர்காலத்திற்கு விட்டுவிடலாம்.

எங்கள் நோக்கம் எங்கள் தேசத்து அரசாட்சியில் ஒரு பெரும்பாகத்தை நாங்கள் அடையவேண்டுமென்பதே எங்கள் கொள்கை. இந்திய மாகாணங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட வேண்டுமென்பதும் குடியரசு நாட்டுச் சுய அரசாட்சி எங்களுக்கு இருக்க வேண்டுமென்பதும் அந்நிய தேச சம்பந்தமான விஷயங்களை எல்லாம் இங்கிலாந்து தேசத்தின் மத்திய கவர்ன்மெண்டினிடத்தில் விட்டுவிடவேண்டு மென்பதுமேயாம்."

மிதவாதிகளுக்கு பிரிட்டிஷ் ஜனங்களிடத்திலும் இந்தியாவிலுள்ள அவர்களுடைய கவர்ன்மெண்டிடத்திலும் எப்பொழுதும் பூரண நம்பிக்கையுண்டு. தங்களிடத்திலும் தங்கள் ஜனங்களிடத்திலும் பொதுவாக நம்பிக்கை இல்லை. இங்கிலாந்தின் ஹிருதயம் நல்லதென்றும், அநுதாபமும் உதாரமும் உள்ளதென்றும் இங்கிலாந்து இந்தியாவுக்குச் சுய அரசாட்சியைக் கொடுக்குமென்றும் அவர்கள் நம்பியிருக் கிறார்கள். திலகரால் ஏற்படுத்தப்பட்ட கக்ஷியாருக்கு இந்த விஷயத்திலெல்லாம் நம்பிக்கை இல்லை. திலகர் ஒரு காலத்தில் பின்வருமாறு கூறினார்:- "இராஜீய விஷயங்களில் தயாளத் துவம் உண்டென்று நாங்கள் நம்பவில்லை. தாம் இலாபத்தை எதிர்பாராமல் ஓர் அந்நியநாட்டார் மற்றொரு நாட்டினரை அரசாட்சி செய்தார் என்பதற்குத் தேச சரித்திரங்களில் ஓர் உதாரணங்கூடக் காணப்படவில்லை. நாங்கள் லார்டு மார்லே யையும், அவர் ஓர் தத்துவஞானி என்ற உண்மையையும் நம்புகிறோம். பழைய கட்சியார் (மிதவாதிகள்) இராஜீய விஷயங்கள் தத்துவஞானக் கொள்கைகளால் ஆளப்படக் கூடுமென்று நினைக்கின்றனர்; நாங்கள் அவ்விரண்டு விஷயங்களும் வெவ்வேறானவையென்றும், அவை இரண்டையும் ஒன்றாகக் கருதக்கூடாதென்றும் நினைக் கிறோம். பழைய கட்சியார் இராஜீயக் கொடைகள் நியாயமான பிரார்த்தனையால் கிடைக்குமென்று நம்புகின்றனர்.

உண்மையில், லார்டு கர்சன் இந்தியாவுக்கு வந்ததற்கு முன்னுங்கூடக் காங்கிரஸ் கைக்கொண்ட வழிகளைத் திலகர் விரும்பவில்லை. அவர் மிதவாதிகளின் எதிர்ப்பைப் பொருட் படுத்தாமல் காங்கிரசுக்கு உயிரையும் தைரியத்தையும்

கொடுப்பதற்காகத் தாம் செய்யக் கூடியவற்றையெல்லாம் செய்தார். தாய்மகராஜ் கேஸ் சம்பந்தமான நீண்டகால வேலைகள் அவருடைய நேரத்தில் ஒரு பெரும்பாகத்தைக் கவர்ந்து கொண்டது. அந்தக் காலத்தில் அவர் இராஜீய விஷயங்களில் தமது கவனத்தைச் செலுத்த முடியாதவ ராயிருந்தார். ஆனால், லார்டு கர்சனுடைய மிதமிஞ்சிய செயல்களும், அவர் செய்த படைப்புகளும் ஜனங்களுடைய மனத்தில் ஒரு விழிப்பை உண்டுபண்ணி, மிதவாதிகள் கைக் கொண்டிருந்த முறைகளிலும் அதிக ஊக்கமும் தைரியமுமான முறைகளைக் கைக்கொள்ளுகிற ஒரு புதிய கட்சியை ஸ்தாபிப்பதற்குரிய வழியை உண்டாக்கின. இந்தச் சமயத்தில் தாய்மகராஜ் கேஸின் கடைசிக் காட்சி முடிவு பெற்றது;

திலகர் மறுபடியும் காங்கிரஸில் பிரவேசித்தார்; தேசத்தில் உண்டாயிருக்கிற புதிய ஊக்கத்தைத் தமக்கு அனுகூலமாக உபயோகப்படுத்திக்கொண்டு காங்கிரஸின் பழைய மூட நம்பிக்கைகளை உடைக்க விரும்பினார். காங்கிரஸ்காரர்கள் ஜனங்களிடையே தேசீய உணர்ச்சியை எழுப்புவதற்குத் தங்கள் காலத்தைச் செலவிடவேண்டுமென்றும், இராஜாங்க அதிகாரி களுடைய தயவைச் சம்பாதிப்பதற்காகக் கையாளும் பிச்சைக் காரத்தனத்தைக் கைவிட வேண்டுமென்றும் அவர் கோரினார்; ஆனால், அவருடைய எதிரிகள் வழக்கம் போல, அக்காரியத்தை அவர் செய்யும்படியாக விடவில்லை. மிஸ்டர் கோக்கலே தலைவராயிருந்து நடாத்திய காசிக் காங்கிரசுக்கு அவர் சென்றார். தலைவருடைய உபந்நியாசம் மிகமிக ஊக்கத்தை அளிக்கக் கூடிய அக்காலத்த உபந்நியாசங்களில் ஒன்றா யிருந்தது. லார்டு கர்சனுடைய நிர்வாகத்தைக் காங்கிரஸ் தலைவர் கடூரமாகக் கண்டித்தது போல வேறு எவரும் கண்டித்ததில்லை. அன்றியும் மிஸ்டர் கோக்கலே வங்கா ளத்தில் அந்நிய சரக்கு விலக்குக் கிளர்ச்சியை ஆரம்பித்தது நியாயமென்று கூறினார். இவற்றால் தைரியமடைந்தும், அவ்வருஷத்தில் சர் பி. எம். மேத்தா காங்கிரசுக்கு வராததைத் தமக்கு உதவியாகக் கொண்டும், திலகர் சுதேசச் சரக்குக் கொள்ளலைப்பற்றியும், பிறதேசச் சரக்கு விலக்கைப் பற்றியும், வெவ்வேறு தீர்மானங்கள் செய்யவேண்டுமென்றும், வங்காளத் தினிடத்து அநுதாபம் கொண்டிருப்ப தற்கு ஓர் அறிகுறியாகப்

பிறதேசச் சரக்கு விலக்குக் கிளர்ச்சியை இந்தியாவின் பல பாகங்களிலும் உண்டு பண்ணும்படியாக ஒரு தீர்மானம் செய்யவேண்டுமென்றும் கோரினார். இந்தக் கோரிக்கையை மிதவாதிகள் அங்கீகரிப்பதற்குப் பலமாக மறுத்தார்கள். இத்தீர்மானத்தை அடுத்த காங்கிரஸில் கொண்டு வரலாமென்று நம்பி திலகர் அதனை விட்டுக் கொடுத்துக் காங்கிரஸில் பிளவு உண்டாகாமல் செய்தார்.

இக்காலத்தில் திலகர் இந்தியா முழுவதுக்கும் ஒரு தலைவராகவும், புதிய அல்லது மிதவாதக் கட்சியாருடைய தலைவராகவும், ஜனங்களால் மிகப் பாராட்டப்பட்ட வருமானார். இது பற்றி பாபு பிபின சந்திரபாலர் அடுத்த கல்கத்தா காங்கிரஸில் திலகர் தலைமை வகிக்கவேண்டுமென்று பிரரேபணை செய்து அதனை நிறைவேற்றுவதற்காக ஒரு பெரிய கிளர்ச்சி செய்தார். மேலும், காங்கிரஸின் கொள்கையை மாற்றவேண்டும் என்பதைப் பற்றி ஒரு பெரிய விவாதம் உண்டாயிற்று. மிஸ்டர் ஜி. எஸ். கப்பர்தே காங்கிரஸ் கொள்கையை மாற்றவேண்டுவது அவசியமென்று முக்கியமான காங்கிரஸ்காரர்களுக்கெல்லாம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி னார். இவையெல்லாம் மிதவாதிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தன. அவர்கள் காங்கிரஸ், அமிதவாதிகளால் பிடிக்கப் படக்கூடிய அபாயமான நிலைமையிலிருந்ததாக நினைத் தார்கள்; ஆதலால், அவர்கள் அமிதவாத அலையை அடக்குவ தற்காக ஒரு பெரிய முயற்சி செய்தார்கள்.

சர் பி.எம் மேத்தாவும், மிஸ்டர் சுரேந்திரநாத பானர்ஜீயும், அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்த இந்தியாவின் மிகப் பெரிய மனிதராகிய தாதாபாய் நவ்ரோஜிக்குக் காங்கிரஸ் அபாயமான நிலைமையிலிருக்கிறதாகவும், கல்கத்தாக் காங்கிரஸில் தலைமை வகிப்பதற்காக அவர் உடனே இந்தியாவுக்கு வரவேண்டு மென்றும் ஒரு தந்தி அனுப்பினார்கள். தாதாபாயை எல்லாக் கட்சியார்களும் மிக நேசித்து வந்தபடியால், அவர் காங்கிரஸ் தலைமை வகிப்பதற்குத் திலகர் உள்பட எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார். தாதாபாய் கல்கத்தாக் காங்கிரஸில் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டார்; காங்கிரஸின் தலைமைப் பதவி சம்பந்தப் பட்டவரையில் மிதவாதிகள் ஒரு வெற்றி அடைந்தார்கள்.

என்றாலும், காங்கிரஸின் கொள்கையை மாற்ற வேண்டிய முக்கிய பிரச்னையைக் காங்கிரஸ் கூட்டத்திலேயே விவாதித்து முடிவு செய்யவேண்டியதாயிருந்தது. இந்தப் பிரச்னையைப் பற்றித் திலகர் பின் வருகிற அபிப்பிராயத்தை வெளியிட்டார்:-

"நாங்கள் அதைரியப்படக் கூடாதென்று சில சமயங்களில் சொல்லப்படுகிறோம். நாங்கள் எளிதாக நம்பிக்கையை இழந்து விடுகிறோம் என்றும், எங்களிடத்தில் உருவான தீர்மானம் இல்லையென்றும் மிதவாதிகள் நினைப்பார்களாயின், அவர்கள் முழுத் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் கடைசி முடிவைப் பற்றி நம்பிக்கையை இழக்கவில்லை; ஆனால் காங்கிரஸின் தாமதச் செயல்களில் நம்பிக்கை இழந்துவிட்டோம். ஒரு வருஷத்தில் மூன்று நாட்கள் காங்கிரஸை நடத்துவதும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியின் ஊக்கம் குறைந்த வேலையும், ஏகதேசத்தில் இங்கிலாந்துக்கு ஒரு சில பிரதிநிதிகளை அனுப்புவதும் சிறிதும் போதா வேலை யாகும். சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சியில் எங்களுக்கு நம்பிக்கையில்லையென்பதன்று. இங்கிலீஸ் கவர்ன்மெண்டை ஒழித்துவிட நாங்கள் விரும்பவில்லை; இராஜீய உரிமைகளைச் சண்டையிட்டுத்தான் அடைய வேண்டும். அவற்றை இரந்து அடையலாமென்று மிதவாதிகள் நினைக்கிறார்கள். கவர்ன் மெண்டைப் பலமாக நெருக்குதலால் மாத்திரம்தான் அவற்றை அடையக்கூடுமென்று நாங்கள் நினைக்கிறோம். இந்த நெருக்கடியைச் செய்வதற்குக் காங்கிரஸ் முயற்சி செய்யுமா? அதுதான் விஷயம்; அத்தகைய நெருக்கடியை உண்டு பண்ண வேண்டுமானால், காங்கிரஸ் தனது ஏகதேச வேலையை விட்டு விட்டுத் தொடர்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்யும் ஒரு ஸ்தாபனமாக வேண்டும்."

கல்கத்தா காங்கிரஸ் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப் பட்டது. இந்திய - இங்கிலிஷ்காரரர் பத்திரிகைகள் திலகரது கக்ஷியில் அவநம்பிக்கையை உண்டுபண்ணுவதற்குத் தம்மால் கூடியமட்டும் பிரயத்தனங்கள் செய்தன; ஆனால், அவை யெல்லாம் வீணாயின. காங்கிரஸ் தலைவர் மிதவாதத்தை ஆதரிப்பார் என்று அப்பத்திரிகைகள் நம்பின; ஆனால், அவை முற்றிலும் ஆசாபங்கம் அடைந்தன. தாதாபாய் நவ்ரோஜி

இந்தியாவின் இராஜீய முயற்சிகளின் இலக்ஷியத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:- "முழு விஷயத்தையும் ஒரு வார்த்தையில் அடக்கிவிடக்கூடும். அஃதாவது ஐக்கிய இராஜீயத்தில் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் இம் மூன்றும் அடங்கிய இராஜீயத்தில்), அல்லது குடியேற்ற நாடுகளில் நடந்து வரும் சுய அரசாட்சி அல்லது சுயராஜ்யம் இந்தியாவுக்குத் தேவை."

காங்கிரஸ் மகாநாடு சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக் கல்வி இவை சம்பந்தமாக மூன்று தீர்மானங்கள் செய்தது. பஹிஷ்காரம் சம்பந்தமான தீர்மானத்தைப் பற்றி மிகமிகப் பலமான விவாதங்கள் நடந்தன. காசிக் காங்கிரஸில் பஹிஷ்காரம் சம்பந்தமாகச் செய்யப்பட்ட தீர்மானம் "பொருள் இலாப"த்தை மட்டும் பற்றியதாயிருந்தது. கல்கத்தாத் தீர்மானப்படி பஹிஷ்காரம் ஓர் இராஜீய ஆயுதமும் ஆயிற்று. அத்தீர்மானமாவது, "இத்தேசத்தின் நிர்வாகத்தில் இத்தேசத்து ஜனங்களுக்கு ஓர் உரிமையும் இல்லையென்பதை உத்தேசித்தும், ஜனங்கள் கவர்ன்மெண்டிடம் எடுத்துச் சொல்லும் விஷயங்களைக் கவர்ன்மெண்டு சரியானபடி கவனிப்பதில்லை என்பதை உத்தேசித்தும், வங்காளத்தைப் பிரிவினை செய்ததை ஆக்ஷேபித்து உண்டுபண்ணப்பட்ட பஹிஷ்காரக் கிளர்ச்சியானது சட்டவரம்புக்கு உட்பட்டதுதான்."

காங்கிரஸ் கூட்டத்தில் பாபு பிபின சந்திரபாலர் இத்தீர்மானத்திற்கு ஓர் இராஜீய அர்த்தம் கொடுத்துப் பேசினார்; பண்டிதர் மதனமோகன மாளவியாவும், திவான் பகதூர் எல். ஏ. கோவிந்த ராகவ அய்யரும் போன்ற மிதவாதத் தலைவர்கள் அந்த அர்த்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். காங்கிரஸ் பந்தரில் அதிகக் கிளர்ச்சியையும், சந்தடியையும் உண்டு பண்ணும்படியான நீண்ட விவாதம் நடந்தது. ஸ்ரீ கோக்கலே தீர்மானத்தின் வார்த்தைகளுக்கு மாத்திரம் காங்கிரஸ் கட்டுப்பட்டதேயன்றி, அவ்வார்த்தைகளுக்கு ஒவ்வொருவரும் சொல்லும் அர்த்தங்களுக்குக் காங்கிரஸ் கட்டுப்பட்டது அன்று எனச் சொல்லி அந்த விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்.

விஷயாலோசனைக் கமிட்டியில் சுதேசியத்தைப் பற்றிய தீர்மானத்தின் மேல் மிகச் சூடான விவாதம் நடந்தது. கமிட்டியின் முன் வைக்கப்பட்ட தீர்மான மசோதாப்படி ஜனங்கள் சிறிது நஷ்டப்பட்டாயினும் சுதேசியச் சரக்கு களையே வாங்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட வில்லை. திலகர் அவ்வாறு தெளிவாகச் சொல்லித் தீர்மானத்தை திருத்த வேண்டுமென்று கூறினார். அவர் திருத்தம் அங்கீகரிக்கப் படவில்லை. தமது திருத்தத்திற்கு எத்தனை பேர் சாதகமா யிருக்கின்றனர்? எத்தனை பேர் பாதகமாயிருக்கின்றனர்? என்பது தெரியும்படியாக வோட்டு எடுக்கவேண்டுமென்று திலகர் வேண்டினார். அவ்வேண்டுதலும் மறுக்கப்பட்டது. அம்மறுப்பை ஆக்ஷேபிப்பதற்கு ஓர் அறிகுறியாகத் திலகர் அறுபது பேர்களுடன் காங்கிரஸ் பந்தரைவிட்டு வெளியேறி னார். தமது திருத்தத்தைக் காங்கிரஸ் மகாநாட்டில் பிரேரேபிப் பதாக நினைத்துத் திலகர் அதைப் பற்றிக் காங்கிரஸ் தலைவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பினார். திலகர் கக்ஷியின் பலத்தை உணர்ந்து தலைவர் அத்திருத்தத்தைத் தீர்மானத்துட் சேர்த்துவிட்டார். திருத்தப்பட்ட தீர்மானம் பின்வருமாறு இருந்தது:-

“இந்தக் காங்கிரஸ், சுதேசியக் கிளர்ச்சியைப் பூரண மனதுடன் ஆதரிக்கின்றது; அக்கிளர்ச்சியின் வெற்றிக்காக உழைக்கவேண்டுமென்று இத்தேசத்து ஜனங்களைக் கேட்டுக் கொள்கின்றது; அவ்வாறு செய்வதில் சிறிது நஷ்டம் ஏற்படுமாயினும், அந்நிய சரக்குகளை விலக்கிச் சுதேசச் சரக்குகளை வாங்கிச் சுதேசச் சரக்குகளின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் சுதேசக் கைத்தொழில்களை வளர்ப்பதற்கும் ஜனங்கள் உண்மையான முயற்சிகளை ஊக்கத்துடன் இடைவிடாது செய்து வரவேண்டும்.” இவ்வாறாகத் திலகர் கக்ஷியார் 1906ஆம் வருஷத்துக் கல்கத்தா காங்கிரஸில் பூரண வெற்றியை அடைந்தனர்.

11.3.1934

✣ ✣ ✣

# 10. சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடு

## தலைவரைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தேசீய – மிதவாதக் கட்சிகளின் தகராறு

## ஸ்ரீ திலகரின் நன்முயற்சிக்கு எதிரான சூழ்ச்சி

**சூரத்துக் கலவரம்**

முன் அழைத்திருந்தபடி அடுத்த காங்கிரஸ் மகாசபை நாகப்பூரில் நடக்கவேண்டியதாய் இருந்தது. வரவேற்புச்சபை பிப்ரவரி மாதத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. அச்சபையின் அங்கத்தினர்களிற் பெரும்பாலார் திலகரின் சீடர்கள். தங்களுடைய தலைவரைக் காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்க மற்றவர்கள் இசையமாட்டார்கள் என்று தெரிந்தவுடன் திலகரின் சீடர்கள் அச்சபையினின்று விலகிக்கொண்டார்கள். மற்றைய அங்கத்தினர்கள் காங்கிரஸ் கூடும் இடத்தை மாற்ற வேண்டுமென்று எல்லா - இந்தியாக் காங்கிரஸ் கமிட்டியைக் கோரினார்கள். அவ்விதமே, காங்கிரஸை சூரத்து நகரில் நடத்துவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

காங்கிரஸ்காரருக்குள் ஏற்பட்ட இப்பிளவை தமக்கு அநுகூலமாக உபயோகப்படுத்திக் கொண்டு கவர்ன்மெண்டார் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டனர். குடியேற்ற மசோதாவும் நில விற்பனைச் சட்டத் திருத்த மசோதாவும் ஜனங்களுடைய எதிர்ப்பினூடே பஞ்சாப் கவர்ன்மெண்டாரால் சட்டமாக்கப்பட்டன. இராவல்பிண்டி ஜில்லாவில் நிலவரி உயர்த்தப்பட்டது. பாரி - டொவாபின் வாய்க்கால் வரிகள் அதிகமாக்கப்பட்டன; பஞ்சாபிப் பத்திரிகையின் அதிபரும் ஆசிரியரும் குற்றம் சாட்டப்பட்டனர். ஸ்ரீ லாலா லஜபதிராயும் சர்தார் அஜித்சிங்கும் நாடு கடத்தப்பட்டார்கள்; வங்காளத்தில் "யுகாந்தா" பத்திரிகையின்

ஆசிரியர் சிறைக்கு அனுப்பப்பட்டார். பாபு அரவிந்த கோஷ் இராஜ நிந்தனைக் குற்றத்திற்காகப் பிடிக்கப்பட்டார்.

1907- ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதி கோக்கலே முதலிய மிதவாதிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இராஜ நிந்தனைக் கூட்டச் சட்டம் செய்யப்பட்டது. பைத்தியம் பிடித்த இராஜாங்கத்தாரின் இந்த விவேகமற்ற, சரியாக ஆலோசிக்கப்படாத செயல்கள் ஜனங்களுக்கு அளவு கடந்த கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணின. 1907-ம் வருஷம் நவம்பர் மாதம் 11-ந் தேதி ஸ்ரீ லாலா லஜபதிராய் விடுதலை செய்யப்பட்டார். அந்த சமயத்தில் அவர் ஓர் வெற்றி வீரராக விளங்கியபடியால் அவரைக் காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்ற உணர்ச்சி தேசத்தில் பலமாகயிருந்தது. சூரத்து வரவேற்புச் சபையின் தேசீய அங்கத்தினர்களால் அவர் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. மிதவாதிகள் முன்னரே டாக்டர் ராஷ் பிகாரி கோஷைக் காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்தில் அமர்த்துவதாகத் தீர்மானித் திருந்தார்கள். அதனால் அவர்கள் செவியில் மற்றைய பிரேரேபணைகள் நுழையவில்லை.

வரவேற்புச் சபையில் மிதவாத அங்கத்தினர் அதிகமாயிருந்தனர்; ஸ்ரீ லாலா லஜபதிராயைத் தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்ற பிரேரேபணை தோற்றுப் போகக்கூடிய நிலைமையில் இருந்தது. அதனால், அப் பிரேரேபணை வற்புறுத்தப்படவில்லை. பின்னர், காங்கிரஸ் கூட்டத்துக்குச் சுமார் ஒரு வாரத்துக்கு முன் காங்கிரஸில் ஆலோசிக்கப்படவேண்டிய விஷயங்களின் குறிப்பு பிரசுரிக்கப் பட்டது. இந்தக் குறிப்பில் சுய - அரசாட்சி, அந்நியச்சரக்கு விலக்கு தேசீயக் கல்வி இம்மூன்றும் சேர்க்கப்படவில்லை. இந்த முக்கிய விஷயங்கள் அக்குறிப்பில் சேர்க்கப்படாதது மிதவாதி களின் பிற்போக்கான கொள்கையைக் காட்டிற்று.

ஸ்ரீதிலகர் டிசம்பர் மாதம் 23 - ம் தேதி சூரத்து நகருக்கு வந்து சேர்ந்தார். மறுநாள் தேசீயவாதிகள் ஸ்ரீ அரவிந்த கோஷின் தலைமையில் ஒரு கூட்டம் கூடி, கல்கத்தா காங்கிரஸில் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளைக் கைவிடுவதை எதிர்க்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. முக்கியமான

பிரச்னைகளைப் பற்றிய வாதங்களிலெல்லாம் காங்கிரஸ் மாநாட்டில் பேசுவோர்களையும் வோட்டுக் கொடுப்போர் களையும் இரண்டு கக்ஷிகளாகப் பிரித்து வைப்பதற்கு வேண்டும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று காங்கிரஸ் காரியதரிசிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. சுய அரசாட்சி, அந்நியச் சரக்கு விலக்கு, தேசீயக் கல்வி இம்மூன்று விஷயங்களும் விஷயாலோசனைக் குறிப்புகளில் சேர்க்கப்பட வில்லையென்பது ஆதாரமற்ற செய்திகள் என்று பத்திரிகை களில் ஒரு குறிப்பை வரவேற்புச் சபையார் வெளியிட்டனர். 25 - ந்தேதி காலையில் ஸ்ரீகோக்கலேயால் தயாரிக்கப்பட்ட காங்கிரஸ் விதிகளைப் பற்றிய மசோதாவின் பிரதி ஒன்று ஸ்ரீ திலகருக்குக் கிடைத்தது. அதில் காங்கிரஸின் நோக்கம் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

"காங்கிரஸின் கடைசியான இலக்ஷியம் பிரிட்டிஷ் இராஜ்யத்தின் மற்றைய நாடுகளிலுள்ள சுயஅரசாட்சியைப் போன்ற ஓர் ஆட்சியை அடைதல்." இந்த மசோதா ஸ்ரீதிலகர் கைக்குக் கிடைத்தபின், அவர் செய்த ஒரு பிரசங்கத்தில் மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிற நோக்கங்கள் காங்கிரஸி லிருந்து தேசீயவாதிகளை விலக்குவதற்காகச் செய்யப்பட்ட ஒரு எத்தனம் என்று சொல்லி விளக்கினார். ஸ்ரீ லாலா லஜபதிராய் 25 - ந் தேதி காலையில் சூரத் நகருக்கு வந்து சேர்ந்தார். கடுமையான வாதங்களையும் குழப்பங்களையும் தடுப்பதற்காக ஸ்ரீ லாலா லஜபதிராய் தாம் கட்டாயப்படுத்தப்பட்டபோதிலும் காங்கிரஸ் மகாநாட்டில் தலைமை வகிக்க விரும்பவில்லை யென்று பகிரங்கமாகச் சொன்னார். பிற்பாடு, அவர் ஸ்ரீ திலகரையும், ஸ்ரீகப்பர்தேயையும் சந்தித்து விவாதப்பட்ட விஷயங்களையெல்லாம் ஆலோசனை செய்து ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்காக எல்லாக் கக்ஷி அங்கத்தினர்களும் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று பிரேரேபித்தார் அவ்வாறு செய்வதற்கு ஸ்ரீ திலகர் ஒப்புக் கொண்டார். ஆனால், மறுநாட் காலைவரையில் அச்சிறு கூட்டத்தைப் பற்றிய தகவல் ஒன்றும் அவருக்குக் கிடைக்க வில்லை.

இதற்கு மத்தியில் ஸ்ரீ திலகரும், ஸ்ரீ கப்பர்தேயும் சுரேந்தரநாத பானர்ஜீயைக் கண்டு, முந்திய காங்கிரஸின்

தீர்மானங்களுக்குப் பங்கம் விளைவிப்பதில்லை யென்றும் தலைவரை பிரேரேபிக்கும் பேச்சுக்களில் யாராவது ஒருவர் ஸ்ரீ லாலா லஜபதிராயைத் தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று பொதுஜனங்கள் கொண்டுள்ள விருப்பத்தைப் பற்றி கௌரவமாக ஒரு வார்த்தை சொல்வதாகவும் தேசீயவாதிகளுக்கு உறுதிசொன்னால், அவர்கள் சகல எதிர்ப்புக்களையும் நிறுத்திக்கொள்வதாகத் தெரியப்படுத்தினார்கள். தலைவரைப் பிரேரேபிப்பதில் தாமும் பேசவேண்டியவராயிருப்பதால் தாமே காங்கிரஸ் தலைமைக்கு ஸ்ரீ லாலா லஜபதிராயைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று பொது ஜனங்கள் கொண்டுள்ள விருப்பத்தைப் பற்றித் தெரிவிப்பதாக ஒப்புக் கொண்டார்.

ஸ்ரீதிலகரும் அவர் கட்சியாரும் பயப்படுகிறபடி காங்கிரஸ் நோக்கத்தையாவது, தீர்மானங்களில் எதனையாவது மாற்றுவதாயிருந்தால் தாம் அதில் சம்பந்தப்படப் போவதில்லை என்றும் தெளிவாகச் சொன்னார். வரவேற்புச் சபையின் தலைவராகிய ஸ்ரீமால்வியைப் பார்ப்பதற்காக ஸ்ரீ திலகர் முயன்றார். அவருக்குத் திலகரைப் பார்க்க விருப்பம் இல்லாததினாலோ, அல்லது நேரம் இல்லாததினாலோ, அவரைத் திலகர் பார்க்கமுடியவில்லை. தீர்மானங்களின் மசோதாவின் பிரதி ஒன்று தமக்கு வேண்டுமென்று திலகர் கேட்டார்; அது 26 - ந் தேதி மாலை 3 மணிக்குத்தான் அவருக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அது இந்திய - இங்கிலீஷ்காரர் பத்திரிகைகளில் ஒன்றாகிய "அட்வோக்கேட் ஆப் இந்தியா" வின் நிருபருக்கு முதல் நாளே கொடுக்கப்பட்டிருந்தது. காங்கிரஸின் பொறுப்பான உத்தியோகஸ்தர்களாகிய மிதவாதக் காரியதரிசிகளும் மற்றவர்களும் இந்த விஷயத்தில் செய்த அசட்டையானது உண்மையில் மிகக் கோபமூட்டுவதாயிருந்தது. அவ்வாறு செய்வதற்குப் போதிய காரணம் ஒன்றுமில்லை. ஆதலால் ஸ்ரீ திலகர் தமது விருப்பத்திற்கு விரோதமாக, ஆனால் தேசத்தின் நன்மைக்காக, ஆரம்ப முதல் எதிர்ப்பு வேலைகளைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

6.5.1934

✤ ✤ ✤

## 11. சூரத் காங்கிரஸ் மகாநாட்டில் நிகழ்ந்த சூறாவளி

### பிரசங்கப் பந்தலில் பாதரக்ஷைப் பிரயோகம்
### தேசீயவாதிகள் பேச்சுத் தடையின் பயன்
### சுயநல மிதவாதிகள் சூழ்ச்சிக்குச் சூடு
### ஸ்ரீதிலகர் நடந்ததை நினையாது செய்த சமரச முயற்சி

வரவேற்புத் தலைவர் தமது உபந்யாசத்தை வாசித்து முடித்த பின்னர் டாக்டர் ராஷ்பிகாரி கோஷை காங்கிரஸ் மகாநாட்டின் தலைவராகப் பிரேரேபிக்கும் தீர்மானம் வந்தது. ஸ்ரீ சுரேந்தரநாத பானர்ஜி அத்தீர்மானத்தைப் பற்றிப் பேச எழுந்தபோது காங்கிரஸ் பந்தரில் பெருங் கூச்சல் கிளம்பி, அவருடைய பெரிய சப்தத்தையும் கேட்கவிடாமல் செய்துவிட்டது. காங்கிரஸ் பந்தல் முழுவதிலும் பெருங் குழப்பமாயிருந்தது. காங்கிரஸ் மகாநாட்டின் நடவடிக்கைகள் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டன. டிசம்பர் மாதம் 27-ம் தேதி காலை எட்டு மணிக்கு வரவேற்புச் சபையின் உபதலைவரான ஸ்ரீ கன்னிலால் ஸ்ரீதிலகரைச் சந்தித்து, அன்று இரவு திலகர் வகையார்களும், ஸ்ரீகோக்கலே வகையார்களும் ஒரு கூட்டம் கூடி அவர்களுக்குள் உண்டாயிருக்கும் வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்தார். அன்றிரவு எந்த நேரத்தில் அக்கூட்டம் கூட்டினாலும் அக்கூட்டத்திற்கு வருகிறதாகத் திலகர் ஒப்பு கொண்டார். ஆனால் அக்கூட்டம் கூட்டப்படவில்லை. ஸ்ரீ கன்னிலால் மறுநாள் காலை 11-00 மணி வரையில் திலகரைப் பார்க்கவுமில்லை. பார்லிமெண்டு மெம்பராகிய டாக்டர் ரூதர்பர்டு இரு கட்சியாரையும் சமாதானப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறதாகவும், அவரை புரொபஸர்

கஜ்ஜாருடைய பங்களாவில் சந்திக்கும்படியாகவும் ஸ்ரீ திலகரையும், ஸ்ரீ கப்பர்தேயையும் ஸ்ரீ கன்னிலால் கேட்டுக் கொண்டார். அவ்வாறு திலகர் அந்த பங்களாவுக்குப் போனார். ஆனால், டாக்டர் ரூதர்பர்டு அங்கு வரவில்லை. பின்னர் தலைவரைத் தெரிந்தெடுத்தலைச் சிறிது நேரத்திற்கு ஒத்திவைக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு மாகாணத்தி லிருந்தும் ஒவ்வொரு மிதவாதியும், ஒவ்வொரு தேசீயவாதியு மாக ஒரு சிறு சபை ஏற்படுத்தி இரு கட்சியாருள்ளும் ஏற்பட்டி ருக்கிற வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ திலகர் பிரேரேபித்தார். திலகரின் இப்பிரேரேபணையை ஸர் பி. எம். மேத்தாவுக்குத் தெரியப்படுத்துவதற்காக புரொபஸர் கஜ்ஜாரும், ஸ்ரீ கன்னிலாலும் ஏற்றுக்கொண்டனர். அதனால், ஒன்றும் நடக்கவில்லை. பின்னர் வரவேற்புச் சங்கத் தலைவ ராகிய ஸ்ரீ மால்விக்குத் திலகர் பின்வரும் கடிதத்தை அனுப்பினார்.

"ஐயா! தலைவரைத் தெரிந்தெடுக்கும் பிரேரேபணை ஆமோதிக்கப்பட்டவுடன் நான் பிரதிநிதிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் மகாநாட்டைச் சரியாக நடத்துவதற்குரிய ஒரு பிரேரேபணையுடன் மகாநாட்டை ஆரம்பிக்கும் நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்ல நான் கருதுகிறேன். இந்த விஷயத்தைத் தயவுசெய்து பிரதிநிதி களுக்குத் தெரிவியுங்கள்."

உங்கள் உண்மையுள்ள,<br>
பா. க. திலகர்<br>
தக்ஷண (பூனா) பிரதிநிதி

வரவேற்புச் சபைத் தலைவர் இக்கடிதத்திற்குப் பதில் அனுப்பவில்லை. காங்கிரஸ் மகாநாடு மத்தியானம் ஒரு மணிக்கு ஆரம்பமாயிற்று. ஸ்ரீ பானர்ஜியின் பேச்சைத் தொடரும் படியாக அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவருடைய பேச்சு அமரிக்கையுடன் கேட்கப்பட்டது. பிற்பாடு, திலகர் ஸ்ரீ மால்விக்கு ஒரு ஞாபகக் குறிப்பை அனுப்பினார். அவர் மிகக் கோபத்தோடு மௌனமாயிருந்தார். ஆதலால் திலகர் ஸ்ரீ பானர்ஜி தமது பேச்சை முடித்தவுடன், பிரசங்க மேடைக்குச் சென்றார். ஒரு வாலண்டியர் அவரைத் தடுத்து நிறுத்தினான்.

எப்படியோ அவர் பிரசங்க மேடையில் ஏறிவிட்டார். இதற்கு மத்தியில், டாக்டர் கோஷ், திலகர் பிரசங்க மேடையில் ஏறித் தலைவர் முன் வந்து நிற்பதற்கு முன்னதாகத் தலைவரைத் தெரிந்தெடுக்கும் பிரேரேபணை நிறைவேறிவிட்டதென்று சொல்லிக்கொண்டு, தமது தலைவர் நாற்காலியில் அமர்ந்து விட்டார். கூச்சல்கள் கிளம்பின. திலகர் பிரதிநிதிகளைப் பார்த்துப் பேசுவதற்குரிய தமது உரிமையை வற்புறுத்தி தலைவரைப் பார்த்து அவர் சரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வில்லையென்று கூறினார். அப்போது தலைவர் ஸ்ரீதிலகர் பேசுவதைத் தடுக்க ஆரம்பித்தார். வரவேற்பு சபையின் காரியதரிசிகளில் ஒருவர் திலகருடைய உடம்பைத் தொட்டார்; ஆனால், அவர் தூரத்தில் தள்ளப்பட்டார். உடனே ஸ்ரீ கோக்கலே எழுந்து, ஸ்ரீதிலகரின் உடம்பை யாரும் தொடக் கூடாதென்று ஆக்ஷேபித்தார். பெரிய குழப்பம் உண்டாய் விட்டது. பாதரக்ஷைகளும், கம்புகளும் சாதாரணமாக உபயோகிக்கப்பட்டன. ஒருவர் பக்கத்தில் ஒருவராயிருந்த ஸ்ரீமேத்தா மீதும் சுரேந்தரநாத பானர்ஜி மீதும் ஒரு பாதரக்ஷை விழுந்தது. டாக்டர் கோஷ் தமது பிரசங்கத்தை வாசிக்கத் தொடங்கினார். ஆனால், கூச்சல் காரணமாக அவர் அதனை வாசிக்க முடியவில்லை. அதனால், அவர் காங்கிரஸ் நடவடிக்கைகளைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார். டாக்டர் கோஷின் பிரசங்கம் வாசிக்கப்படவில்லையானாலும், அது பத்திரிகைகளில் வெளியாய்விட்டது; அதில் தேசீய வாதிகளுக்கு விரோதமான சில வாசகங்கள் காணப்பட்டன. இது நெருப்புக்குக் காற்றுக் கூடினாற் போலக் கட்சி உணர்ச்சியை அதிகமாக்கிற்று ஸ்ரீமான்கள் மோட்டிலால் கோஷ், ஏ.சி.மித்ரா, பி.சி.சாட்டர்ஜி, லாலாஹரி கிருஷ்ணலால் இவர்கள் சமாதானப்படுத்துவதற்காகப் பெருமுயற்சி செய்தார்கள். அவர்கள் அன்று இரவிலும் மறுநாட் காலையிலும் ஸ்ரீ திலகரைச் சந்தித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் திலகர் பின்வரும் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தார்:-

“முதலாவதாக சுய அரசாட்சி, சுதேசியம், பஹிஷ்காரம், தேசியக் கல்வி இந்நான்கையும் பற்றிய சென்ற வருஷத்துத் தீர்மானங்களை இந்த வருஷத்தில் உறுதி செய்ய வேண்டும்;

இரண்டாவதாக தேசீயவாதிகளுக்குக் கோபத்தை மூட்டக் கூடிய வாக்கியங்களை டாக்டர் கோஷின் பிரசங்கத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். இவ்விரண்டையும் செய்வதாயிருந்தால் நானும் என் கட்சியாரும் காங்கிரஸின் நன்மைகளைக் கருதி 23-வது இந்தியன் நேஷனல் காங்கிஸின் தலைவராக டாக்டர் கோஷைத் தெரிந்தெடுக்கும் பிரேரேபணையை எதிர்த்தலை நிறுத்தி விடவும், மறத்தல், பொறுத்தல் என்னும் இரண்டையும் கைக்கொண்டு காங்கிரஸ் நடவடிக்கைகளை நடாத்தி முடிக்கவும் சித்தமாயிருக்கிறோம்.''

இந்த ஒப்பந்தங்கூட அகம்பாவம் கொண்ட மிதவாதி களுக்குத் திருப்தியை உண்டு பண்ணவில்லை; அதனால், இரண்டு கட்சியார்களும் அதிகக் கசப்போடும் பகைமை யோடும் பிரிந்தார்கள். திலகர் கட்சியுணர்ச்சியைக் கிளப்பு கின்றவராயும், அழிக்கும் வேலை செய்யும் இராஜீய வாதியாயும் இருந்தாரென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. சூரத்து நகரில் பிளவு ஏற்பட்டவுடன் "கேசரி"ப் பத்திரிகையில் வெளியான அவருடைய நிருபம் ஒன்றிலுள்ள பின்வரும் வாக்கியங்கள், அச்சொல் உண்மையன்று என்பதைக் காட்டும்:-

"மிதவாதிகளும் தேசீயவாதிகளும் தங்களைச் சேர்ந்த மனிதர்கள் தேசத்தின் நன்மையை வளர்ப்பதற்காக உண்மையான விருப்பங்கொண்டு உழைக்கிறவர்கள் என்பதையும், தேசத்தின் நாசத்திற்காக வேலை செய்கிறவர்கள் ஒருவரும் இல்லையென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இரு கட்சிக்காரர்களும் இந்த நினைப் போடு வேலை செய்யத் தொடங்குவார்களாயின், அபிப்பிராய பேதங்கள் உண்டாவதைத் தடுக்க முடியாதென்பதை ஒப்புக் கொள்ள விருப்பமுடையவர்களாயிருப்பின், இராஜீய விவகாரங்களில் அபிப்பிராய பேதங்கள் உண்டாவது நன்மைக்கு அடையாளம் என்பதைத் தெரிந்து கொள்வார் களாயின், இரு தரத்தார்களும் தப்பபிப்பிராயங்களும் மனஸ்தாபங்களும் உண்டாவதற்கு இவ்வளவு இடம் இராது. இரு கட்சிக்காரர்களும் ஒற்றுமையில்தான் பலமிகுகின்ற தென்பதையும், கடுமையான அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்பதையும் உணர

வேண்டும். ஒரு கட்சியார் மற்றொரு கட்சிக்காரரை ஒழித்துவிட முயற்சிக்கக் கூடாது. மிதவாதிகளும் தேசீயவாதிகளும் சேர்ந்து செய்யும் முயற்சிகளால் நடைபெறும் தேசீயக் கூட்டங்களில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற வேண்டுமென்று ஒவ்வொரு கட்சியாரும் பெரு முயற்சிகள் செய்யவேண்டும்; ஆனால், தமது உயர்ந்த ஸ்தானத்தால் ஒரு கட்சிக்காரர் தமது எதிர்க் கட்சிக்காரராகிய மற்றொரு கட்சியாரை அழித்துவிடவாவது, நசுக்கிவிடவாவது முயற்சிக்கலாகாது. புதிய கக்ஷியார் தோன்றியிருக்கிறபடியால்தான், இராஜாங்கத்தார் தங்களைச் சுற்றி வருகிறார்களென்பதை மிதவாதிகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மிதவாதிகளின் ஜாக்கிரதையும் சந்தேகமும் அடிக்கடி தங்களுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணினாலும், அவர்களுடைய செல்வாக்கையும் மதிப்பையும் தேசீயவாதிகள் லேசாக நினைக்கலாகாது.'' மேற்கண்ட வாக்கியங்களை வாசிக்கும் யாராவது அவற்றை எழுதியவர் அளிக்கும் வேலையைச் செய்கிற மேதாவி என்று பாக்கியத்துடன் சொல்லக்கூடுமா?

*3.6.1934*

✤ ✤ ✤

# 12. பிரிட்டனின் ஆபத்திற்கு உதவிய பிரிய நண்பர்*

## மகாயுத்த காலத்தில் இங்கிலாந்துக்குப் பலம் தேடப் பாடுபட்ட இந்திய வீரர்

### ஸ்ரீ திலக மகரிஷியின் மகத்தான மனோபாவம்

யுத்தத்தை வெற்றிகரமாக நடத்த இங்கிலாந்துக்கு உதவி புரிதற்காகத் திலகர் மகத்தான வேலை செய்தார். பிரிட்டிஷ் சிம்மாசனத்திற்கும் பிரிட்டிஷ் சம்பந்தத்திற்கும் அவர் எப்போதும் விசுவாசமுள்ளவராயிருந்ததினால், தமது தேசத்தின் இராஜீய விதிகள் தற்காலம் பெரிய பிரிட்டனுடைய இராஜீய விதிகளோடு பிரிக்கமுடியாத விதத்தில் இணைக்கப் பட்டிருக்கிறதாக அவர் கண்டதினால், ஜெர்மனியின் வெற்றியானது குடியரசாட்சி மீதும் சுதந்தரத்தின் மீதும், தன்னாட்சியும் படைபலமும் வெற்றிப்பெற்றதாகும்மென்று அவர் கருதியதாலும், அவர் இங்கிலாந்தின் வெற்றிக்காக உதவி

---

*மகா யுத்தகாலத்தில் இங்கிலாந்துக்கு உதவி புரிவதற்காக ஸ்ரீ திலகர் மகத்தான வேலைகளைச் செய்துவந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் சம்பந்தத்துக்கும் அவர் எப்பொழுதும் பிரியமுள்ளவராகவே இருந்தார். இந்தியாவின் இராஜீயவிதிகள் பெரிய பிரிட்டனின் இராஜீய விதிகளுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைக்கப்பட்டிருக்கிறதாக அவர் கண்டார். இது காரணமாகவே இங்கிலாந்து வெற்றிபெற வேண்டுமென்று திலகர் அவாவினார். எப்பொழுதும் பிழைகளையே செய்துகொண்டிருந்த இந்திய அரசாங்கத்தை அவர் பகைத்து வந்தது ஆச்சரியமன்று. இந்திய அரசாங்கம் யுத்தத்திற்கு 6000 பேர்கள் போதுமானதென்று விளம்பரம் செய்தது; திலகர் 60 லெக்ஷம் வீரர்களைச் சேர்த்துக் கொடுப்பதாக உறுதி கூறினார். ஆனால் அவருடைய வார்த்தை இந்திய அரசாங்கத்தின் செவிகளில் நுழையவில்லை.

புரிந்தார். அவ்வாறு உதவி புரிந்தாலும் இந்தியாவிலுள்ள இராஜாங்கத்தின் பிழைகளைப் பொறுக்க அவரால் முடிய வில்லை; அந்த இராஜாங்கம் இராஜ சக்கரவர்த்திகளின் கவர்ன்மெண்டுகளுடைய காரிய நிர்வாகியேயாகும். காரியஸ் தருடைய செயலினைக் கண்டிப்பதும் கெட்ட காரியஸ்தர் ஒருவரை நீக்கிவிட்டு நல்ல காரியஸ்தர் ஒருவரை நியமிக்கும்படி கேட்பதும் நியாயமேயாகும்.

திலகர் பிரிட்டிஷ் சம்பந்தத்திற்கு ஒரு சிநேகர்; ஆனால் எப்பொழுதும் தப்பே செய்து கொண்டிருக்கிற சுயநல இராஜாங்கத்திற்கு அவர் ஒரு கடுமையான விரோதி. இந்த விஷயத்தை இந்திய இராஜாங்கம் அறிந்து கொள்ளவில்லை. இங்கிலாந்தின் ஆபத்துக் காலத்திலும் கஷ்டகாலத்திலும் அதற்கு உதவி செய்வதற்காக அவர் செய்த முயற்சிகளெல்லாம் பயன்படாமல் இந்திய இராஜாங்கம் செய்தது. தம்மால் எத்தனை இளைஞரைப் படை வீரராகச் சேர்க்க முடியுமோ, அத்தனை பேரையும் படைவீரராகச் சேர்ப்பதற்குத் திலகர் பிரயாசைப் பட்டார். "வயதும் நரைத்த உரோமமும் தகுதியற்றவை என்று கருதப்படாவிட்டால், நான் போர்முனைக்குச் சென்று யுத்தஞ் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று அவர் ஒரு தடவை கூறினார்.

அக்காலத்தில் அவர் செய்த எண்ணிறந்த உபந்நியாசங் களில் அவர் இந்தியாவில் ஏராளமான மனித சக்தி இருக்கிற தென்பதையும், அச்சக்தியை ஜெர்மனிக்கு விரோதமாக இங்கிலாந்து உபயோகிக்கலாமென்றும், அவ்வாறு செய்தால் இங்கிலாந்தில் கட்டாயமாக இராணுவத்தில் சேரவேண்டு மென்ற விதியை அமுலுக்குக் கொண்டுவர அவசியம் நேரிடாதென்றும் எடுத்துக் கூறினார்; ஆனால் அவருடைய உண்மையான இந்தப் பிரார்த்தனைகளெல்லாம் இராஜாங்கத் தாரின் செவிகளுக்குள் நுழையவே இல்லை. இராஜாங்கத்தார் மிதமிஞ்சி மந்தமாயும் தாமதமாயும் இருந்தனர்; இராஜாங்கத் தார் முப்பது கோடி ஜனங்களில் 6000 பேர்கள்தான் வேண்டுமென்று விளம்பரம் செய்தனர்! திலகர் அறுபது லெஷம் பேர்களையும், அவர்களுக்கு அதிகமாகவும் தருவதாக வாக்குச் சொன்னார். பொறுப்பும் செல்வாக்கும் வாய்ந்த ஓர்

இந்தியத் தலைவருடைய இவ்வாக்குறுதிகளையெல்லாம் இராஜாங்கத்தார் பொருட்படுத்தவேயில்லை; அஃதன்றியும், திலகருடைய சொற்களையும் செயல்களையும் சந்தேகத் தோடும் அவநம்பிக்கையோடும் நோக்கினர்.

பிரதம மந்திரி இந்திய ஜனங்களுக்கு இயற்கையாயுள்ள இராஜாபிமான உணர்ச்சியை வெளிப்படுத்தும்படியான விதத்தில் அவர்களைத் திருப்தி பண்ணும் பொருட்டு சில காரியங்களைச் செய்யும்படியாக இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொண்டார்; அவ்வாறே இந்திய கவர்ன்மெண்டார் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைச் செய்தனர். புத்திசாலியான பஞ்சாப் கவர்னரும் டில்லி நகரின் போலிஸ் கமிஷனரும் தங்கள் மாகாணத்துள் திலகர் பிரவேசிக்கக் கூடாதென்று உத்தரவுகள் பிறப்பித்தனர். சென்னை மாகாண கவர்னரும். பேர்போன ஸர் மிக்கேல் ஓடவியரும் சுய அரசாட்சி கேட்பதைப் பற்றிக் கடுமையான சொற்களால் கண்டித்தனர்.

கவர்ன்மெண்டின் புத்தியீனமான இந்தச் செயல்களைத் திலகர் அமைதியோடு ஏற்றுக்கொண்டு, தமது வேலைகளைச் சிரத்தையோடு செய்துவந்தார். ஒரு பக்கத்தில் யுத்தம் சம்பந்தமான வேலையும், மற்றொரு பக்கத்தில் சுய அரசாட்சிக்காகக் கிளர்ச்சியும் திலகர் செய்து கொண்டுவந்தார். அவர் சுதந்தரமானது தாவாப்படாத விஷயம் அன்றெனவும் தாவா இல்லாத காலத்தை எதிர்பார்த்து இந்தியா காத்திருக்க முடியாதென்றும் திலகர் கூறினார். ஐரோப்பிய போர்க் களங்களில் சுதந்தரத்திற்காகப் போர் செய்து கொண்டு தனக்குஅது மறுக்கப்பட்ட போது இந்தியா சும்மா இருக்க முடியவில்லை. இந்திய - இங்கிலிஷ்காரர் பத்திரிகைகளில் சில, சுய அரசாட்சிக் கோரிக்கையை "இராஜீய வியாபாரம்'' எனக் கூறும்படியான அவ்வளவு இழிந்த நிலைக்குப் போய்விட்டன. அஃது எப்படி இருந்தபோதிலும் கானடா தேசமும் ஆஸ்டிரேலியா தேசமும் அவ்வாறு செய்த பின்னர் மிஸ்டர் போனர்ஸா "இரும்பு னாடாயிருக்கும் போதே அதனை அடிப்பாயாக" என்று சொன்னதற்குச் சரியாகத்தான் அவ்வியாபாரம் செய்யப்பட்டது.

சுய அரசாட்சிக்காகத் திலகர் செய்த கிளர்ச்சியைப் பற்றி இந்திய - இங்கிலிஷ்காரரான பண்டிதசிகாமணிகள் சொல்லி யதைத் திலகர் ஒரு துரும்பளவு கூட மதிக்கவில்லை. தம்மால் ஏற்படுத்தப்பட்டதும் திரு ஜோஸப்பாப் டிஸ்டாவால் தலைமை வகிக்கப்பட்டதுமான பூனா மாகாணக் காண்பரன்ஸ்கு அவர் சென்று, அதற்கு 1000 பிரதிநிதி களுக்குமேல் அனுப்பியிருந்த தேசீயவாதிகளின் கக்ஷியைப் பலப்படுத்தினார். 1916-ல் நடந்த பெல்காம் மாகாணக் காண்பரன்ஸும் பூனா மாகாணக் காண்பரன்ஸ் போலவே வெற்றிகரமாகவே முடிந்து தேசீயவாதிகளின் கக்ஷியைப் பலப்படுத்திற்று.

திலகர் நிலைமையும் அவர் கக்ஷியின் நிலைமையும் சரியான பலமுடையதாயிருந்தது; அவர் விரும்பிய பக்ஷத்தில் மிதவாதிகளை சண்டைக்கு இழுத்திருக்க கூடும்; அவர் மிகத் தூரம் பார்க்கக்கூடிய இராஜதந்திரியாயும், உண்மையான தேசாபிமானியாயும் இருந்தபடியால் அவர் அவ்விதம் செய்யவில்லை. அவர் ஒற்றுமைதான் அக்காலத்தில் தேசத்திற்கு மிகமிக அவசியமாக வேண்டியதென்று கண்டார். இராஜப் பிரதிநிதி சட்டசபையின் பத்தொன்பது அங்கத் தினர்கள் தயார் செய்த சீர்திருத்தங்களைப் பற்றிய குறிப்பில் கண்டவற்றைப் பார்க்கிலும் அதிகச் சீர்திருத்தங்களை இராஜீய நிர்வாகத்தில் தாம் விரும்பியபோதிலும், திலகர் ஒற்றுமையின் நிமித்தமாக அக்குறிப்பில் கண்ட சீர்திருத்தங்களை ஒப்புக் கொண்டார். 1916-ம் வருஷம் முழுவதும் திலகரும் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரும் அநேகமாக ஒரே வழியில், ஒரே நோக்கத்தோடு, வேலை செய்தனர் என்பதைச் சொல்லத் திருப்தியாயிருக்கிறது. மிதவாதிகளில் ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரைத் தவிர மற்றவர்களெல்லாம் ஸ்ரீமதி அம்மையாரோடும், திலக ரோடும் ஒன்றுபட்ட அபிப்பிராயமுடையவர்களாயில்லை; இருந்தாலும், எதிரான ஒரு ஸ்தாபனத்தை உண்டுபண்ண அவர்களுக்குத் தைரியம் இல்லை. கவர்ன்மெண்டார் சுய அரசாட்சி இயக்கத்தை நசுக்குவதில் விருப்பங் கொண்டிருந் தனர். திலகருக்கும் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாருக்கும் ஏராளமான தொந்தரவுகளைக் கொடுத்தனர். 1916 - ம் வருஷம்

ஜூலை மாதம் 23 - ம் தேதி திலகருடைய அறுபத்தொன்றாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. 8000 பேர்கள் அடங்கிய ஒரு பெரிய பொதுஜனக்கூட்டம் நடைபெற்றது. அநேக வாழ்த்துப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. திலகருக்கு ஒரு லெக்ஷம் ரூபாய் அடங்கிய பணப்பையும் வேறு பல விலை உயர்ந்த பொருள்களும் கொடுக்கப்பட்டன.

24.6.1934

✤ ✤ ✤

## 13. சுயாட்சிக் கிளர்ச்சியின் தாதையர்க்கு எதிரான சூழ்ச்சி*

**ஸ்ரீ திலகரின் மீது தொடர்ந்த வழக்கு தோல்வி**
**முஸ்லீம் மகாஜனங்களின் ஏகோபித்த**
**ஆதரவைப் பெற்ற சுயாட்சித் திட்டம்**
**அடக்குமுறைக்கு இலக்கான அனிபெசண்டு அம்மை**
**அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அகில இந்திய எதிர்ப்பு**

### நல் நடக்கை ஜாமீன்

கவர்ன்மெண்டாரும் அவருக்கு ஒரு வெகுமதி அளித்தனர். அதாவது அவர் ஒரு வருஷத்திற்கு நல் நடக்கையோடிருப்பதற்காக அவரிடமிருந்து ரூபாய் 20,000-த்திற்கு முச்சலிக்காகவும் இரண்டு ஜாமீன்தாரர்களிடமிருந்து ஆளுக்கு ரூபாய் 10,000 வீதம் ஜாமீனும் ஏன் வாங்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படியாக அவருக்கு ஒரு நோட்டீஸ் செலுத்தப்பட்டது. கவர்ன்மெண்டார் இதனோடு நின்றுவிடவில்லை. பெல்காம் நகரிலும் அகமெட் நகரிலும் சுய

---

*ஸ்ரீ திலக மகரிஷி மகா ஐரோப்பிய யுத்தகாலத்தில், பிரிட்டிஷ் சர்க்காருக்கு இந்திய மக்களிடமிருந்து பேருதவி ஈட்டிக் கொடுத்தார். இந்திய சர்க்காரோ, அவருடைய அபாரச் செல்வாக்கில் அழுக்காறு கொண்டு, நன்னடத்தை ஜாமீன் வழக்கு மூலமாகவும், தடையுத்தரவுகள் வாயிலாகவும் அவருக்கு விளைத்த இன்னல்களும் சுய அரசாட்சிக் கிளர்ச்சியின் சம்பந்தமாக ஸ்ரீ திலகர் முஸ்லீம் மகாஜனங் களின்ஏகோபித்த ஆதரவைப்பெற்ற விதமும், (சமீபத்தில் காலஞ்சென்ற) ஸ்ரீமதி டாக்டர் அனிபெஸண்டு அம்மையார், சர்க்காரால் அடக்குமுறைப் பாணத்திற்கு இலக்கான விருத் தாந்தமும், இந்திய மக்கள் அம்மையாரின் அருஞ்சேவையை உணர்ந்து அவரைக் காங்கிரஸ் பிரஸிடெண்டாகத் தெரிவுசெய்த விவரமும், இக்கட்டுரையில் அடங்கியிருக்கின்றன.

அரசாட்சியைப் பற்றி திலகர் செய்த இரண்டு பிரசங்கங்கள் ஆக்ஷேபிக்கப்பட்டன. கேஸ் பூனா டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட் முன் 1919 - ம் வருடம் மே மாதம் 7-ந் தேதி விசாரணைக்கு வந்தது. கவர்ன்மெண்டார் சுய அரசாட்சிக்கு ஆக்ஷேபம் செய்யவில்லையென்றும், சுய அரசாட்சியைப் பற்றி திலகர் செய்த பிரசங்கங்களுக்கே ஆக்ஷேபம் செய்கின்றனரென்றும் கவர்ன்மெண்ட் வக்கீல் தெளிவாகச் சொன்னார். முன்பின் தொடர்ச்சி இல்லாமல் சில வாக்கியங்களை மட்டும் அவர் வாசித்துக் காட்டித் தமது கேஸை திலகர் பேரில் "ருஜுப்பித்து" விட்டார்.

"ஜனங்கள் அடிமைகளாயிருக்கிறார்களென்றும் அவர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்படவில்லையென்றும், இந்தியர்களுடைய நன்மைகளுக்கு அந்நியமானவற்றைத்தான் கவர்ன்மெண்டார் கவனிக்கின்றனர் யென்றும், இந்தியர்கள் தங்களை ஆள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்ற காரணத்தினால் ஜனங்களை அடிமைகளாய் வைத்திருப்பதற்கு விரும்புகின்றனர்'' என்றும் சொல்லித் திலகர் கவர்ன்மெண்டுக்கு விரோதமான உணர்ச்சியை உண்டு பண்ணினார் என மாஜிஸ்டிரேட் சொன்னார். மேலும், ஒரு வருஷக் காலத்திற்கு நல்நடத்தையாயிருப்பதற்காகத் திலகர் ரூபாய் 20,000த்திற்கு ஒரு முச்சலிக்காகவும், இரண்டு ஜாமீன்தார்கள் ஆளுக்கு ரூபாய் 10,000த்திற்கு ஜாமீனும் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு செய்தார்.

திலகர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பு ஸ்ரீ பாச்சிலர் என்ற நீதிபதியாலும் ஸ்ரீ சர் லலுபாய்ஷா என்ற நீதிபதியாலும் ரத்துச் செய்யப்பட்டது. ஜட்ஜ் பாச்சிலர் 'பிரசங்கத்தின் பயனை நிச்சயப்பதற்கு மிகமிக நல்ல வழி மூன்று பிரசங்கங்களையும், ஆரம்பம் முதல் அந்தம் வரையிலும் அமைதியோடும் கவனத்தோடும் வாசித்தல் வேண்டும். அவ்வாறு வாசிக்கும் போது திலகர் பிரசங்கங்களைக் கேட்ட ஜனங்களின் இராஜீய ஞானமின்மையையும் அவர் வாதங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நான் இந்த பிரசங்கங்களை ஒருதடவை அன்று பலதடவை வாசித்தேன். என் மனத்தில் பட்டதெல்லாம்

வாதி தரப்பினர் சரியாக ஆக்ஷேபித்த சில வாக்கியங்கள் தவிர பிரசங்கங்கள் முழுவதும் அதிருப்தியையாவது விரோத உணர்ச்சியையாவது அலட்சிய உணர்ச்சியையாவது உண்டுபண்ண மாட்டாது என்பதே' என்று எழுதியிருக்கிறார்.

பூனா டிஸ்டிரிக்கு மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பை மாற்றி ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பானது தேச முழுவதும் ஓர் ஆனந்த உணர்ச்சியை உண்டுபண்ணிற்று. திலகரைத் தண்டனைக்குட்படுத்துவதற்காக வேறோர் எத்தனம் செய்யப் பட்டது. தமது சொந்த வேலையாக போயிருந்த காடாகு நகரில் அவர் ஒரு பிரசங்கமும் செய்யக்கூடாதென்று ஓர் உத்தரவு அவருக்குச் செலுத்தப்பட்டது. அவரை கௌரவப்படுத்து வதற்காகக் கூடியிருந்த ஒரு பெருங்கூட்டத்தில் அவர் பேசுவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்னர்தான் அவ்வுத்தரவு அவருக்குச் செலுத்தப்பட்டது. அதிகாரிகள் நினைத்தபடி அவர் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப் படியாமல் இருக்கவில்லை. அவர் தாம்பூலம் பெற்றுக்கொண்டு அப்பெருங்கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

**லக்நௌ காங்கிரஸ்**

1916-ம் வருடம் டிசம்பர் மாதம் நடந்த காங்கிரஸில் திலகர் மறுபடியும் பிரவேசித்தார். அவர் பிரமாதமாக வரவேற்கப் பட்டார். 'இவ்வரவேற்பு தாழ்வுடைய எனக்கு அளிக்கப் பட்டதாக நினைக்கக்கூடிய அவ்வளவு மடமையை உடையவன் அல்லன் நான். அது நான் இப்போது ஆதரிக்கப் போகிற தீர்மானத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்கு அளிக்கப் பட்டதாக நான் நினைக்கிறேன். நாம் எல்லோரும் தோளோடு தோள் ஒன்றுசேர்ந்து சப்தமிட்டு சுய அரசாட்சி வேலையைச் செய்யும்படியாக நான் சென்ற பத்து வருஷக் காலம் ஜீவித்திருந்ததைப் பற்றி சந்தோஷமடைகிறேன். அந்த ஐக்கிய மாகாணத்தில் நாம் எல்லோரும் ஐக்கியமாயிருக்கிறோம். நமது தாய் தேசத்தின் பொதுநன்மைக்காக மிதவாதிகளும் தேசீய வாதிகளும் சினேகிதர்களாயும் தோழர்களாயும் ஒன்று சேர்ந்து வேலைசெய்யும்படியாகக் காங்கிரஸ் பிரஸிடெண்டு ஸ்ரீ அம்பிகா சரணும், ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரும் செய்த முயற்சிகளுக்காக நான் வந்தனம் அளிக்கிறேன்' என்று திலகர் பதில் கூறினார்.

திலகர் செய்த காரியம் தேசம் முழுவதிலும் மதிக்கப் பட்டது; அஃது அவருடைய நீண்ட கால விரோதிகளுக்கும் நிந்தனையாளருக்கும் அபஜயத்தைக் கொடுத்தது. திலகருடைய பின்வருகிற இராஜீய நிபுண வார்த்தைகள் அவர் முகமதியர் களிடத்துக் கொண்டிருந்த மனப்பான்மையைப் பற்றிய தப்பபிப்பிராயங்களையெல்லாம் நீக்கிவிட்டன. "ஹிந்துக் களாகிய நாங்கள் முகமதியர்களுக்கு அளவுக்கு மிஞ்சி விட்டுக் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. நாங்கள் அளவுக்கு மிஞ்சி விட்டுக் கொடுத்திருக்க முடியாதென்று நான் சொல்லும் போது, இந்தியா முழுவதிலும் உள்ள ஹிந்து வகுப்பினர் களுடைய உணர்ச்சியைத்தான் வெளியிடுகிறேன் என்று நம்புகிறேன். சுய அரசாட்சி உரிமைகள் முகமதிய வகுப்பினர் களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட போதிலும், அதை நான் பொருட்படுத்தமாட்டேன். அவ்வுரிமைகள் இராஜபுத்திரர் களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டாலும் அதனை நான் பொருட்படுத்தமாட்டேன். அவை ஹிந்துக்களில் தாழ்ந்த வகுப்பினர்களென்று சொல்லப்படுகிறவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டாலும், நான் பொருட்படுத்த மாட்டேன். அப்பொழுது சண்டை இப்போதிருக்கிறபடி முக்கிய மாயிராது."

யுத்தத்திற்குப் பின் செய்யப்படவேண்டிய இராஜீய சீர்திருத்தங்களுக்கு ஒரு திட்டம் தயார் செய்யும்படியாக எல்லா இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு லக்நௌ காங்கிரஸ் அதிகாரம் கொடுத்தது. அது "பத்தொன்பது அங்கத்தினர்கள் தயாரித்த திட்டத்தின்" அபிவிருத்தியே; அஃது எல்லா இந்தியா முஸ்லீம் சங்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறாகக் காங்கிரஸ் முஸ்லீம் சங்கத் திட்டப்படியே சீர்திருத்தம் வேண்டுமென்று இந்தியா ஜனங்களெல்லாம் மிதவாதிகளும் அமிதவாதிகளும், ஹிந்துக்களும், முசல்மான்களும் கேட் டார்கள். அஃது 'இந்தியர்களுடைய குறைக்க முடியாத குறைந்த வேண்டுதல்' என்று கருதப்பட்டது.

**இந்தியர் வேண்டுதல்**

1917-ம் வருஷத்து முதல் மூன்று மாதங்களில் எல்லாத் தலைவர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டி, அதன் முக்கிய

அம்சங்களையும் பொதுஜனங்களுக்கு எண்ணிறந்த பிரசங்கங்கள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் விளக்கினார்கள். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் இந்தக் கிளர்ச்சியை சென்னை மாகாணத்தில் நடத்தினார். அவர் திலகரை அடிக்கடி ஆலோசித்துக் கொள்வர். இவ்விருவரும் ஒன்று சேர்ந்து ஆலோசித்து, இந்தக் கிளர்ச்சியைக் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடத்தினர்; இக்கிளர்ச்சியைப் பார்த்து இராஜாங்கத்தார் திகைத்துப் போயினர். திலகரோடு பெஸண்டு அம்மையார் ஒன்று சேர்ந்து வேலை செய்கிறதைத் தடுப்பதற்காக பம்பாய் கவர்னர் (வில்லிங்டன் பிரபு) ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் பம்பாய் மாகாணத்துள் பிரவேசிக்கக் கூடாதென்று ஓர் உத்தரவு பிறப்பித்தார்; இந்த மிதமீறிய செயலுக்காக நியூ இந்தியப் பத்திரிகையானது தனது வழக்கமான உக்கிரத்தோடு பம்பாய் கவர்னரைத் தாக்கிப் பொதுஜனங்களின் ஆதரவை அதிகரிக்கச் செய்தது. அதே காலத்தில் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரும், அவரோடுகூடி வேலைசெய்துவந்த ஸ்ரீ பி. பி. வாடியாவும், ஸ்ரீ ஜி. எஸ். அருண்டேலும் மதராஸ் கவர்ன்மெண்டுக்குத் 'தாங்கக் கூடாதவர்'களாய் விட்டார்கள். ஆனால், அவர்கள் ஓர் எல்லைக்குள் சிறை வைக்கப்பட்டார்கள்.

மதராஸ் கவர்ன்மெண்டின் இந்த மிதமிஞ்சிய செயலானது தேசம் முழுவதிலும் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் இவ்வாறு கொடுமையாக நடத்தப்பட்டதைக் குறித்து இந்திய ஜாதியார் அனைவரும் ஒரு மனிதன் போல் ஒன்று சேர்ந்து கிளம்பிக் கண்டனம் செய்தார்கள். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரையும், அவருடைய சகாக்களையும் சிறைப்படுத்துவதினால் கவர்ன்மெண்டார் சுய அரசாட்சிக்காகச் செய்யப்படும் கிளர்ச்சியை வேரோடு ஒழித்துவிடக் கருதினர். பொறுப்புவாய்ந்த இந்திய பத்திரிகாசிரியர்களெல்லாம் ஒரு பலமான சண்டையைக் கிளப்புவதற்காக ஒன்று சேர்ந்தார்கள்.

ஸ்ரீ ஜின்னாவும், முஸ்லிம் சங்கத்தின் பிரதான அங்கத்தினர்கள் பலரும் தங்கள் ஆக்ஷேபத்தைத் தெரிவிப்பதற்காக பெஸண்டு அம்மையார் முதலியோரை ஓர் எல்லைக்குட்

சிறைப்படுத்தியதைத் தெரிந்தவுடன் சுய அரசாட்சிச் சங்கத்தின் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்தார்கள். பண்டிதர் மதனமோகனர் செய்த ஒரு பிரசங்கத்தில் இந்தியாவின் சுதந்தர வேண்டு கையைத் திக்குமுக்கடையச் செய்வதற்காக அவ்வேண்டுகை களில் அனுதாபமுள்ள மூன்று சிநேகிதர்களைக் கவர்ன் மெண்டார் சிறைப்படுத்தினர் என்று சொன்னார். மதராஸ் ஹிந்துப் பத்திரிகையும், அதன் திறமை வாய்ந்த ஆசிரியர் ஸ்ரீ எஸ் . கஸ்தூரி ரெங்கய்யங்காரும் சிறைப்படுத்தப்பட்டவர் களிடம் கொண்டிருந்த வேற்றுமைகளையெல்லாம் விட்டு விட்டு, உறுதியோடும் ஊக்கத்தோடும் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். மதராஸின் பெரிய விருத்தாப்பிய மனிதராகிய டாக்டர் சுப்பிரமணிய அய்யர், வயது முதிர்ச்சியால் கண்தெரியாமலும், பலஹீனமாயும், நடக்கமுடியாமலும் இருந்தபோதிலும் தமது 'கடற்கரை வீட்டி'லிருந்து ஒரு சிங்கம் போலக் கர்ஜித்தார்.

திலகர் அக்கிளர்ச்சியை மகாராஷ்டிர தேசத்தில் நடத்தினார். 'அம்மையாருக்காக நாம் எவ்வளவு கூர்மையாக உணருகிறோமென்பதை ருஜுபிக்க நாம் விரும்பினால், அவரை வருகிற காங்கிரஸுக்குத் தலைவியாகத் தெரிந்தெடுக்கக் கடவோம்' என்று அவர் கூறினார். காலத்திற்கு ஏற்றதான இந்த இராஜதந்திர வார்த்தையைக் கோழைகளான மிதவாதிகளிற் சிலர் ஆக்ஷேபித்தபோதிலும், தேசமானது, பொதுவாக அதற்கு அனுகூலமாயிருந்தது; மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளில் பெரும்பாலன ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரை அந்த வருடத்துக் காங்கிரஸ் பிரஸிடண்டாகத் தெரிந்தெடுத்தன. திலகர் சொல்லியதை ஜனங்கள் ஏற்றுக்கொண்டதானது அவருடைய கக்ஷியார் மிதவாதிகள்மீது கொண்ட வெற்றியைக் காட்டிற்று; மிதவாதிகளுடைய கோட்பாடு 'பகிரங்கமாகக் கவர்ன்மெண்டை அலக்ஷியம் செய்யாதீர்கள்; கவர்ன்மெண்டு நம்முடைய இயக்கத்தை ஒரு க்ஷணத்தில் நசுக்கிவிடும்' என்பதாக இருந்தது. (இதன் தொடர்ச்சி பக்கம் பத்தில் இருப்பதாகக் குறிப்பு உள்ளது. ஆனால், பக்கம் 10 கிடைக்க வில்லை)

1.7.1934

✤ ✤ ✤

## 14. ஸ்ரீ திலகரை வசப்படுத்த முயற்சித்த சீமை மந்திரி

### மாண்டேகு – செம்ஸ்போர்ட் – திலகர் அரசியல் சீர்திருத்தச் சம்பாஷணை அனிபெஸண்டம்மையார் அவைத்தலைமை வகித்த காங்கிரஸ் மகாநாட்டின் நிகழ்ச்சி

**பொறுப்பாட்சிக் கொள்கை அறிவிப்பு**

இக்காலத்தில் மிஸ்டர் மாண்டேகு இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு சிக்கலான நிலைமையைக் கண்டார். இங்கிலாந்து ஜெர்மனிக்கு விரோதமான சண்டையில் ஈடுபட்டிருந்தது. அதனால், அது இந்திய விஷயத்தைப் பற்றி நினைக்கவே முடியாத நிலைமை ஏற்பட்டது. இந்தியாவிலுள்ள இராஜாங்க அதிகாரிகள் இந்தியாவின் காரியங்களைச் சரியாக நிர்வாகம் செய்யாமல், இந்திய ஜனங்களுக்குக் கோபமூட்டி எரிச்சல் உண்டாக்கிவிட்டார்கள். அதனால் இங்கிலாந்து அவசரமாக இந்தியா விஷயத்தில் பிரவேசிக்க வேண்டிய தாயிருந்தது. நாகரீகம் பெற்ற மனித ஜாதியாரெல்லாம் இங்கிலாந்தின் செயலைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இங்கிலாந்து இந்தியாவுக்கு ஓர் அளவு சுய அரசாட்சியாவது அளிப்பதாக வாக்குக் கொடுக்காவிட்டால், இங்கிலாந்து வஞ்சகம் செய்வதாகக் குற்றஞ்சாட்டப்படும் நிலைமையில் இருந்தது. அதனால், இந்தியாவைப் பொறுத்துள்ள நோக்கத்தை மாற்றும்படியாக இங்கிலாந்து வற்புறுத்தப்பட்டது.

மிஸ்டர் மாண்டேகு இவ்விஷயங்களைத் தெரிந்து 1917 -ம் வருடத்து சரித்திர பூர்வமான அறிக்கையை வெளியிட்டார். இந்தியாவில் பிரிட்டிஷாரின் கொள்கையின் நோக்கம்

"பொறுப்பாட்சி" வழங்குதல் என்றும், பொறுப்பாட்சியை வழங்கும் அளவும் காலமும் இந்தியா கவர்ன்மெண்டாரால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் அவர் அறிவித்தார். இவ்வறிவிப்பானது இந்தியாவின் நிலைமையில் ஒரு முழு மாற்றத்தை உண்டு பண்ணிற்று. சிறையுள் வைக்கப்பட்ட ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரும் மற்றவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு வந்து, இராஜப் பிரதிநிதியுடன் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் அநேக தூதுக் கோஷ்டிகளையும், வரவேற்புப் பத்திரங்களையும், அரசியல் சீர்திருத்தக் குறிப்புகளையும் பெற்றார். இவற்றிற் பெரும்பாலானவை காங்கிரஸ் - முஸ்லீம் லீக் சீர்திருத்தங்களை அனுசரித்திருந்தன. இராஜப் பிரதிநிதி யோடும் இந்தியா மந்திரியோடும் திலகர் வெகுநேரம் சம்பாஷணை செய்தார்; அச்சம்பாஷணையை அவர்கள் நன்றாக ஏற்றுக் கொண்டனர். திலகர் சம்பாஷணையின் திறமை யையும், தெளிவையும், வசப்படுத்துந்தன்மையையும், மிஸ்டர் மாண்டேகு மெச்சினார். அப்போது வழங்கப்படுவன வாயிருந்த சீர்திருத்தங்களை ஒப்புக் கொள்வதாக ஒரு வாக்குறுதி வாங்கித் திலகரைக் கைவசப்படுத்துவதற்காக எத்தனங்கள் செய்யப்பட்டன. ஆனால் திலகர் மாண்டேகு களாலும் செம்ஸ்போர்டுகளாலும் எளிதில் ஏமாற்றப்பட முடியாத அளவுக்கு அதிக உறுதியான மனத்தையும் தெளிவான பார்வையையும் கொண்டிருந்தார். மாண்டேகு விஜயம் முடிவுற்றது. சட்டப்படி வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங் களின் அறிக்கை அதிகத் தாமதமாகப் பிரசுரிக்கப்பட்டது.

**கல்கத்தா காங்கிரஸ்**

இதற்கு மத்தியில், இந்தியா மந்திரி இந்திய விஷயத்தைப் பற்றித் தலத்தில் விசாரணை செய்து கொண்டிருந்தபோது வருஷாந்திரக் காங்கிரஸ் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரைத் தலைமையாகக் கொண்டு நடக்க வேண்டியதாயிருந்தது. திலகர் 500 தேசீயப் பிரதிநிதிகளுடன் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரைத் தலைவர் ஸ்தானத்திற்கு உயர்த்துவதற்கு ஏன் சம்மதித்தாரென்று திலகரை அவருடைய

கல்கத்தா நண்பர்களின் அநேகர் கேட்டனர். அதற்கு அவர் இந்திய விஷயத்தை முன்னேற்றுவதற்கு பெஸண்டு அம்மை யாரை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று மறுமொழி பகர்ந்தார். அவர் சொல்லியதின் அர்த்தமாவது:-

ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் அந்தக் காலத்தில் இந்திய சுய அரசாட்சி விஷயத்தைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்; அதனால் அவர் கவர்ன்மெண்டாரால் துன்புறுத்தப் பட்டார்; அவரைக் காங்கிரஸ் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுத்தல் இராஜாங்க அதிகாரிகளைச் சண்டைக்கு அறைகூவி அழைத்ததாகும்; அதனால், அது இந்திய விஷயத்திற்கு உதவி புரிந்ததாகும் என்பதாம். திலகர் கூறிய இந்த உண்மையை ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் இரண்டு வருஷங்களுக்குப் பின் திலகருக்கு விரோதமாக உபயோகித்தார்.

கல்கத்தாக் காங்கிரஸில் திலகர் இரண்டு விஷயங்களைப் பற்றிப் பேசினார். ஒன்று அலி சகோதரர்களைப் பற்றிய தீர்மானம்; மற்றொன்று சுய அரசாட்சியைப் பற்றிய தீர்மானம். அங்கு ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தேசத்திற்காக மிகமிகக் கஷ்டப்பட்டவரும், அதனால் தன்னைத் தியாகம் செய்யும் தேசாபிமானத்தைப்பற்றிப் பேசுவதற்கு உரிமையுடையவருமான திலகர் தமது மக்களைப் பற்றிப் பெருமையாகக் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். சுய அரசாட்சித் தீர்மானத்தைப் பற்றி அவர் பேசிய பேச்சுத்தான் காங்கிரஸில் அவர் பேசிய பேச்சுக்களிலெல்லாம் பெரியது. அந்தப் பேச்சில் அவர் இந்தியாவின் நிலைமையை மிகுந்த சாமர்த்தியத்துடன் பாகுபாடு செய்து, மேல்செய்ய வேண்டிய செயலுக்குத் தெளிவாக வழிகாட்டினார்.

ஆகஸ்டு மாத அறிக்கைக்காக மிஸ்டர் மாண்டேகுக்கு நன்றி செலுத்தியதாகச் சொல்லப்பட்டிருந்த அத்தீர்மானத்தின் அந்தப் பாகத்தை ஸ்ரீபிபின சந்திரபாலர் எதிர்த்தார். அவர் அதனை ஆக்ஷேபித்ததற்குக் காரணம் ஒரு தேசத்தார் வந்தனம் அளிப்பது மிக அருமையாயிருக்க வேண்டுமென்பதும், அவ்வறிக்கைக்காக யாருக்கானாலும் வந்தனம் அளிப்பதற்குரிய தருணம் அப்போது வரவில்லை யென்பதுமே. மிதவாதிகளும் அமித தேசீயவாதிகளும் திருப்தியடையும்படியான விதத்தில்

திலகர் அத்தீர்மானத்தை வியாக்கியானம் செய்தார். மத்திய கவர்ன்மெண்டில் பொறுப்பாட்சி வேண்டுமென்பதற்கு அவர் சொல்லிய காரணங்கள் யாவரும் அங்கீகரிக்கத் தக்கவை யாயிருந்தன. கவர்ன்மெண்டை ஓர் உறுப்பைப்பற்றிய வியாதி களால் வருந்திக் கொண்டிருந்த ஒரு வியாதியஸ்தனுக்கு அவர் ஒப்பிட்டார். ஓர் உறுப்பைப்பற்றிய வியாதி அவ்வுறுப்புக்குச் செய்யும் சிகிச்சையால்தான் தீரும் என்று அவர் விவாதித்தார். மூளையின் ஆரோக்கியத்தையும் பலத்தையும் விர்த்தி செய்கிற ஒரு வகை மருந்தை அவ்வியாதியஸ்தனுக்குக் கொடுக்க வேண்டும்; அப்போது அவனுடைய உடம்பின் பல உறுப்புக் களும் தமது சாதாரண வேலைகளைத் திரும்பிச் செய்யத் தொடங்கும். ஆகஸ்டு மாத அறிக்கையை அனுசரித்திருக்கும் படியாகவும் ஆனால், சாரமற்றவையாகவும் பெயரளவிலும் மாத்திரம் சீர்திருத்தங்களை வழங்குவதற்காக முயன்று கொண்டிருந்த ஸர்.லையோனல் காட்டிஸ் என்பவரிடத்தும் சர் வாலன்டைன் சிரோல் என்பவரிடத்தும் மிக ஜாக்கிரதை யாயிருக்க வேண்டுமென்று தமது தேசத்தாருக்கு எச்சரிக்கை செய்தார்.

15.7.1934

✤ ✤ ✤

# 15. ஸ்ரீ திலகருக்கு பம்பாய் சர்க்காரின் வாய்ப்பூட்டு

## மிதவாதிகளின் மதியற்ற முயற்சிகள் விசேஷக் காங்கிரஸில் மிதவாதிகளை மடக்கிய திலகரின் விநயமொழி

**அரசியல் சீர்திருத்தம்**

கல்கத்தா காங்கிரஸ் நடந்து முடிந்தவுடன், பிரிட்டிஷ் ஜனங்களுக்கு இந்தியாவின் தேவைகளைப்பற்றியும் கோரிக்கை களைப்பற்றியும் விளக்கிச் சொல்வதற்காக ஒரு தூதுக் கோஷ்டியை இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் திலகர் பணம் சேகரித்தார். தூதுக் கோஷ்டியில் திலகரும், ஸ்ரீ பிபின சந்திரபாலரும், கனம் ஸ்ரீ ஜீ. எஸ் கப்பர்தேயும், வேறு சிலரும் இருந்தனர். அந்தக் கோஷ்டியார் கொழும்புவரையில் சென்றனர். அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த அனுமதிச் சீட்டுகள் திடீரென்று ரத்துச் செய்யப்பட்டன. அவ்வாறு செய்ததற்குக் காரணம் இங்கிலாந்து யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், இந்திய விஷயங்கள் அதன் கவனத்துள் நுழைக்கப்படக்கூடா தென்பதே.

திலகர் பூனாவுக்குத் திரும்பிப் பின்னும் சிலகாலம் காத்திருந்தார். சட்ட வரம்புக்குட்பட்ட சீர்திருத்தங்களைப் பற்றிய அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. அது வேற்றுமையை உண்டுபண்ணும் உண்மையான ஒரு கனியாயிற்று. சில தலைவர்கள் அதனை அடியோடு மறுத்துவிடவேண்டும் என்றார்கள். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் அச்சீர்திருத்தங் களை வழங்குவது இங்கிலாந்துக்குக் கௌரவம் அன்று; அதனை ஏற்றுக்கொள்வது இந்தியாவுக்குக் கௌரவம் அன்று எனக் கூறினர். ஸ்ரீ சுப்பிரமணிய ஐயருங்கூடத் தமது

தேசத்தார்களுக்கு வழங்கப்பட்ட அம்மயக்க மருந்தைத் தொடவே கூடாதென்று அவர்களுக்குப் புத்தி சொன்னார்.

மிதவாதத் தலைவர்கள் அவ்வறிக்கையைத் தயாரித்தவர்களை அளவுகடந்து புகழ்ந்து, அவ்வறிக்கையில் கண்ட சீர்திருத்தங்கள் ஆயிர வருஷப் பலன்களைத் தருமென்று கூறினார்கள். அவர்கள் காங்கிரஸின் அமிதவாத தலைவர்கள் அவ்வறிக்கையை அடியோடு மறுத்துவிடுவார்களென்ற ஒரு நம்பிக்கையைக் கொண்டு அச்சீர்திருத்த அறிக்கையைத் தாங்கள் ஏற்று அரசியலை நடத்தலாமென்று தவறாக நினைத்தார்கள். அன்றியும், அவர்கள் அச்சீர்திருத்தங்களை அமிதவாதத் தலைவர்கள் மறுத்து விடுவார்களென்ற நம்பிக்கையின் பேரில், அச்சீர்திருத் தங்களைக் 'காப்பாற்று வதற்கு' முயற்சிகள் செய்யவேண்டுமென்று தங்களுள் சதியாலோசனை செய்தார்கள்.

ஆதலால், அமிதவாதிகளின் எதிர்ப்பிலிருந்து சீர்திருத்தங்களைக் காப்பாற்றவேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் மிதவாத சங்கங்கள் கிளம்பின; தங்கள் கைகளை முன்னர் நீட்டிச் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்காக மிதவாதிகளின் கொள்கைகளையுடையவர்களையெல்லாம் சேர்த்து ஒரு மகாநாடு கூட்டுவதற்காக முயற்சிகள் செய்யப்பட்டன. எதிர்க்கும் இயற்கையுள்ள அமிதவாதிகளுக்கும் தங்களாலேயே ஏமாற்றப்பட்டிருக்கிற மிதவாதிகளுக்கும் விரோதமாகத் திலகர் கடுமையான வேலைசெய்ய வேண்டியதாயிருந்தது. அவர் பம்பாய் கவர்ன்மெண்டின் உத்தரவொன்றால் வாய்ப்பூட்டு இடப்படாமல் இருந்தால் இந்த இரு தரத்து இராஜீயவாதிகளுள்ளும் ஏற்பட்டிருந்த தப்பபிப்பிராயத்தை அவர் மாற்றியிருக்கக் கூடும்.

ஒரு விசேஷ காங்கிரஸைப் பம்பாயில் கூட்டவேண்டுமென்று ஒரு பிரேரேபணை செய்யப்பட்டது. மிதவாதிகள் அந்த காங்கிரஸிலிருந்து விலகிக்கொள்வதாகவும், அதே இடத்தில் வேறொரு காண்பரன்ஸ் நடத்துவதாகவும் தீர்மானித்தார்கள். இவ்விலக்கம் முக்கியமாக மிதவாதப் பத்திரிகைகளின் முயற்சியால் உண்டுபண்ணப்பட்டது. அவை அச்சமயத்தில் செய்த தேசாபிமானமற்ற செயலுக்காக

இப்போது வெட்கப்படவேண்டும். சிறுபாலாருடைய இவ் விலக்கம் ஏற்பட்டபோதிலும் விசேஷக் காங்கிரஸ் மிக நல்ல வெற்றியோடு முடிந்தது. மிதவாதிகளின் மனங்களில் அனாவசியமான அச்சமுண்டாகாமல் தடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் திலகர் விசேஷக் காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். விசேஷக் காங்கிரஸில் மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையைப் பற்றிப் பேசிய போது திலகர் பின்வரும் அபிப்பிராயங்களை வெளியிட்டார்:-

"விஷயாலோசனைக் கமிட்டியில் நம்முடைய வெவ்வேறு அபிப்பிராயங்களை வடிகட்டுவதற்காக நாம் முயற்சித்தோம். 'வெள்ளரிக்காய்களையும் பூசனிக்காய்களையும்' ஒன்று சேர்த்து வடிகட்டுவது மிகக் கஷ்டமாயிருந்தது. அஃது எளிதான வேலையன்று. நமது எதிரிகளும் அது கஷ்டமான வேலையென்றுதான் கருதியிருக்கிறார்கள். அவர்கள் செய்ய முடியாத ஒரு வேலையில் நாம் ஈடுபட்டுயிருக்கிறதாகவும், செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் காங்கிரஸ் என்பதே இல்லாமல் போய்விடுமென்றும் நம்பினார்கள். அவர்களுடைய துர்அதிர்ஷ்டவசமாக, அவர்களுடைய முன் நம்பிக்கைகள் உண்மையாகவில்லை. பொறுமைத் தத்துவமும் கொடுத்து வாங்கும் தத்துவமும் காங்கிரஸில் இருக்கும் வரையில் அத்தகைய அபாயகரமான முடிவு ஒருபோதும் ஏற்படாது.

காங்கிரஸ் சீர்திருத்த அறிக்கை முழுவதையும் நாம் மறுத்துவிடப் போவதாக சொல்லப்பட்டோம். அதன் அர்த்தத்தை நான் ஒருபோதும் தெரிந்துகொண்டதில்லை; தெரிந்துகொள்ளப் போவதுமில்லை. இப்போது நாம் சுய அரசாட்சியைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கிறோம். நீங்கள் சீர்திருத்த அறிக்கையை மறுத்து விட்டால் அதைப்பற்றிய உங்கள் வேலை முடிந்துவிட்டது. பின்னர், நீங்கள் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்? சீர்திருத்த அறிக்கைஸ்யை மறுக்கிறோ மென்றா? அந்த மாதிரியான நிலைமையை நாம் கைக்கொள்வது அயுக்தமானதென்பதைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய மட்டும் இராஜீய விஷயங்களை நாம் கற்றிருக்கிறோம்.

நாம் எல்லாருடையவும் அதிர்ஷ்டவசமாக, தர்க்க ரீதியோடு பொருந்திய ஒரு தஸ்தாவேஜை, ஒரு தீர்மானத்தை

உங்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம். அதில் ஒரு கக்ஷியாரின் ஞானமும், மற்றொரு கக்ஷியாரின் மிதமான சுபாவமும், மூன்றாவது கக்ஷியாரின் அவசரமும் சேர்ந்திருக் கின்றன. மாண்டேகு அறிக்கை மிக அழகிய சாதுரியமுள்ள இராஜ தந்திரம் வாய்ந்த ஒரு தஸ்தாவேஜ். நாம் சுய அரசாட்சி ரூபாயில் எட்டணாதான் கேட்டோம். அவ்வறிக்கை பொறுப்பாட்சி ரூபாயில் ஓர் அணாக் கொடுக்கிறது. ஆனால் அஃது எட்டணாச் சுய அரசாட்சியிலும் நல்லதென்று அவ்வறிக்கை சொல்லுகிறது. அவ்வறிக்கையின் கல்வித் திறமையெல்லாம் பொறுப்பாட்சியின் ஒருபிடிசாதம் சுய அரசாட்சிக்காக நாம் கொண்டிருக்கிற பசியைத் தணிப்பதற்கு போதுமானதென்று நாம் நம்பும்படியாகச் செய்கிறது. நாம் பின்வருகிறபடி கவர்ன்மெண்டாருக்குத் தெளிவாகச் சொல்லுகிறோம்:-

"ஓர் அணா பொறுப்பாட்சி அளிப்பதாகச் சொன்னதற் காக நாங்கள் உங்களுக்கு வந்தனம் அளிக்கிறோம். சீர்திருத்த அறிக்கையில் காங்கிரஸ் - லீக்குக் குறிப்பில் கண்டவற்றை யெல்லாம் எழுதும்படியாக நாங்கள் சொல்லவில்லை. ரெயில் தண்டவாளங்கள் வேறாய் இருக்கலாம். ஆனால் பிரயாணி களைத் தாங்கிச்செல்லும் வண்டிகள் ஒரு தண்டவாளத் திலிருந்து மற்றொரு தண்டவாளத்திற்கு மாற்றப்படவேண்டு மென்று நாங்கள் சொல்லுகிறோம். அது செய்யவே நாங்கள் முயன்றோம். சம்பந்தப்பட்ட கட்சியார்களையெல்லாம் திருப்தி செய்ய நாங்கள் முயன்றோம். மிகக் கஷ்டமான ஒரு வேலை செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. எதிர்கால வழி பகிஷ்கார மாகத் தெரிகிறது. இதுவரையில் நாம் செய்திருப்பது சண்டையை முடிவு வரையில் நடத்துவதற்கு உதவியாயிருக்கு மென்று நம்புகிறேன்."

இந்தப் பேச்சு திலகரின் இராஜ தந்திரத் திறமையையும் வாதிப்புத் திறமையையும் காட்டுகிறது. அவருடைய இந்தப் புத்திசாலித்தனமான நோக்கமானது காங்கிரஸிலும் அவர் கட்சியிலும் அவருக்கு எதிரிகளாயிருந்தவர்களை மௌனமாக்கிவிட்டது.

22.7.1934

❖ ❖ ❖

# 16. பாரத மக்களைப் பழித்து நூலெழுதின பண்டிதமணி

### மகாராஷ்டிர மடங்கல்
### திலக மகரிஷி தொடர்ந்த அவதூறு வழக்கு
### பிரிட்டிஷ் நீதி ஸ்தலத்தில் வாதிக்குப்
### பாதகமாகக் கூறப்பட்ட தீர்ப்பு

**இங்கிலாந்தில் சிரோலுக்கு விரோதமான கேஸ்**

ஸர் வாலன்டைன் சிரோல் பேரில் திலகர் செய்திருந்த வியாச்சியத்தை நடாத்துவதற்காகத் திலகர் இங்கிலாந்துக்குப் போவதற்கு அனுமதி கொடுக்கக் கவர்ன்மெண்டார் கடைசியாக விருப்பமுடையவராயிருந்தனர். ஆனால், இங்கிலாந்தில் ஒரு பொதுக்கூட்டத்திலும் அவர் பேசக்கூடா தென்ற நிபந்தனையின் பேரில் அனுமதிச் சீட்டு கொடுக்கப் பட்டது. இந்த நிபந்தனையை ஒப்புக்கொண்டு, திலகர் இங்கிலாந்துக்குப் போனார். இந்தியருக்கு விரோதியான சிடன்ஹாம் பிரபுவின் சிநேகிதரும், பிராமணரல்லாதாரின் தலைவருமான டாக்டர் நாயரும் இங்கிலாந்தில் பொதுக் கூட்டத்தில் பேசக்கூடாதென்று உத்தரவிடப்பட்டார். ஆனால், டாக்டர் நாயருக்குப் பிறப்பித்த அந்த உத்தரவு பின்னர் ரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் திலகருக்குப் பிறப்பித்த அந்த உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது.

திலகர் தமது முழுக் கவனத்தையும் முதலில் சிரோல் பேரில் அவர் செய்திருந்த வியாச்சியத்திலே செலுத்தினார். திலகருக்கு விரோதமான அபிப்பிராயங்களுக்கு இடையே அவ்வியாச்சியத்தை நடத்த வேண்டியதாயிருந்தது. ரௌலற்று அறிக்கையின் பிரசுரிப்பும், திலகர் பேரில் கவர்ன்மெண்டார்

நடத்திய பல நடவடிக்கைகளும், அவருக்கு விரோதமாகப் பிரிட்டிஷ் ஜனங்களுடைய செவிகளைக் கெடுத்திருந்தன. சர் வாலன்டைன், சக்ரவர்த்தியவர்களின் கவர்ன்மெண்டின் தயவைப் பெற்றிருந்தார். மேற்படி வியாச்சியத்தின் தீர்ப்பு திலகருக்கு விரோதமாகத்தான் இருக்குமென்பது அநேகமாக நிச்சயமாயிருந்தது. பிரிட்டிஷ் கோர்ட்டார் வியாச்சியத்தைப் பக்ஷபாதமில்லாமல் விசாரித்துத் தமக்கு நியாயம் செய்வாரென்று திலகர்எதிர்பார்த்திருந்தார். பிரிட்டிஷ் நியாயத்தில் அவருக்குப் பெரிய நம்பிக்கையிருந்தது.

“இந்தியாவின் அமைதியின்மை” என்னும் சிரோலுடைய புத்தகம் பிரிட்டிஷ் இராஜ்யம் முழுவதும் வாசிக்கப்பட்டிருந்தபடியால் மிகமிகப் பெரிய பிரிட்டிஷ் கோர்ட்டின் தீர்ப்பானது அப்புத்தகத்தை வாசித்தவர்களின் அபிப்பிராயத்தை மாற்றுமென்று நினைத்துத்தான் திலகர் சர் வாலன்டைன் சிரோல் பேரில் நடவடிக்கை நடத்துவதற்கு இங்கிலாந்துக்குச் சென்றார். நீண்ட பிரதம விசாரணைக்குப் பின், வியாச்சியம் 1919-ம் வருஷம் ஜனவரி மாதம் 29-ந் தேதி ஸ்ரீ ஜஸ்டிஸ் டார்லிங் முன் விசாரணைக்கு வந்தது. ஸர் ஜாண் சைமன் கே. ஸி. என்பவரும் ஸ்ரீ இ. ரப். ஸ்பெண்ஸ் என்பவரும் திலகரின் வக்கீல்களாக ஆஜரானார்கள். சர் எட்வர்டு கார்ஸலும் வேறு இருவரும் வாலன்டைன் சிரோலுக்கும், ‘இந்தியாவின் அமைதியின்மை’யைப் பிரசுரித்த மெஸர்ஸ் மாக்மில்லன் அண்டு கம்பெனிக்கும் வக்கீல்களாக ஆஜரானார்கள்.

சர் வாலன்டைன் சிரோல் அந்தப் புத்தகத்தில் சி. ஐ. டி. போலிஸாரால் கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்ட அந்தரங்க அறிக்கைகளிலிருந்து பல விஷயங்களை எடுத்து எழுதியிருந்தார். திலகர் பேரில் அவர் பல கடுமையான குற்றச்சாட்டுகளை எழுதியிருந்தார். அவற்றில் சில வருமாறு:-

“முகமதியர்களுக்குக் கோபத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன் திலகர் பசுப் பாதுகாப்புச் சங்கங்கள் சிலவற்றை உண்டுபண்ணினார். பலத்தை உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜனங்களுடைய வீரத்தன்மைகளை வளர்ப்பதற்காகச் சிலம்பச் சங்கங்களை ஸ்தாபித்தார். தாய்மகராஜ் வியாச்சியத்தில் ஹைகோர்ட்டார்

தீர்ப்பு "திலகர் சாதாரண யோக்கியதை கூட இல்லாதவ ரென்றும், கண்ணியமான மனிதரல்லவென்றும் கூறுகின்றது". மிகமிகக் கடுமையான குற்றம் பின்வருவது:- "வெள்ளைக் காரருக்கு விரோதமான உணர்ச்சியை ஜனங்களிடை உண்டு பண்ணுவதற்கு அந்தரங்கக் கிளர்ச்சியாலும், பத்திரிகை பிரசுரங் களாலும் என்னவெல்லாம் செய்யக்கூடுமோ அவற்றை யெல்லாம் திலகர் செய்தார். அவற்றினால் விளக்கமுடியாத பலன்கள் விளைந்தன. 1897-ம் வருஷம் ஜூன் மாதம் 27-ந் தேதி மிஸ்டர் ராண்டு துரையும் லெப்டனண்டு அயிரஸ்டும் ஓர் யௌவன சித்பவன் பிராமணனால் சுட்டுக்கொல்லப் பட்டனர். அந்தக் குற்றத்திற்கும் திலகருக்கும் நேரான சம்பந்த மொன்றும் ருஜூப்படுத்தப்படவில்லை."

"ஏன் அக்கொலையைச் செய்தனை?" என்று எதிரி கான்ஹியர் என்பவன் மாஜிஸ்டிரேட்டால் கேட்கப்பட்ட பொழுது அவன், "அவ்வுத்தியோகஸ்தர்களின் பல அடக்கு முறைச் செயல்களைக் கேசரியிலும், இராஷ்டரமாதுப் பத்திரிகையிலும் கால் பத்திரிகையிலும், மற்றைய பத்திரிகை யிலும் படித்தேன். இந்த இரண்டு துரைமார்களையும் கொல்வதால் ஜனங்களுக்கு நியாயம் கிடைக்குமென்று நினைத்தேன். எனக்கு யாதொரு அநியாயமும் செய்யப்பட வில்லை. எனக்குத் தெரிந்தவரை வேறொருவருக்கும் அநியாயம் செய்யப்படவில்லை. மிஸ்டர் ஜாக்ஸன் (ஒரு சப் கலெக்டர்) என்பவரைக் கொலை செய்ததற்காக நான் இப்போது விசனப் படுகிறேன். நான் ஒரு நல்ல மனிதனை அஜாக்கிரதையால் கொலை செய்து விட்டேன்."

பயங்கரமான துக்க சம்பவங்களிலும் அதிகமாக வேறெந்தப் பேச்சாவது நம்பிக்கையை உண்டுபண்ண முடியுமா? கான்ஹியரால் சொல்லப்பட்ட மூன்றும் திலக ருடைய பத்திரிகைகள். கான்ஹியருடைய சொந்த அனுபவ மாவது அறிவாவது அவனுடைய உன்மத்தச் செயலைத் தூண்டவில்லை. ஆனால், திலகரின் பத்திரிகைகள் நாள டைவில் அவனுடைய செவியில் கொட்டிய விஷமானது அச்செயலைச் செய்யும்படியாகத் தூண்டிற்று. 'ஒரு நல்ல மனிதரை அஜாக்கிரதையாக'க்கொன்றது கான்ஹியருடைய

கையேயானபடியால் அக்கொலைக்கு ஜவாப்தாரி அவனே யல்லாமல் திலகரல்லர். ஏழுமணி நேரம் பிடித்த சர் ஜாண் சைமனுடைய பேச்சு முடிந்ததும், பிரதிவாதிகளின் வக்கீலாகிய சர் எட்வர்டு கார்ஸன் திலகரைக் குறுக்கு விசாரணை செய்தார். அவருடைய வினாக்களிற் சில வியாச்சியத்திற்கே சம்பந்தம் இல்லாதனவாயிருந்ததுமல்லாமல், விரும்பத்தகாதனவர்யும் இருந்தன. திலகரின் விடைகள் வினாக்களுக்கு நேரான விடைகளாய் இருந்ததுடன், கூர்மையானவையாவும் கௌரவம் வாய்ந்தனவாயும் இருந்தன. அன்றியும் அவ்விடைகள் வினாவின உடனே அளிக்கப்பட்டன. இந்தியாவின் அமைதியின்மையின் ஆசிரியரும் கட்டுமான கொள்கைகளை ருஜுப்படுத்துவதற்காக கேசரியிலிருந்து பல வாக்கியங்களை எடுத்து கார்ஸன் வாதித்தார். அவருடைய வாதம் புஸ்தகத்தில் கூறப்பட்ட விஷயங்களுக்குச் சற்றேறக்குறைய ஒரே வியாக்கியான மாயிருந்தது.

திலகர் எப்பொழுதாவது இராஜ நிந்தனைகளைப் பிரசுரித்தாரா? அல்லது அவர் எழுதிய விஷயங்கள் கொலைகள் நடக்கும்படி செய்தனவா? என்ற வினாக்கள் வியாச்சியத்திற்கு எவ்வித சம்பந்தமுமில்லாதவையென்பதை சர் ஜாண் சைமன் எடுத்துக்காட்டினார். அவர் விவாத விஷயம் சர் வாலன்டைன் சிரோலின் புஸ்தகத்தில் திலகரைப் பற்றிய அவதூறு அடங்கியிருக்கிறதா? என்பதுதான். மிஸ்டர் ஜான்சன் கொலைக்கு ஒரு மாதத்திற்குப் பின் திலகர் பெயரில் நடத்திய இராஜ நிந்தனை கேஸை அட்வகேட் ஜெனரல் திலகருடைய எழுத்துக்களுக்கும் கொலைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யென்று தெளிவாகக் கூறியிருக்கிறார். மிஸ்டர் ஜாக்ஸன் கொலை சம்பந்தப்பட்ட மட்டில் அவரைப் பற்றி திலகர் ஆக்ஷேபிக்கத்தக்க உரை எழுதியதாக ஆஜர்ப்படுத்தப் படவில்லை. கொலைக்குப்பின், கொலை செய்த பையன் குற்றத்தை ஒப்புக்கொண்டார். சொல்லிய விஷயம் மிகமிக அபாயமானது. அது சரியான சாட்சியமாக எடுத்துக்கொள்ளத் தக்கதன்றென்று கூறினார். மிஸ்டர் ஜஸ்டிஸ் டார்லிங்கின் தீர்ப்பு பக்ஷபாதமற்றதென்று சொல்லும்படியதாயில்லை. அது சர் எட்வர்டு கார்ஸன் சொல்லிய அபிப்பிராயங்களையே

கொண்டிருந்தது. ஜூரிகளும் அவற்றையே கூறினார்கள். அவ்வாறாக சர் வாலன்டைன் செய்த அயோக்கியமான கொடிய அவதூறுகள் பிரிட்டிஷ் இராஜ்யத்தில் உள்ள மிக மிகப் பெரிய நீதிமன்றத்தால் குற்றமில்லையென்று சொல்லப்பட்டன.

5.8.1934

❖ ❖ ❖

## 17. பிரிட்டனில் இந்தியாவின் சுயாட்சிப் பிரசாரம்

### பொதுக்கூட்டங்களில் மகாராஷ்டிர மடங்கலின் உணர்ச்சி மிகுந்த உரைகள்

**திலக மகரிஷி லண்டனில் தாய் நாட்டிற்குப் புரிந்த சேவைகள்**

*பிரிட்டிஷ் ஜனங்கள் இந்திய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குத் திலகர் செய்த வேலைகளில் பாதிகூட வேறு இந்தியத் தலைவர் ஒருவரும் செய்ததில்லை. அவர் அநேக துண்டுப் பிரசுரங்களும் சிறு புஸ்தகங்களும் அச்சிட்டு, பிரிட்டிஷ் ஜனங்களுக்கு வழங்கினார். இது தவிர அவர் பல சமயங்களில் பிரசங்கங்களும் செய்தார். ஒரு பிரசங்கியாக திலகர் வெற்றி பெறவில்லையென்ற அபிப்பிராயமுடையவர்கள் அநேகர் இருந்தாலும், இங்கிலாந்தில் பொதுஜனங்களுடைய மனங்களில் அவர் பேசிய விஷயங்கள் ஆழ்ந்து பதிந்தன வென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.*

*அவருடைய பேச்சுக்கள், பிரசங்கிகளின் கபடற்ற பொது ஜனங்களை மயக்குகின்ற வாக்கலங்கார சிங்காரங்களைக் கொண்டிராவிட்டாலும் நீதியும் தர்க்கவாதமும் பொருந்தியன வாயிருந்தபடியால் ஜனங்கள் மனங்களுள் ஆழ்ந்து சென்றன. உண்மையில் அவருடைய ஜீவியமும் சரீரத் தோற்றமும் ஜனங்களையெல்லாம் வசப்படுத்துவனவாயிருக்கும்போது, வேறு வாக்கலங்காரங்களை அவர் உபயோகிக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் நுட்பமான ஒரு தர்க்கவாதி, முற்றுறக் கற்ற ஒரு பண்டிதர், மனிதரையும் உலக காரியங்களையும் அறியும் ஒரு நிபுணர்; பிரிட்டிஷ் ஜனங்களுடைய ஹிருதயங் களை எப்படி வசப்படுத்துவதென்பதையும் அவர்களுடைய விருப்பங்களுக்கும், சுபாவங்களுக்கும் பொருத்தமாகத் தம்முடைய பேச்சின் நடையையும், தர்க்கத்தையும் எப்படி*

வைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் அவர் நன்றாக அறிந்தவர். அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவர் பல வினாக்களுக்கு விடைகள் அளிக்கும்படியாகக் கேட்கப் பட்டார். அவருடைய விடைகள் வினாவியவுடனே அளிக்கப் பட்டன; உடனே ஏற்றுக்கொள்ளத் தக்கவையாயிருந்தன.

ஒருகால், அவர் இந்தியா சிறிதுசிறிதாகச் சுய அரசாட்சி ஏன் அடையக்கூடாதென்று வினாவப்பட்டார். அவர் "மின்சார ஏற்றத்தின் மூலமாக ஏறும் இக்காலத்தில் சிறிதுசிறிதாக ஏறுவது எப்படி?" என்று விடையளித்தார். அவருக்குப் போடப் பட்ட மிகமிகக் கஷ்டமான வினாக்களில் ஒன்று, "இந்தியா விலிருந்து வந்திருக்கிற தூதுகோஷ்டிகளில் எது இந்தியாவின் பிரதிநிதித்துவத்தை உடையது?" இந்த வினாவிற்கு அவர் பின்வருகிறபடி விடையளித்தார்.

"சில காலத்திற்கு முன்னர் மிஸ்டர் ஆஸ்குவித் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்தார். இப்போது மிஸ்டர் லாய்டு ஜார்ஜ் பிரதம மந்திரியாயிருக்கிறார். மிஸ்டர் லாய்டு ஜார்ஜுக்கு மிஸ்டர் ஆஸ்குவித் ஒரு சிறிதும் தாழ்ந்தவரல்லர்; ஆனால், இங்கிலீஷ் ஜாதியார் அவரைப் பின்பற்றுவதை நிறுத்திவிட்டனர். அதே மாதிரியாக, மிதவாதிகளின் தூதுக் கோஷ்டிக்குத் தலைமை வகிக்கிற ஸ்ரீ சுரேந்தரநாத பானர்ஜி ஜனங்களால் இப்பொழுது பின்பற்றப்படவில்லை. இந்தியா தேசத்து ஜனங்கள் மிதவாதிகளைப் பின்பற்றுவதை நிறுத்தி விட்டார்கள்; அவர்கள் காங்கிரஸ் வழியிலும் சுய அரசாட்சிச் சங்கவழியிலும் செல்கின்றார்கள்."

இந்த மாதிரியான விடை பிரிட்டிஷ் ஜனங்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயிருந்தது. இங்கிலாந்து தேசத்தில் தமது தேச சம்பந்தமாகத் திலகர் செய்த வேலைகள், முக்கியமாகப் பிரிட்டிஷ் ஜனங்களுள் பிரசாரமும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியைப் புதுப்பித்தலும், இங்கிலாந்து தேசத்தில் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் பத்திரிகையாகிய "இந்தியா" வின் காரியங்களைக் கவனித்தலும், பார்லிமெண்டு சபையில் கூட்டுக் கமிட்டி முன் சாட்சியம் சொல்லுவதுமே. அவர் தொழிற்கக்ஷியாரிடம் அதிகச் செல்வாக்கை உபயோகிக்கக் கூடியவராயிருந்தார். இந்தியா கவர்ன்மெண்டுச்

சட்ட மசோதாவுக்குத் தொழிற்கக்ஷித் தலைவர்கள் திருத்த பிரேரேபணைகள் கொண்டுவராமலிருக்கும்படியான ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் முயற்சிகள் செய்தபோதிலும் திலகர் முக்கியமான திருத்த பிரேரேபணைகளைக் கொண்டு வருவதற்கு அவர்கள் சம்மதிக்கும்படி செய்துவிட்டார். மிகுதியான கஷ்டத்துடனேயே திலகர் பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியைப் புதுப்பித்தார். மிதவாதிகள் காங்கிரஸிலிருந்து பிரிந்துவிட்டாலுங்கூட பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி மிதவாதிகளைக்கொண்டும் 'இந்தியா'ப் பத்திரிகை மிதவாதக் கொள்கைகளைக் கொண்டும் இருந்தன.

"இந்தியா"ப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த ஸ்ரீ போலக் என்பவர் டெல்லிக் காங்கிரஸின் தீர்மானங்களை ஆதரிக்க வில்லை. விசேஷக் காங்கிரஸின் தீர்மானங்களைக்கூட அவர் பத்திரிகையில் பிரசுரிக்கவில்லை. காரியங்களின் இந்தவிதமான நிலைமையைக் கண்டு திலகர் வெறுப்படைந்து காரியங்களைச் சீர்ப்படுத்த விரும்பினார். ஆனால், காங்கிரஸிலிருந்து அவருக்குக் கட்டளை கொடுக்கப்படாததால் அவர் அதனைச் செய்துமுடித்தற்கு அதிகக் கஷ்டப்பட வேண்டியதாயிருந்தது. கமிட்டியின் அங்கத்தினர்களிற் சிலர் தாம் மேலான அறிவாளிகளென்றும் பெரிய மனிதரென்றும் அகம்பாவம் கொண்டிருந்தனர். நல்ல காலமாக, டெல்லிக் காங்கிரஸானது அந்த விஷயத்தை எடுத்தாலோசித்து, காங்கிரஸ் கமிட்டியைப் புதுப்பிக்கும் வேலையைக் காங்கிரஸ் தூதுக் கோஷ்டிக்குக் கொடுத்துக் கமிட்டிகளின் காரியங்களெல்லாம் சீராகும் வரையில் கமிட்டிக்குப் பணம் முதலியவை அனுப்புவதை நிறுத்திவிட்டது. சில காலம் காங்கிரஸ் கட்டளைக்குக்கூடக் கமிட்டியும் ஸ்ரீ போலக்கும் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. என்றாலும் "இந்தியா"வின் டயரக்டர்களில் டாக்டர் கிளார்க், டாக்டர் ரூதர்போர்டு, ஸ்ரீ பாரிக் என்னும் மூவரும் காங்கிரஸின் கொள்கையை மனச்சாட்சிக்கேற்ப ஆதரிக்க முடியுமா? முடியாதா? என்று ஸ்ரீ போலக்கைக் கேட்டனர். ஸ்ரீ போலக்கின் மறுமொழி இராஜினாமாதான்.

மிஸ் நார்மான்டன் போலக்குக்குப் பின் ஆசிரியரானார். டாக்டர் கிளார்க்கின் முயற்சிகளாலும், அவரைப் பின்பற்று

கிறவர்கள் முயற்சிகளாலும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு புதிய விதி (1919-ம் வருஷம் ஆகஸ்டு மாதம்) ஏற்படுத்தப் பட்டது. அதன்படி காங்கிரஸ் கொள்கையை ஒப்புக்கொள்கிற வர்கள் மாத்திரம்தான் பிரிட்டிஷ் கமிட்டியின் அங்கத்தினர்கள் ஆகக் கூடும். இந்த மாறுதலின் பயனாகக் கமிட்டியின் பழைய அங்கத்தினர்களிற் பலர் இராஜினாமாச் செய்துவிட்டனர். அப்போது இங்கிலாந்தில் இருந்த சகல இந்தியத் தூது கோஷ்டி களுள்ளும் ஓர் ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்குத் தம்மாலான மட்டும் திலகர் முயற்சித்தார். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரைச் சரிப்படுத்துவதற்காக அவர் எடுத்த பிரயாசை களெல்லாம் வீணாயின. அம்மையாருடைய சொந்தக் காரணங் களால் அவர் தமது முந்திய சகாக்களின் குழுவை விட்டு மிதவாதிகளுடைய குழுவிற் போய்ச் சேர்ந்துகொண்டார்.

மிதவாதிகள், வழக்கம் போல், வெல்லப்படக்கூடாதவர் களாயிருந்தார்கள். ஸ்ரீ மாண்டேகுவை ஆதரித்து நின்று அவர் கொடுக்கும் எதனையும் பெற்றுக்கொள்வதாக அவர்கள் உறுதிமொழி கூறியிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் இந்தியா மந்திரியை ஆதரித்து நின்று அவர் கொடுக்கும் சுயராஜ்ய பாகத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் லார்டு சிடன் ஹாமைச் சேர்ந்தவர்கள், பிராமணருக்கு விரோதமான தூதுகோஷ்டியாரால் ஆதரிக்கப்பட்டு, ஸ்ரீ மாண்டேகு செய்யக் கூடிய சிறு நன்மையைக்கூடக் கெடுத்துவிடுவார்கள் என்று உண்மையான அபிப்பிராயமுடையவர்களாயிருந்தார்கள். அதனால்தான், ஹானரபிள் சுரேந்தரநாத பானர்ஜீ அதிகமாகக் கேட்பதனால் இந்தியாவின் நன்மைக்கு ஆபத்து விளையக் கூடுமானால், தாமும் தமது கக்ஷியாரும் கொடுக்கப்படும் எதனையும் பெற்றுக்கொண்டு அதனோடு திருப்தியடைந்திருப் பதாக பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டி முன் வாதித்தார்.

திலகருடைய நிலைமை மிக வேறுபட்டதாயிருந்தது. ஸ்ரீ மாண்டேகு இந்தியா கேட்பதனைத்தையும் கொடுக்க விருப்பமுடையவராயிருந்தால், மசோதாப்படிக் கொடுப்பதாகச் சொல்லப்படுவனவற்றிற்கு அதிகமானவற்றை ஏன் கேட்கக் கூடாதென்பதே அவர் வாதம். 'நீங்கள் கொடுப்பது போதும்' என்று சொல்வது சரியான யோசனையன்று. திலகர் இந்த

விஷயங்களைத் திரும்பித்திரும்பி எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்; ஆனால், மிதவாதிகளைத் திருப்பமுடியவில்லை. பஞ்சாபின் காரியங்களின் சம்பந்தமாக ஒரு பொதுமேடையில் பல கக்ஷியார்களும் நின்று பேசும்படி கொண்டுவருவதற்காக அவர் ரொம்பப் பிரயாசைப்பட்டார். இந்த விஷயத்திலும் கூட மிதவாதிகள் காங்கிரசுடன் ஒத்துழைக்க விருப்பமில்லாதவர்களாயிருந்தார்கள்.

1919-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 6-ந் தேதி திலகர் கூட்டுக் கமிட்டி முன் சாக்ஷியம் சொன்னார். கமிட்டியார் தயாரித்துக் கொடுத்த வினாக்களுக்கு அவர் அளித்துள்ள விடைகளுக்கு அதிகமாக அவர் சொல்ல விரும்பியவற்றை யெல்லாம் சொல்லும்படியாக அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் பேச்சுச் சுருங்கியதாகவும் எல்லாவற்றையும் அடக்கியதாகவும், உறுதியுடையதாகவும் வெல்லுவதாகவும் தெளிவானதாகவும் அங்கீகரிக்கத்தக்கதாகவும் இருந்தது. கூட்டுக் கமிட்டி அங்கத்தினர்கள் அதிகப் புத்திசாலிகளாயிருந்தார்கள். அதனால் அவர்கள் திலகரைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை; இன்றியமையாத நேரத்திற்கு அதிகமாக ஒரு நிமிஷம் கூட அவர் தம் முன்பு இருக்கும்படியாக வேண்டவில்லை. ஸ்ரீ எஸ். கஸ்தூரிரெங்கையங்கார் ஒருதடவை கூறியபடி அவருடைய ஆழ்ந்த தர்க்கத்தை எதிர்ப்பதற்குக் கமிட்டியார் பயந்திருந்தனர்.

பின்வருவது திலகர் இங்கிலாந்தில் செய்த வேலைகளைப்பற்றி அவருடைய கௌரவமான நண்பர் ஒருவருடைய மதிப்பாகும். "தூதுக் கோஷ்டிகள் இங்கிலாந்து வந்து சேர்வதற்கு முன் காங்கிரஸின் அரசியல் சீர்திருத்தக் குறிப்பை லண்டன் நகர ஜனங்கள் சரியாகத் தெரிந்து மதிக்கும்படி செய்வதற்காகத் திலகர் பெரிய, பெரிய கூட்டங்களுக்கு விரோதமாகச் சண்டையிட வேண்டியதாயிருந்தது. ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும், அவர் உண்மையான விஷயங்களை அப்படியே எடுத்துக்கூறியும், தெளிவாக வாதம் செய்தும், கேட்டோர் மனத்தில் விஷயங்கள் பதியும்படி செய்தார். தாவாப்பட்ட விஷயங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதில் திலகர் எவ்வளவு திறமைசாலியென்பதை நீங்களெல்லோரும்

அறிவீர்கள்; தாவாப்பட்ட விஷயங்களை விளக்குவதில் அவர் திறமைகளைக் காட்டுவதற்கும், அவருடைய எதிரிகள் தோற்று வீழ்ந்ததற்குப் பின் தமது சொந்தப் பிரசங்கமேடையில் நின்று தமது வெற்றியை அறிவிப்பதற்கும் இங்கிலாந்தில் கிடைத்த சந்தர்ப்பம் போன்ற சந்தர்ப்பம் அவருக்கு அதன் முன் ஒருபோதும் கிடைத்ததில்லை.

இங்கிலாந்தில் வலிய வாக்குச் சண்டைக்குச் செல்லும் சின்பீனர் முதல் நல்ல புரட்சிக்காரர் வரையிலுள்ள பற்பல வகையான எதிரிகள் அவருக்கு அமைந்தார்கள்; அவர்கள் நினைத்தால் கெட்டவிஷயங்கள் நல்ல விஷயங்களாகத் தோன்றும்படியாக செய்யக்கூடிய திறமை வாய்ந்த பிரசங்கி களையும், சட்ட வரம்பிற்கு உட்பட்டுக் கிளர்ச்சி செய்யும் இந்தியப் பிரசங்கிகளையும் தமது மேலான இகழ்ச்சியால் முதுகுகாட்டி ஓடும்படி செய்யக்கூடியவர்கள். ஸ்ரீ திலகரின் உபந்நியாஸங்களைக் கேட்ட ஒவ்வொரு பொதுக்கூட்டத்தின ருடையவும் தீர்ப்பு என்னவென்றால் அவருடைய நுட்பமும் திறமையும் வாய்ந்த வாதங்களால் புரட்சிக்காரர் எதிர் நிற்க முடியாமல் ஓடும்படிக்கும், பிரசார வேலையே தொழிலாக உடைய பிரசங்கிகள் துண்டுதுண்டாய் தம் வசப்படும்படிக்கும் அவர் செய்துவிட்டாரென்பதே"

*14.10.1934*

✤ ✤ ✤

# 18. வ.உ. சிதம்பரனாரின் திலக மகரிஷி ஒரு பார்வை

*தமிழைப் பொறுத்தவரையில் 'வாழ்க்கை வரலாறு' - தலைவர், அறிஞர் வரலாறு - என்பது முறையாகத் தொகுக்கப் பெறாத நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது. அரிய சாதனைகள் பல நிகழ்த்தி வரலாற்றில் இடம்பெற்ற பலரின் வாழ்க்கைக் குறிப்புகள்கூட முழுமையாகக் கிடைப்பது இல்லை என்பதே இன்றைய நிலை.*

*தம்முடைய தன்னலமற்ற சேவைகளால் வரலாற்றில் தடம் பதித்தவரான வ.உ.சிதம்பரனார், வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர். தம்முடைய அரசியல் குருவாக மதித்துப் போற்றிய திலகரின் வாழ்க்கை வரலாற்றை அவர் எழுதியுள்ளார்.*

> "லோகமானிய பாலகங்காதர திலகர் என் அரசியல் குரு ஆவார். எனது 21 ஆவது வயதிலிருந்து, அதாவது 1893 இலிருந்து, அரசியலைப் பற்றிய அவருடைய பேச்சுக் களையும் எழுத்துக்களையும் நான் கவனித்து வந்தேன். இந்தியா எனது நாடு, அநியாயமான வகையில் பிரிட்டிஷார் தம் வசம் நம் நாட்டை வைத்துள்ளனர். நம் நாட்டை அவர்களிடமிருந்து திரும்பப் பெறவேண்டும் என்று அவை எனக்கு உணர்த்தின." [1]

*1893இல் திலகரிடம் ஏற்பட்ட ஈடுபாடு, அவருடைய மறைவுக்குப் பிறகும் வ.உ.சி.யின் இறுதிக்காலம் வரையிலும் மாறாத ஒன்றாகவே இருந்தது. திலகரின் மறைவுக்குப் பின் அவருடைய நண்பர்களால் தொகுக்கப்பெற்ற 'திலகர் நினைவுகள்'* (Reminiscences of Lokamanya Tilak) *என்னும் தொகுப்பின் மூன்றாம் தொகுதியில் திலகரோடு பழகிய அனுபவங்களை மனம் திறந்து பகிர்ந்து கொண்டுள்ளார் வ.உ.சி.*

திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதும் வாய்ப்பு 1933இல் வ.உ.சி.க்கு அமைந்தது. இன்றும் இலங்கையில் இருந்து வெளிவரும் **வீரகேசரி** என்னும் நாளிதழில் திலகரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். ஞாயிறுதோறும் வெளிவந்த அந்தத் தொடர் 28.5.1933இல் தொடங்கியது.[2] வ.உ.சி. ஆய்வாளர்களால் பெயரளவில் மட்டுமே இதுவரையில் அறியப் பெற்ற அக்கட்டுரைத் தொடர் இந்நூலாசிரியரால் கண்டறியப்பெற்று முதன்முறையாக அறிமுகம் செய்யப் பெறுகிறது. வ.உ.சி. ஆய்வு வரலாற்றில் இது ஒரு புதிய வரவாகும்.

**பாரத ஜோதி ஸ்ரீதிலக மகரிஷியின் வரலாறு** என்னும் தலைப்பில் அமைந்த அவ்வாழ்க்கை வரலாறு முழுமையாகக் கிடைக்கவில்லை. **பதினேழு வாரங்களில் வெளிவந்த பகுதிகளே** - அதுவும் தொடர்ச்சி இல்லாமல் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் வ.உ.சி.யின் 'திலக மகரிஷியின் வரலாறு' இங்குப் பதிவு செய்யப்பெறுகிறது.

> "அத்தேசாபிமானியின் துன்பகரமான வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்டுள்ள விஷயங்களை ஜாக்கிரதையோடு படித்த ஒருவரால் எழுதப்பெற்ற அவரது சுருக்கமான ஜீவிய சரித்திரத்தை அவர் பெயரைப் போற்றும் கோடிக்கணக்கான மனிதர்கள் விரும்புகின்றார்கள். அத்தகைய சரித்திரத்தையே யான் எழுத எத்தனிக்கின்றேன்"[3]

என்று திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குகிறார் வ.உ.சி. தனிமனிதனின் ஆளுமை உருவாக்கம் என்பது அவனுடைய சிறுவயதிலிருந்தே தொடங்கிவிடுகிறது. அந்தத் தனிமனிதன் அதை உணர்ந்தோ, உணராமலோ அந்தச் சிறுவயதிலேயே அதில் கலந்துவிடுகிறான் என்பது மனிதவாழ்க்கை உணர்த்தும் உண்மையாகும். திலகரும் இந்தப் பொது நியதிக்கு உட்பட்டவராகவே விளங்கினார் என்று வ.உ.சி. குறிப்பிடுகின்றார்.

> "திலகர் தமது தகப்பனாரிடமிருந்து அவருடைய உறுதியான யோக்கிய உணர்ச்சியையும் சுதந்தர உணர்ச்சியையும், தமது தாயாரிடமிருந்து அவருடைய தெய்வபக்தியையும் ஜீவ காருண்ணியத்தையும் இயற்கை யாக அடைந்தனர்." [4]

'மேலான அறிவுத்திறனும்' 'வளையாத தர்க்க வன்மையும்' 'தெளிந்த சட்ட ஞானமும்' நிறைந்தவரான திலகர், நாட்டுக்குழைத்தல் என்னும் பொதுவாழ்வில் நுழைதற்கு எது முதன்மையான காரணமாக அமைந்தது என்பதைப் பின்வருமாறு வ.உ.சி. கூறுகிறார்.

> "அன்னிய தேசத்தாரின் ஆளுகைக்குட்பட்ட இந்தியாவில், அவர் காலத்தில் நடந்த சில சம்பவங்கள் அவருடைய தேசத்தின் ஆதரவற்ற தன்மையைப் பற்றி அவருடைய மனத்தில் மங்காத ஓர் எண்ணத்தை உண்டு பண்ணின. அன்னியர் ஆள்கையால் ஏற்பட்ட தமது தேசத்தவரின் நபுஞ்சகத் தன்மையைத் திலகர் வருத்தத்தோடும் வெறுப்போடும் உணர்ந்தார்."[5]

'நபுஞ்சகத்தன்மை' என்னும் வ.உ.சி.யின் சொல்லாட்சி கருதத் தக்கது. அன்னியர் ஆட்சியில் ஆண்மை யற்று - வீரம் இழந்து - கோழைகளாய் இருந்த இந்தியர்களின் நிலை திலகருக்கு வருத்தத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி யமையைச் சுட்டும் வ.உ.சி., அன்னியர் ஆட்சிக்கு எதிரான திலகரின் செயற்பாடுகளின் படிநிலைகளை மிகுந்த வரலாற்றுணர்வோடு முறைப்படுத்தியுள்ளார்.

ஆங்கில ஆட்சியானது ஏற்படுத்தியிருந்த கல்வித்திட்டமும் வேலை (உத்தியோக) அமைப்புமுறையும் நாட்டுப்பற்றை அடியோடு ஒழிக்கும் நோக்கில் உருவாக்கப்பெற்றவை என்பதைத் தெளிவாக உணர்ந்தவரான திலகர், தம் நாட்டின் சீரமைப்பைத் 'தேசியக் கல்வி' என்பதிலிருந்து தொடங்கினார் என்றும் தேசியத் தத்துவத்தையும் குடியாட்சித் தத்துவத்தையும் தமது நாட்டு மக்களின் உள்ளத்தில் புகுத்துவதற்கும் தம்முடைய கல்விப்பணி சார்ந்த முயற்சிகளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் விளக்குகின்றார் வ.உ.சி.

ஒருபுறம், தேசியக் கல்வியைக் கற்றுத் தருவதன் மூலம் நாட்டுணர்வை ஊட்டும் பணியில் ஈடுபட்ட திலகர், இன்னொருபுறம் ஆங்கிலப் பழக்கவழக்கங்களிலும் நாகரிக மோகத்திலும் மூழ்கிக் கிடந்த இந்தியர் சிலர் எழுப்பிய வாதங்களை - இந்திய சமுதாயத்தில் அவர்கள் கொண்டுவர

வேண்டும் என்று விரும்பிய மாற்றங்களை - இந்தியச் சூழலுக்குப் பொருந்தாத நடைமுறைகளை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையிலும் இருந்தார் என்று கூறுகிறார் வ.உ.சி.

ஆங்கில மோகங்கொண்டு ஆங்கிலேயரின் வாழ்க்கை முறையை விரும்பி, போலச் செய்யும் - ஆங்கிலேயராகவே தங்களை எண்ணிக்கொண்டு நடக்கும் இந்தியரின் போக்கு திலகருக்குப் பிடிக்கவில்லை என்பதைக் கூறுவதற்கு வ.உ.சி. பயன்படுத்தும் தொடர் அறியவேண்டியதாகும்.

> "இந்தச் சுயமயக்கப் பித்தலாட்டக்காரர்களின் இரவல் சுவிசேஷங்கள் திலகருக்குப் பிடிக்கவில்லை"[6]

இதில் 'இரவல் சுவிசேஷங்கள்' என்னும் சொல்லாட்சி அரியது - நுண்ணியது. மிகவும் பொருத்தமாக - பல பொருள் களை உணர்த்தும் விதத்தில் அதைப் பயன்படுத்தியுள்ள வ.உ.சி.யின் தமிழ் ஆளுமைத் திறன் சிறப்பாகக் குறிக்கத்தக்கது.

திலகர் 1893இல் அறிமுகம் செய்த கணபதி விழாவும், 1895இல் நடத்திய சிவாஜி விழாவும் இந்திய விடுதலை இயக்கத்தின் போக்கையே மாற்றிப் புதிய வரலாற்றைத் தொடங்கி வைத்த மகத்தான நிகழ்வுகள்.

திலகரின் அரசியல் வாழ்விலும் திருப்பத்தை உண்டாக்கிய அந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மக்கள் எழுச்சியையும் அதன் விளைவான ஆங்கில அரசின் கவலையையும் வ.உ.சி. மிகுந்த கவனத்துடன் அந்நிகழ்வுகளின் வீரியம் குன்றாமல் விவரித்துள்ளார். 'மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள்' என்று தலைப்பிட்டு வ.உ.சி. இதை எழுதி யுள்ளமை, சமகால வரலாற்று நிகழ்வுகளின் இன்றியமை யாமையை உணரவல்ல வ.உ.சி.யின் அரசியல் தெளிவையும், ஆற்றல் வாய்ந்த சொற்களின் மூலம் அதை வெளிப்படுத்தியமை அவருடைய மொழி ஆளுமையையும் புலப்படுத்தும்.

> "திலகர் முறையே 1893 ஆம் வருஷத்திலும், 1895 ஆம் வருஷத்திலும் ஏற்படுத்திய கணபதி உற்சவமும், சிவாஜி உற்சவமும் மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே தேசாபிமானத்தையும், தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கின.

திலகர் தமது உள்ளுணர்ச்சியை இந்து மதத்திலிருந்தே கொண்டார்; அதனால் அவர் ஆசாரச் சீர்த்திருத்தம் அல்லது இராஜீய விஷயங்கள் சம்பந்தமான தேசிய இயக்கம் இந்து மதக்கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பினார். இந்த நோக்கத்துடனேதான் அவர் கணபதி உற்சவத்தை ஆரம்பித்தார்.

சில வருஷங்களுக்குள் இந்த உற்சவம் ஒரு தேசிய ஸ்தாபனமாய்விட்டது. சிவாஜி உற்சவமும் அதே மாதிரியான நோக்கத்துடனே உண்டுபண்ணப்பட்டது. அதே மாதிரியாக ஜனங்களை ஒற்றுமைப்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருந்தது.

இந்த உற்சவங்களின் பயனாக மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே வளருகின்ற ஒற்றுமையும் சகோதரத் துவமும் அதிகார வர்க்கத்தினருக்கு ஒரு பெரிய மனக் கலக்கத்தை உண்டு பண்ணின; அதனால் அவர்கள் இந்த இயக்கத்தை மிக ஜாக்கிரதையாகக் கண்காணிக்கத் தொடங்கினர்." [7]

*திலகர் தொடங்கிய கணபதி விழாவும் சிவாஜி விழாவும் சிதறிக்கிடந்த மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் ஒன்றுசேர்க்கவும் அவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவும் பயன்பட்டன. விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான திலகரின் முயற்சியின் முதல் கட்டமாக - முதல் வெற்றியாக இது அமைந்தது.*

*1896-97இல் ஏற்பட்ட பஞ்சமும் அதுபற்றிய ஆங்கில அரசின் அலட்சியப் போக்கும் விடுதலை இயக்கம் மக்கள் இயக்கமாகும் அடுத்த கட்டம் உருவாவதைத் தவிர்க்க இயலாததாக்கியது. திலகர் இதை உரியமுறையில் பயன் படுத்தினார் என்பார் வ.உ.சி.*

"திலகர் ஓர் ஒழுங்கான வழியில் கிளர்ச்சியை நடத்தினார்; ஜனங்களுக்குள் ஆண்மையையும் தைரியத்தையும் புகுத்தி னார். ஜனங்கள் தங்கள் நிலங்களை விற்றுத் தீர்வை செலுத்தவேண்டுவது அவசியம் இல்லையென ஜனங்களுக்கு அவர் சொன்னார். அவர் முயற்சிகள் விசேஷ வெற்றிதந்தன.

ஜனங்கள் அவரால் நடத்தப்படுவதற்குச் சித்தமுடையவர் களாகி, அவர் சொல்லியபடி நடந்து வந்தார்கள். ஜனங்களுடைய இந்த விழிப்பிலிருந்து திலகர் இராஜீய சுதந்தரத்திற்கு அவசியமான இராஜீய நிருமாண வேலைக்கு உபயோகப்படத்தக்க ஏராளமான சக்திகள் தமது தேசத்து மக்களிடம் இருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டார்." [8]

*இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த கர்சன் என்றும் மறக்க இயலாதவர். இந்திய விடுதலை இயக்கத்தில் புதிய எழுச்சி தோன்றுவதற்கு அவரை அறியாமலே காரணமானவர். அவரைப்பற்றிய வ.உ.சி.யின் தகவல்கள் கர்சனைப்பற்றிய ஒரு மதிப்பீட்டை உருவாக்குவதோடு, வ.உ.சி.யின் ஆற்றலையும் வரலாற்று ஆசிரியராக அவருடைய நடுநிலைப்பண்பையும் புலப்படுத்துவனவாக அமைகின்றன. அவை அறியத்தக்கன:*

"லார்டு கர்சன் இந்திய இராஜப் பிரதிநிதிகளில் மிகமிகக் கீர்த்தி பெற்றவர்; அவர் ஒரு பெரிய பிரசங்கி; ஒரு நல்ல தர்க்கவாதி; சுறுசுறுப்பும் உறுதியான விருப்பமும் பிடி வாதமும் உள்ளவர். அவர் இராஜாதிகாரிகளி லெல்லாம் சிறந்த இராஜாதிகாரி. மிகச் சிரேஷ்டமான நிலைமைகளில் அவர் தமது ஆட்சியைத் தொடங்கினார்." [9]

*நாட்டுக்குப் பெருந்தீங்கு இழைத்தவர் என்றாலும் கர்சனிடம் இருந்த ஆற்றலும் திறமையும் மதிக்கத்தகுந்தவை என்று கருதி, அவற்றை மனம் திறந்து பாராட்டும் வ.உ.சி.யின் பெருந்தகைமை எண்ணத்தக்கது. கர்சனின் நல்லியல்புகளைச் சுட்டிய வ.உ.சி., அவருடைய குறைகளையும் உரியவாறு வரைந்துள்ளார்.*

"ஆனால் சில காலம் கழிந்த பின்னர் அவர் தமது மனப்போக்கை மாற்றி மிக அகம்பாவமுள்ள ஓர் எதேச்சாதி காரியாய்விட்டார். அவர் அவ்வாறானது அரசாங்க அரைத் தேவதைகளின் கட்டாயத்தினாலன்று; ஏனெனில், அவர் பிற மனிதர்களின் செல்வாக்குகளுக்கு உட்படாத சுயேச்சை யோடு நடக்கின்றவர். அவர் பொதுஜன அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், மத்திய கவர்ன்மெண்டில்

நிர்வாக அதிகாரிகளின் கைகளை வலுப்படுத்தி அனேக திருத்தங்களைச் செய்தார்.”[10]

*ஒருவரின் வரலாற்றை எழுதும்போது, அவருடைய குணநலன்களை உள்ளவாறு எடுத்துரைப்பதுதான் நெறி யானது என்னும் வ.உ.சி.யின் கொள்கை, வாழ்க்கை வரலாறு எழுத முற்படுவோர் பின்பற்றவேண்டிய பண்பாகும்.*

*நீதிக்குப் புறம்பான, எந்த நெறிகட்கும் உட்படாத, கொடுமை நிறைந்ததான கர்சன் ஆட்சியின் பிற்பகுதி நிகழ்வுகளைப்பற்றிப் பேசும்போது வ.உ.சி. இவ்வாறு எழுதுகிறார்:*

“லார்டு கர்சனுடைய நிர்வாகம், ஆட்சி தீய உடையோடு வந்த நன்மையாயிற்று. இந்திய தேசியக் கட்டிடத்தைக் கட்டியவர் அவரே; அவருக்குத் தெரிந்ததினும் மிக நன்றாக அவர் கட்டிவிட்டார்.”[11]

*வங்கப் பிரிவினையை ஒரு பின்னோட்டமாக முப்பது களில் எண்ணிப் பார்க்கும்போது, அப்பிரிவினை உருவாக்கிய எழுச்சியை நேரில் கண்டு அதில் கலந்து கரைந்தவரான வ.உ.சி. அந்நிகழ்ச்சி விடுதலை இயக்க வரலாற்றில் ஏற்படுத்திய மகத்தான மாற்றங்களை நினைவு கூர்தல் எளிது. அதனால்தான்,*

*‘தீய உடையோடு வந்த நன்மை’*

*என்று கூறமுடிந்தது. எளிய சொற்கள்; ஆனால் மிகப்பெரிய வரலாற்று உண்மையை உள்ளடக்கிய பெருஞ்சிறப்பு; மீண்டும் மீண்டும் நினைந்து மகிழத்தக்க உட்பொருளோடு கூடிய நயம். இவையெல்லாம் இந்த ஒற்றை வரியின் பின்னால் நின்று வ.உ.சி.யின் நடைச்சிறப்பை - வெளிப்பாட்டுத் திறனின் மேன்மையைப் பறைசாற்றுகின்றன.*

"கர்சன் ஆட்சியின் பயன் தேசிய ஒற்றுமையையும் கட்டுப் பாட்டையும் துரிதப்படுத்துகிற முழு இந்தியக் கிளர்ச்சி யொன்று உண்டானதேயாம்"[12]

*என்று வரலாற்றின் போக்கில் ஏற்பட்ட மிகப் பெரும் மாறுதலை - மக்கள் எழுச்சியை அதற்குரிய முழுமையான பொருளில் படிப்பவர் உணரும்படியாக, நகைச்சுவை*

இழையோட வெளிப்படுத்திய எழுத்தாற்றல் வ.உ.சி.யின் சிறப்பாகும்.

"தேசத்தில் புதிய உயிரும் புதிய ஊக்கமும் தோன்றியது"[13]

'தேசத்தில் புதிய உயிர் தோன்றியது' என்பது எவ்வளவு செறிவானது; அடர்த்தியானது. எப்படி வ.உ.சி. சொற்களைத் தெரிந்தெடுக்கிறார், எப்படி அவற்றை உயிரோட்டத்தோடு பயன்படுத்துகிறார் என்றெல்லாம் எண்ணியெண்ணி வியக்கு மாறு சொற்களைப் பயன்படுத்தும் திறன் அவரிடம் அமைந்துள்ளது.

சுதேச எழுச்சியின் விளைவாகத் திலகர் இந்திய அளவில் ஏற்றுக் கொள்ளப்பெற்ற தலைவராக வளர்ந்தார். அமிதவாதி களின் புதிய கட்சியின் வாமனத் தோற்றம் ஓங்கி வளர்ந்தது. திலகரின் செல்வாக்கும் புதிய கட்சியின் வளர்ச்சியும் மிதவாதி களிடையே ஏற்படுத்திய கலக்கத்தை வ.உ.சியின் வார்த்தைகளில் அறியலாம்

> ."இவையெல்லாம் மிதவாதிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தன. அவர்கள் காங்கிரஸ் அமிதவாதிகளால் பிடிக்கப்படக்கூடிய அபாயமான நிலைமையிலிருந்ததாக நினைத்தார்கள்; ஆதலால், அவர்கள் அமிதவாத அலையை அடக்குவதற்காக ஒரு பெரிய முயற்சி செய்தார்கள்." [14]

இதில் கவனத்தில் கொள்ள வேண்டியது வ.உ.சி. பயன்படுத்தியிருக்கும் 'அமிதவாத அலை' என்னும் சொல் லாட்சியாகும். 'இன்ன அலையின் காரணமாக இது நிகழ்ந்தது' என்று இன்றைய அரசியல் உலகில் கூறுவது பாமரமக்கள் முதல் இதழ்கள் வரை மிகவும் இயல்பான ஒன்றாக இருப்பதை நடைமுறை உணர்த்துகிறது. ஆனால், ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்று வழங்கும் அதே பொருளில் வ.உ.சி., 'அமிதவாத அலை' என்ற சொல்லை ஆண்டிருப்பது வியப்புக்குரியதாகும். அந்நாளில் அது அரசியல் சார்ந்த புதிய சொல்லாக்கமாக - வ.உ.சி.யின் ஆக்கமாக அமைந்து, வரலாற்றில் உயிர்ப்போடு பதிவாகியுள்ளது.

திலகரின் எண்ணங்களை எழுதும்போது, ஆழ நினைந்து தம்முடைய எழுத்துக்களில் திலகர் தக்கவாறு வெளிப்படுமாறு

எழுதும் வல்லமை - திலகரின் ஆளுமையைப் புலப்படுத்தும் திறமை வ.உ.சி.யிடம் இருந்தது.

திலகருடையதும் தம்முடையதுமான சமகால வரலாற்றை முழுமையான வரலாற்று உணர்வோடும் வாழ்க்கை வரலாற்றுத் தன்மை குன்றாமலும் 'இது ஒரு தேவையில்லாத செய்தி,' 'தொடர்ச்சி இதனால் தடைபடுகிறது' என்பன போன்ற எண்ணங்களோ, சோர்வோ படிப்பார் மனங்களில் எழா வண்ணம் சுவையோடும் விறுவிறுப்போடும் எழுதமுடிவது வ.உ.சி.யின் கட்டுரை வன்மையைக் காட்டுகிறது.

நாட்டின் அன்றைய பொதுவான சூழலோடு இயைந்து திலகரின் வாழ்க்கையும் எப்படி வளர்ந்தது, படிப்படியான மாற்றங்களைக் கண்டது, தனித்தன்மையோடு கூடிய திலகரின் தலைமையை இந்த நாடு எப்படிப் பெறமுடிந்தது, அதற்கான திலகரின் உழைப்பு, அந்த நிலையை அடைய அவர் மேற்கொண்ட முயற்சிகள், நிகழ்த்திய போராட்டங்கள், அடைந்த இன்னல்கள் - இவையெல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் படிப்பவர் மனங்களை ஈர்க்கும் விதமாகவும் வ.உ.சி.யால் சொல்லப்பெற்றுள்ளன - என்பதுதான் 'திலக மகரிஷி' என்னும் இந்த நெடிய கட்டுரையின் தனிச்சிறப்பாகும்.

விடுதலை இயக்க வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மெல்ல மெல்ல - படிப்படியாக உருவாகி வளர்ந்த தன்மையைத் திலகரின் வாழ்க்கை வரலாற்றின் ஊடே மிகவும் பொருத்த மாகவும், நேர்த்தியாகவும் விவரித்துள்ளார் வ.உ.சி. விடுதலை இயக்கத்தின் பல்வேறு படிநிலைகளை - போக்குகளை - திசைமாற்றங்களை இத்தொடரில் வ.உ.சி. மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

திலகரின் வரலாறு என்றாலும், அன்றைய இந்திய அரசியல், சமுதாயச் சூழலையும் தேவைக்கு ஏற்ப விளக்கும் - எடுத்துச் சொல்லும் பான்மை - சுவை கூடாமலும் குறையா மலும் தேவையான அளவு மட்டும் சொல்லப்பெறும் விதம் இவையெல்லாம் திலகர் வரலாற்றுத் தொடரின் சிறப்புகளாகக் குறிக்கத்தக்கன.

*திலகரின் ஆளுமையின் வீச்சு - எள்ளளவும் குறையாத வாறு அவருடைய கருத்துகளை எடுத்துரைக்கும் தன்மை - அன்றைய அரசியல் சூழல்பற்றியோ, திலகர் பற்றியோ, பிறிதோ - எதுவாக இருந்தாலும் அதுபற்றிய தம்முடைய கருத்தைக் கூறும்போது வெளிப்படும் தெளிவு - இவையெல்லாம் வ.உ.சி.யின் புலப்பாட்டுத் திறனுக்குச் சான்றுபகர்வன.*

*கோக்கலே மிதவாதத் தலைவர்; திலகரின் சீடரான வ.உ.சி.யோ தீவிரவாதி. கோக்கலேயைக் கடுமையாக எதிர்த்தவர். கோக்கலே மறைந்த அன்று புனாவில் இருந்தும் - திலகர் வற்புறுத்தியும் - இறுதி அஞ்சலிக்குச் செல்ல மறுத்தவர்.[15] இருந்தாலும் திலகர் வரலாற்றை எழுதும்போது பல இடங்களில் கோக்கலேயின் சிறப்புகளை மறவாமல், தயங்காமல் குறித்துள்ளார். சான்றுக்கு ஒன்று:*

"மிஸ்டர் கோக்கலே தலைவராயிருந்து நடத்திய காசிக் காங்கிரசுக்குத் திலகர் சென்றார். தலைவருடைய உபன்னி யாசம் மிகமிக ஊக்கத்தை அளிக்கக்கூடிய அக்காலத்து உபன்னியாசங்களில் ஒன்றாயிருந்தது. லார்டு கர்சனுடைய நிர்வாகத்தைக் காங்கிரஸ் தலைவர் காரமாகக் கண்டித்தது போல வேறு எவரும் கண்டித்ததில்லை.'' [16]

*வ.உ.சி. பயன்படுத்தியுள்ள தலைப்புகள் படிப்போரைக் கவர்ந்து மனத்தில் பதியும் வண்ணம் அமைந்துள்ளன. அவை அறியவும் மகிழவும் தக்கன. சான்றுக்குச் சில தலைப்புகள் கீழே தரப்பெற்றுள்ளன.*

*அதைரியமடைந்த மக்களின் உள்ளத்தில் ஆண்மையைப் புகுத்தின அருங்கிளர்ச்சி (24 . 9 . 33)*

*மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள் (8. 10. 33)*

*காங்கிரசின் துயிலைக் கலைத்த கர்சனின் ஆட்சி (11. 3 . 34)*

*அரசியல் தொடர்பான வ.உ.சி.யின் சொல்லாக்கங்களாக அரிய - அழகிய சொல்லாட்சிகள் தொடர் நெடுக இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றையேனும் குறித்தல் தகும்.*

*'இரவல் சுவிசேஷங்கள்' (16 . 7. 33)*

*'இராஜீயத் தற்கொலை' (11. 3 . 34)*

*'அமிதவாத அலை' (11 . 3 . 34)*

*கர்சனின் ஆட்சிபற்றிய காங்கிரசின் அறிக்கை, திலகரின் முதல் சிறைவாசத்தின்போது சுரேந்திரநாத் பானர்ஜி சிறையில் இருந்த திலகரின் பார்வைக்கு அனுப்பிய காங்கிரசின் தீர்மானம், திலகரின் விடுதலைக்கான மாக்ஸ் முல்லரின் முயற்சி, சூரத் காங்கிரசில் மேடையில் திலகரை அடிக்க முற்பட்டபோது உடனிருந்த கோக்கலே அதைத் தடுத்தது, சூரத் காங்கிரசில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பிறகு, திலகர் எழுதிக் கொடுத்த ஒப்பந்தம், சூரத் காங்கிரஸ் மாநாடு முடிந்த பிறகு, 'கேசரி' இதழில் திலகர் வெளியிட்ட கடிதம் - போன்ற மிகப் பலவாய குறிப்புகளைக் கொண்டதோர் வரலாற்று ஆவணமாகவும் திகழ்கிறது வ.உ.சி.யின் ' திலக மகரிஷியின் வரலாறு.'*

**குறிப்புகள் :**

1. Reminiscences of Lokamanya Tilak, Vol. III, ப. 158.
2. திலக மகரிஷியின் வரலாறு - இவ் ஆய்வாளரின் பார்வைக்குக் கிடைத்த பகுதிகளின் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. 28.5.1933 | 2. 11.6.1933 | 3. 2.7.1933 | 4. 16.7.1933 |
| 5. 30.7.1933 | 6. 24.9.1933 | 7. 8.10.1933 | 8. 12.11.1933 |
| 9. 11.3.1934 | 10. 6. 5.1934 | 11. 3.6.1934 | 12. 24.6.1934 |
| 13. 1.7.1934 | 14. 15.7.1934 | 15. 22.7.1934 | 16. 5.8.1934 |
| 17. 14.10.1934 | | | |

3. வீரகேசரி, 28.5.1933, பக்க எண் இல்லை.
4. மேலது, 28.5.1933, பக்க எண் இல்லை.
5. மேலது, 11.6.1933, ப.3.
6. மேலது,
7. மேலது, 8.10.1933, பக்க எண் இல்லை.
8. மேலது, 24.9.1933, பக்க எண் இல்லை.
9. மேலது, 11.3.1934, ப. 7.

10. வீரகேசரி, 11.3.1934, ப. 7.
11. மேலது.
12. மேலது.
13. மேலது.
14. மேலது.
15. Reminiscences of Lokamanya Tilak, Vol. III, ப. 160.
16. வீரகேசரி, 11.3.1934, ப.10.

❖ ❖ ❖

28-5-33 வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

# -: பாரத ஜோதி :-

## ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.


## இளமைப் பருவமும் சுதந்திர எழுச்சியும்.

## தாய் தந்தையரின் பிரிவும் மண வாழ்க்கையும்.

USE ONLY FOR BONA FIDE RESEARCH.

ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் (Pleader) எழுதியது.

(All Rights Reserved.)



ஸ்ரீ திலக மகரிஷி.



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

பிறப்பும் பெற்றோரும்.

கல்வி கற்றல்.

மாணவருக்கு பரீக்ஷை எழுத வசதி.

11—6—33 வீரகேசரி, ஞாயிற்றுக்

தேசிய சித்திரம்.

# -: பாரத ஜோதி :-

# ஸ்ரீ திலகமகரிஷியின் வரலாறு.

## பொதுஜனத் தொண்டிற் புகுதல்.

### கோலாப்பூர் கேஸ்ம் சிறைத் தண்டனையும்.

(ஸ்ரீமான் [illegible] எழுதியது)

ONLY FOR BONA FIDE RESEARCH.

(All Rights Reserved.)

(முன்தொடர்ச்சி)

பொதுஜனத் தொண்டில் பிரவேசித்தல்.

[illegible]




ஸ்ரீ திலகர்.

[illegible]

கோலாப்பூர் கேஸ்.

[illegible]



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை.

[illegible]

2—7—33 வீரகேசரி, ஞாயிற்றுக்

# ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு

## தேசிய உணர்ச்சியை வேரறுத்த விதேசிக் கல்வி முறையை மாற்றியமைக்கத் தீவிர முயற்சி.

### தக்ஷிணக் கல்விச்சங்க ஸ்தாபகமும் தன்னலத்தியாகமும்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் (Pleader) எழுதியது.)

USE ONLY FOR BONA FIDE RESEARCH.

(All Rights Reserved.)

(முன் தொடர்ச்சி)


கல்வி சம்பந்தமான வேலை.

[illegible]



ஸ்ரீ திலகர்.

[illegible]



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை.

(தொடரும்)

## மோகக் கடலில் மூழ்கிக் கிடந்த சீன மன்னர்.

[illegible]

வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

# பாரத ஜோதி-ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

## அந்நிய நாகரீகத்திற்கு அடுத்த ஆசாரச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு.

சமூகவிஷய பழக்கவழக்கங்களில் சர்க்கார் தலையிடுவதை மறுத்து ஆலோசித்தல்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved.)

(முன் தொடர்ச்சி)



ஸ்ரீமான் ...



ஸ்ரீ திலகர்.



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

# பாரிஸ் மாதின் சோர வாழ்வு.

(மேல் தொடர்ச்சி)

ONLY FOR ... RESEARCH

ழக்கிழமை. 3

ஜீவிய சரித்திரம்.

# பாரத ஜோதி-ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

## இந்தியத் தேசிய மகாசபையின் ஆரம்ப ஊழல்களைத் திருத்த தீவிர முயற்சி.

### பம்பாய் சட்டசபைக்குள் பலத்த ராஜீயத் தர்க்கம்.

### அரசாங்கத்தின் துன்புறுத்தலுக்கு இலக்கான காரணம்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved.)

ARCH

(முன் தொடர்ச்சி)

இராஜீய விஷயங்களில் பிரவேசித்தல்.

தேசீயக் கல்விச் சங்கத்தில் தாம் அங்கத்தினராயிருந்தபோதிலும் இராஜீய [illegible] வேறு துறைகளில் வேலை செய்வதற்கு வாய்ப்பான நேரம் இருக்கத்தான் செய்தது. வெறும் முழு வேதாந்திகளான [illegible] சமூகச் சீர்திருத்தங்களின் இயக்கங்களிலேயே வெறுப்புள்ள அவர் [illegible] காணப்படும் [illegible] ஓர் ஆரம்ப சீர்திருத்தக்காரராயிருக்க முடியவில்லை. இதன் மூலமாக, இராஜீய விஷயங்கள் அவருடைய இயக்கத்தை [illegible] மிக மிகப்

இவ்வாறாக அவர்கள் முக்கியமான நிர்வாகங்களில் அவர் பிரவேசிக்கவில்லையெனினும்; உண்மையில் அவருடைய வழியில் சமூகங்களைத் [illegible] உண்டு பண்ணப்பட்டன. அவர் தம்மைப் பிரபலப்படுத்திக்கொள்ள ஆசைப்படவில்லை; அவர் கீர்த்தியையும் கோரவில்லை. அவர் உண்மையான வேலை செய்வதற்கு ஆசை கொண்டிருந்தார்; அவர் [illegible] மற்ற அனைவரும் [illegible] வேலை செய்து வந்தார். 1895-ம் வருஷத்தில் ஆரம்பச் சீர்திருத்தக் கட்டத்தை இந்திய தேசிய மகாசபை பந்தலில் நடத்தலாகாதா? நடத்தக் கூடாதா? என்ற ஒரு வாதம் எழுந்தது. சீர்திருத்தக்காரர்கள் அக்கட்டத்தை அப்பந்தலிலே நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினர்கள்; வைதீகக்கட்சியினர் அதை அப்பந்தலில் நடத்தக்கூடாதென்றனர். அக்கட்டத்தை அப்பந்தலில் நடத்தினால் அம்மகாசபைக்குப் பண உதவி செய்வதற்கு ஒருவரும் [illegible] சீர்திருத்தக்காரர்கள் சொல்லத் தலைப்பட்டார்கள்; வைதீகர்களும் அவ்வாறே அக்கட்டத்தை அப்பந்தலில் நடத்தக்கூடாதென்று பிடிவாதஞ் செய்தார்கள். அதன் முடிவு மகாசபையிலும் வேறே ஒரு பெரும் பிளவு ஏற்பட்டது. திலகர் [illegible] தெளிவாகது. அந்தச் சமயம் மகாசபை [illegible] அதன் வரவேற்பு சபையார் [illegible] வேண்டுமென்றார். [illegible] பல [illegible] பட்டன. திலகர் [illegible] பிருக்கிறதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். அவர் பூனா நகரத்தில் [illegible]

வதற்குச் சாமர்த்தியமாக முயற்சி செய்தார். ஆரம்பச் சீர்திருத்தக் கட்டத்தை மகாசபையின் பந்தலில் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை மாற்றவில்லையாகும், தாம் மகாசபைக்கும் தலைமை வகிக்கமுடியாதென்று [illegible] சொன்னார். திலகரின் இந்தத் தனிமையான செய்கையானது விரும்பத்தகாத வாதங்களையெல்லாம் முடிவு செய்துவிட்டது. எல்லோரும் [illegible] மூலமாக மகாசபையானது விசேஷ வெற்றிகரமாக நடந்தேறியது. "இந்தியாவின் இவ்வெற்றியான வேலை" [illegible] கேட்கப்பட்டது; எல்லாக் கட்சியினருடைய நல்லபெயரும் பெற்றது.



ஸ்ரீ திலகர்



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

வீரகேசரி ஞாயிறு தோறும் ஞாயிற்றுக்கிழமை.

தேசிய சரித்திரம்.

# பாரத ஜோதி - ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

## அதைரியமடைந்த மக்களின் உள்ளத்தில் ஆண்மையைப் புகுத்தின அருங்கிளர்ச்சி.

### வெள்ளை விஷமிகள் சிருட்டித்துவிட்ட இராஜத்துரோக வழக்கில் பதினெட்டுமாதக் கடுங்காவல் தண்டனை.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது)

(All Rights Reserved.)

USE ONLY FOR BONA ... RESEARCH.

(முன் தொடர்ச்சி)

1896—97 ம் வருஷத்தும் ...





# பாரதஜோதி-ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]

**8—10—33**

ஜீவிய சரித்திரம்.

# திலக மகரிஷியின் ஜீவிய வரலாறு.

## மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள்.

### மிதவாதிகள் தோற்றுவித்த பிளவு.

### காங்கிரஸ்களில் திலகரின் கர்ஜனை.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது)

(All Rights Reserved.)

(முன் தொடர்ச்சி)

சிவாஜி, கணபதி உற்சவங்கள்.

திலகர் முறையே 1893-ம் வருஷத்திலும் 1895-ம் வருஷத்திலும் ஏற்படுத்திய கணபதி உற்சவமும், சிவாஜி உற்சவமும், மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே தேசாபிமானத்தையும், தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கின. ஆசாரச் சீர்திருத்தக்காரர்களின் நய செல்வாக்கைத் தொலைப்பதற்காகத் திலகர் இந்த உற்சவங்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும். இது முன்கூறியபடியே திலகர் தமது உள்ளுணர்ச்சியை ஒளித்துவைத்திருப்பதைக் கொண்டார்; ஆதலால் அவர் ஆசாரச் சீர்திருத்தம் அன்று இராஜீய விஷயங்கள் சம்பந்தமான தேசிய இயக்கம் ஒழிந்துபோகக் கூடாதென்ற ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டுமென்று விரும்பினார். இந்த நோக்கத்துடனேதான் அவர் கணபதி உற்சவத்தை ஆரம்பித்தார். இந்த உற்சவம் இன்றளவில் மகாராஷ்டிர தேசம் முழுவதிலும் மிக ஆடம்பரத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. இந்த உற்சவம் பல வகுப்பினர்களையும் பொது ஜனங்களையும் ஒன்றுபடுத்துகின்றது; பல பிரிவுபட்ட ஜனங்களிடையே ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கின்றது. மிதவாதிகள் விளைவிக்கும் தடைகளைப் போரிடுவதில், சில வகுப்புக்களுக்குள் இந்த உற்சவம் ஒரு தேசிய ஸ்தாபனமாய்விட்டது. சிவாஜி உற்சவமும் அதே மாதிரியான நோக்கத்துடனே உண்டுபண்ணப்பட்டது; அதே மாதிரியாக ஜனங்களை ஒற்றுமைப்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருந்தது. மகாராஷ்டிர தேசத்துப் பல வகுப்பினருள்ளும் பல மதத்தினருள்ளும் சிவாஜியின் பெயர் பேரான தேசாபிமானத்தையும் தேசிய உணர்ச்சியையும் உண்டுபண்ணுகின்றது; இராஜீய விடுதலைக் கொள்கைக்கும் பிரதிநிதியாய் விளங்குகின்றது. ஆதலால் சிவாஜி உற்சவம் உயர்ந்தோரையும், தாழ்ந்தோரையும், வலியோரையும், எளியோரையும், எல்லா வகுப்பு ஜனங்களையும் ஒன்றுபடுத்துகின்றது. இந்த உற்சவங்களின் பயனாக மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே வளருகின்ற ஒற்றுமையும் சுயேச்சைத்தன்மையும் அதிகார வர்க்கத்தினருக்கு ஒரு பெரிய கலக்கத்தை உண்டுபண்ணின; ஆதலால் அவர் இந்த இயக்கத்தை மிக ஜாக்கிரதையாகக் கவனிக்கத் தொடங்கினர். அதிகார வர்க்கத்தாருக்கும் பயந்தவர்கள் திலகருடனும் சேர்ந்துழைக்கப் பயமடைந்தார்கள்; அவர்கள் தம்மை மிதவாதிகளென்றும், திலகர் கோஷ்டியினரை அமிதவாதிகளென்றும் சொல்லலானார்கள். இந்தச் சமயத்தில் தமிழர்களுக்கும் முகமதியர்களுக்கும் பல இடங்களில் கலகங்கள் நடந்தன; இக்கலகங்களுக்குக் காரணம் திலகர் சம்பந்தமுடைய பசுப்பாதுகாப்புச் சங்கங்களின் உற்பத்தியேயென்று ஆங்கிலோ-இந்திய பத்திரிகைகள் சொல்லிவந்தன; ஆனால், திலகர் அதற்குக் காரணம் கவர்ன்மெண்டார் கைக்கொண்ட "பிரித்தாளும்" கொள்கையே என்றார். ஸர். பி. எம். மேத்தா முதலிய மற்றைய மிதவாதிகள் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள் சொன்னதையே நம்பினார்கள். இதன் முடிவாகத் திலகருக்கும் மிதவாதிகளுக்கும் ஏற்பட்டிருந்த வேற்றுமையானது வளர்ச்சியுற்றது. அதனுடன் காங்கிரஸ் பற்றிய ஆசாரச் சீர்திருத்த மகாசபை நடத்துவதைப் பற்றிய 1895ம் வருஷத்தில் விவாதம் ஏற்பட்டது. மிதவாதிகள் ஆசாரச் சீர்திருத்த மகாசபையைக் காங்கிரஸ் நடைபெறும் பந்தலிலேயே நடத்த விரும்பினார்கள். திலகர் அதை எதிர்த்தார். மிதவாதக் கக்ஷியார் முழுத் தோல்வியடையும்படியாகத் திலகருக்குச் சர்வஜன சபையில் பெரும்பாலாருடைய வோட்டுகள் கிடைத்தன. சமாதானப் பேச்சு நடந்தது. சமாதானம் செய்வதற்காக ஸ்ரீ கோகலே மிகப் பிரயாசைப்பட்டார். ஆனால் சமாதானம் முடியவில்லை. திலகருடன் சேர்ந்துழைக்க முடியாதவர்களாய், அவருடைய எதிரிகள் தேசஜன சபை என்ற ஒரு சங்கத்தைப் புதிதாக உண்டுபண்ணுவதைத் தீர்மானித்தார்கள். அது 1896-ம் வருஷம் நவம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. மிதவாதக் கக்ஷியின் ஜனனம் என்று சொல்லும்படியான இந்தச் சம்பவம் இந்திய இராஜீயவாதிகளுக்குள் ஒரு பிளவை உண்டுபண்ணியது. இப்பிளவானது ஒரு கக்ஷிக்காரரை மற்றொரு கக்ஷிக்காரருக்கு விரோதமாக உபயோகிக்கக் கவர்ன்மெண்டாருக்கு உதவியாயிருந்தது. இக்கக்ஷி வேற்றுமைகளின் அதிப்பிரதானத்தைத் திலகர் நம்மைக் காட்டிலும் அதிகமாக உணர்ந்தவர். ஆனால் அவருடைய முயற்சிகள் யாதொரு பயனையும் தரவில்லை. இராஜீய வாழ்க்கை ஒழுங்கில்லாமையிலும், ஒற்றுமையின்மையும், பிளவும் ஏற்பட்டன. கக்ஷித் தலைவர்களின் கோஷ்டித்தன்மையும் உறுதியின்மையையும் அலட்சியத்தையும் கண்டு வெறுப்படைந்த திலகர் பயன்படாத சண்டையைத் தொட...



ஸ்ரீ திலக மகரிஷி.



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

தேசீய சரித்திரம்.

# பாரத ஜோதி ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

## விரோதிகளின் ஏவுதலால் விதவைராணி தொடர்ந்த மரணசாஸன வழக்கு.

### இந்திய நீதிஸ்தலங்களில் ஏற்பட்ட பிரதிகூலங்களும் பிரிவிகவுன்சிலில் கிடைத்த இறுதி வெற்றியும்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது)

(All Rights Reserved.)

(முன் தொடர்ச்சி)

1900 ம் வருடம் முதல் 1905 ம் வருடம் வரையில் ... [illegible]



... திலகர்.



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

... 1903 ம் ... 1901 ம் ... 1897 ம் வருடம் ... 24 ம் தேதி ... 18 மாதம் ... 1000 ரூபாய் ... 1904 ம் வருடம் ... [illegible]

வெள்ளை... வெளிட்...

இந்தியப் ... இல்வாழ்க்...

காதல் மணங்கள்

கர்னாடக விவாகங்...

[illegible]

இந்தியரின் விவாகங்கள்.

[illegible]

பல மனைவிகள் கொள்வதின் நோக்கம்.

[illegible]

11—3—34 வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

# காங்கிரஸின் துயிலைக் கலைத்த கர்

## திலகமகரிஷி தோற்றுவித்த புதிய



ஸ்ரீ திலக மகரிஷி.

### கல்கத்தா மகாநாட்டில் கர்ச்சனை.

### வங்காளப் பிரிவினையால் உயிர்பெற்ற விதேசி பகிஷ்கார, சுதேசி இயக்கம்.

### தாதாபாய் நௌரோஜியின் தளர்வற்ற அபிமானம்.


(வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் (Pleader) எழுதியது.)

(All Rights Reserved.)



தாதாபாய் நௌரோஜி.

## இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையம்.



**வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.**

# காங்கிரஸின் துயிலைக் கலைத்த கர்ஸன் ஆட்சி.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]

வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

பாரதிஜோதி ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு.

# சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடு.

## தலைவரைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தேசிய-மிதவாதக் கட்சிகளின் தகராறு.

### ஸ்ரீ திலகரின் நன்முயற்சிக்கு எதிரான சூழ்ச்சி.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved)

(முன் தொடர்ச்சி)

சூரத்துக் கலகம்.

[illegible]



[illegible]

[illegible]



3—6—34 வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை. 13

# சூரத் காங்கிரஸ் மகா! நாட்டில் நிகழ்ந்த சூறாவளி.

## பிரசங்கப் பந்தலில் பாதரக்ஷைப் பிரயோகம்.



ஸ்ரீ திலக மகரிஷி

## தேசிய வாதிகள்'ர் பேச்சுத் தடையின் பயன்


### சுயநல மிதவாதிகள் சூழ்ச்சிக்குச் சூடு.

### ஸ்ரீ திலகர் நடந்ததை நதினையர்து செய்த சாகஸ முயற்சி.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(AlAll Rights Reserved)

[illegible]




[illegible]

(முன் தொடர்ச்சி)

[illegible]

பா. க. திலகர்




[illegible]

வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

ஸ்ரீ திலக மகரிஷியின் ஜீவிய சரித்திரம்.

# பிரிட்டனின் ஆபத்திற்கு உதவிய பிரிய நண்பர்.

## மகாயுத்த காலத்தில் இங்கிலாந்துக்குப் பலம் தேடப் பாடுபட்ட இந்திய வீரர்.

### ஸ்ரீ திலக மகரிஷியின் மகத்தான மனோபாவம்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved)

மகாயுத்த காலத்தில் இங்கிலாந்துக்கு உதவி புரிவதற்காக ஸ்ரீ திலகர் மகத்தான வேலைகளைச் செய்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் சம்பந்தத்திற்கும் அவர் எப்பொழுதும் பிரியமுள்ளவராகவேயிருந்தார். இந்தியாவின் இராஜ்ய விதிகள் பெரிய பிரிட்டனின் இராஜ்ய விதிகளுடன் பிரிக்கமுடியாதவிதத்தில் இணைக்கப்பட்டிருக்கிறதாக அவர் கண்டார். இது காரணமாகவே இங்கிலாந்து வெற்றி பெற வேண்டுமென்று நினைத்தார். [illegible] இந்திய அரசாங்கத்தை அவர் [illegible] ஆச்சரியமன்று. இந்திய அரசாங்கம் யுத்தத்திற்கு 6000 பேர்கள் போதுமானது என்று விளம்பரம் செய்தது; திலகர் 60 [illegible] வீரர்களைச் சேர்த்துக் கொடுப்பதாக உறுதி கூறினார். ஆனால் அவருடைய வார்த்தை இந்திய அரசாங்கத்தின் செவிகளில் ஏறவேயில்லை.

[illegible]



ஸ்ரீ திலக மகரிஷி.

[illegible]

மேனட்

[illegible] 16 வருடம்

[illegible]

[illegible] 15 [illegible]

[illegible]

1—7—34 வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை. 7

# சுயாட்சிக் கிளர்ச்சியின் தாதையர்க்கு எதிரான சூழ்ச்சி

## ஸ்ரீ திலகரின் மீது தொடர்ந்த வழக்குத் தோல்வி.

## முஸ்லீம் மகா ஜனங்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற சுயாட்சித் திட்டம்

(All Rights Reserved)



ஸ்ரீ திலக மகரிஷி.



ஸ்ரீமதி அனிபெஸண்ட் அம்மையார்.



பண்டிட் மாளவியா.



வில்ஸன் பிரபு.

ஞாயிறுக்கிழமை.

ஸ்ரீ திலகர் மகரிஷியின் ஜீவிய வரலாறு

# ஸ்ரீதிலகரை வசப்படுத்த முயற்சித்த சீமைமந்திரி.

## மாண்டேகு—செம்ஸ் போர்ட்—திலகர் அரசியல் சீர்திருத்தச் சம்பாஷணை.

அனிபெஸண்ட் அம்மையார் அவைத்தலைமைவகித்த அமிர்தசரஸ் காங்கிரஸ் மகாநாட்டின் நிகழ்ச்சி.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved)

USE ONLY FO... RESEARCH.



ஸ்ரீ திலகமகரிஷி



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை

...றுக்கிழமை. 15

# ஸ்ரீ திலகரை வசப்படுத்த முயற்சித்த சீமை மந்திரி

[illegible]

22—7—34

ஸ்ரீ திலகர் மகரிஷியின் ஜீவிய சரித்திரம்

# ஸ்ரீ திலகருக்கு பம்பாய் சர்க்காரின் வாய்ப்பூட்டு.

## மிதவாதிகளின் மதியற்ற முயற்சிகள்.

### விசேஷக் காங்கிரஸில் மிதவாதிகளை மடக்கிய திலகரின் விநயமொழி.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved

அரசியல் சீர்திருத்தம்.

கல்கத்தா காங்கிரஸ் நடந்து முடிந்தவுடன், பிரிட்டிஷ் ஜனங்களுக்கு இந்தியாவின் தேவைகளைப்பற்றியும் கோரிக்கைகளைப்பற்றியும் விளக்கிச் சொல்லுவதற்காக ஒரு தூதுக் கோஷ்டியை இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் திலகர் பயணம் செய்தார். அந்தக் கோஷ்டியில் திலகரும், ஸ்ரீ பெபினச் சந்திரபாலரும், [illegible] ஸ்ரீ ஜீ. எஸ். கபர்தேயும், வேறு சிலரும் இருந்தனர். அந்தக் கோஷ்டியார் கொழும்புவரையில் சென்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அநுமதிச் சீட்டுகள் திடீரென்று ரத்துச் செய்யப்பட்டன. அவ்வாறு [illegible] செய்யவேண்டுமென்று தங்களும் சரியாலோசனை செய்தார்கள். ஆதலால் அமிதவாதிகளின் எதிர்ப்பின்றிச் 'சீர்திருத்தங்களைக் காப்பாற்றவேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் மிதவாத சங்கங்கள் [illegible]; தங்கள் [illegible] முன்னர் கிட்டும் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்காக மிதவாதிகளின் கொள்கைகளை [illegible] எல்லாம் சேர்த்து ஒரு மகாநாடு கூட்டுவதற்காக முயற்சிகள் செய்யப்பட்டன. எதிர்க்கும் இயற்கையுள்ள அமிதவாதிகளுக்கும் தங்களையே ஏமாற்றப்பட்டிருக்கிற மிதவாதிகளுக்கும் விரோதமாகத் திலகர் [illegible] வேலை செய்யவேண்டியதாயிருந்தது. அவர் பம்பாய் கவர்ன்மெண்டின் உத்தரவொன்றால் வாய்ப்பூட்டு இடப்படாமல் இருந்தால் இந்த இரு தரத்து இராஜீய வாதிகளுள்ளும் ஏற்பட்டிருந்த தப்பபிப்பிராயத்தை அவர் மாற்றியிருக்கக்கூடும். ஒரு விசேஷ காங்கிரஸைப் பம்பாயில் கூட்டவேண்டுமென்று ஒரு பிரேரேபணை செய்யப்பட்டது. மிதவாதிகள் அந்த காங்கிரஸிலிருந்து விலகிக்கொள்வதாகவும், [illegible] வேறொரு காங்கிரஸ் நடத்துவதாகவும் தீர்மானித்தார்கள். [illegible] முக்கியமாக மிதவாதப் பத்திரிகைகளாகிய [illegible] செய்யவேண்டும் [illegible] இந்தியாவின் முயற்சியோடும் [illegible] முயற்சியோடும் [illegible] அச்சமயத்தில் செய்த தேசாபிமான மற்ற செயலுக்காக இப்போது வெட்கப்படவேண்டும். மிதவாதிகளுடைய இவ்விலக்கம் ஏற்பட்ட போதிலும் விசேஷக் காங்கிரஸ் மிக்க வெற்றியோடு முடிந்தது. மிதவாதிகளின் மனக்கலக்கம் [illegible]



[illegible] எங்களுடையவும் அதிர்ஷ்டவசமாக, நல்ல [illegible] பொருந்திய ஒரு தந்தாமோதை ஒரு [illegible] உங்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம். அதில் ஒரு கவியாசின் ஞானமும், மற்றொரு கட்டியாரின் திறமையும், மூன்றாவது கட்டியாரின் அசாரமும் சேர்ந்திருக்கின்றன. [illegible] அதிக்கை மிக அழகிய சாதுரியமுள்ள, இராதத்திரம் வாய்ந்த ஒரு தந்தாமோதம் [illegible] ரூபாயில் கட்டுறுத்தான் கேட்டோம். அம்மதிக்கை மொதப்பாட்டு ரூபாயில் தர அனுக்கொடுக்கிறது. இதும், அந்த பட்டனும் [illegible] அன்னதிக்கை சொல்லுகிறது. அன்னதிக்கையின்



வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

# பாரத மக்களைப் பழித்து நூலெழுதின பண்டிதமணி

## மகாராஷ்டிர மடங்கல் திலக மகரிஷி தொடர்ந்த அவதூறு வழக்கு.

### பிரிட்டிஷ் நீதிஸ்தலத்தில் வாதிக்கு பாதகமாகக் கூறப்பட்ட தீர்ப்பு.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது.)

(All Rights Reserved)

இங்கிலாந்தில் சிரோலுக்கு ..... விரோதமான கேஸ்.



ஸர் ஜான் ஸைமன்.



ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை.



திலக மகரிஷி.

விஞ்ஞான விருத்தி

இந்தியரின் ..... சர் ராமனின் .....

இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி ..... 1876ம் வருஷத்தில் .....

இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி ஸங்கம்

ஸர் சி. வி. ராமன்

வீரகேசரி, ஞாயிற்றுக்கிழமை.

# பிரிட்டனில் இந்தியாவின் சுயாட்சிப் பிரசாரம்.

## பொதுக் கூட்டங்களில் மகாராஷ்டிர மடங்கலின் உணர்ச்சி மிகுந்த உரைகள்.

### திலக மகரிஷி லண்டனில் தாய் நாட்டிற்குப் புரிந்த சேவைகள்.

(ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை (Pleader) அவர்கள் எழுதியது)

(All Rights Reserved)

(முன் தொடர்ச்சி)

[illegible]




ஸ்ரீ திலக மகரிஷி.


[illegible]

## விகட வ

[illegible]




முனைவர் மா.ரா. அரசு சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையில் பணியாற்றியவர். இவர் இதழியல், வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தந்தையாரின் நினைவாக அவர் பெயரில் டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் என்ற அமைப்பை 1983 முதல் நடத்தி வருபவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை வானொலி நிலையம், பச்சையப்பன் கல்லூரி முதலியவற்றுடன் இணைந்து பதினொரு இதழியல் கருத்தரங்குகள் நடத்தியுள்ளன (1997–1999, 2001). அவற்றுள், தமிழில் இதழியல் என்னும் தலைப்பில் அமைந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.




**டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்**
G-4, போகன்வில்லா குடியிருப்பு, K பிளாக், ஆறாம் நிழற்சாலை,
அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.